REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்


# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 17 யூன் - யூலை 2010 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 131

# ஐ.நா. தலையீடு!



கடந்த வருடம் இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் இழைக்கப் பட்டனவா என்பதைக் கண்டறிவதற்கான செயற்பாட்டில் ஐ.நா. வின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இறங்கியுள்ளார். அதன் ஆரம்பக் கட்டமாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக இந்தனோசியா, தென் ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுக ளைச் சேர்ந்த மூன்று உயர் மட்ட முக்கியஸ்தர்களை ஒரு சபையாக அறிவித்துள்ளார். இதன் மூலம் இலங்கை அரசாங் கத்திற்கும் ஐ.நா. விற்கு மிடையில் இருந்து வந்த உரசல் போக்கு இப்போது மோதல் நிலையாக மாறி இருக்கிறது. இதன் பின்னணி அமெரிக்க மேற்குலக மேலாதிக்க சக்திகளின் காய் நகர்த்தல்களுக்கு அப்பால் எதுவும் இல்லை என்பதே உண்மை யாக உள்ளது.

இந்நிலையில் ஐ.நா. செயலாளர் நாயகம் எடுத்துள்ள நடவடிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அரசாங்கத்தையும் ஆத்திரமடைய வைத்திருக்கிறது. இச் செயல் இலங்கையின் இறைமை சுதந்திரம் மீதான தலையீடு என உச்சக் குரலில் பேச வைத்திருக்கிறது. "நாங்கள் எங்கள் நாட்டு விவகாரங்களில் எவ்வாறும் நடந்து கொள்வோம், நீங்கள் யாரும் அதில் தலையிடத் தேவை இல்லை" இவ்வாறு அரசாங்க உயர் மட்டங்களிலும் அதற்கு அப்பாலும் பேரின வாத அகங்காரம் கலந்த அதிகாரத் தொனியில் பேசப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

அதே வேளை ஐ.நா.சபை என்னும் உலக நிறுவனம் அதன் அங்கத்துவ நாடுகளில் நடப்பவை பற்றி கேள்விகள் எழுப்பவும் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு உரி மையும் கடப்பாடும் கொண்டது என அதன் உயர் அதிகாரிகள் கருத்துக் கூறி வருகின்றனர். அதற்கான ஐ.நா. ஒப்பந்தங்களில் நாடுகள் ஒப்பமிட்டடுள்ளதையும் அவ்வாறே இலங்கையும் ஒப்ப மிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். அந்த வகையில் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்ற ங்களையும் மனித உரிமை மீறல்களையும் கண்டறிய வேண் டும் என வற்புறுத்தப்படுகிறது.

இவ் இரு போக்குகளின் பின்னால் மறைந்திருக்கும் உண்மை களை நாம் காண்பது மிக முக்கியமானதாகும். நடந்து முடிந்த இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் எதுவும் இடம் பெறவே இல்லை என அரசாங்கம் மறைக்க முற்படுவது முழுப் பூசனிக் காயை இலைச் சோற்றில் மறைக்க எடுக்கும் முயற்சியாகும். கடந்த முப்பது வருட யுத்தத்தில் சுமார் இரண்டரை லட்சம் வரையிலான தமிழர்களும் குறைந்தளவிலான முஸ்லீம் சிங்கள மலையகத் தமிழர்களும் மாண்டு போயினர். குறிப்பாக கடந்த வருட வன்னி இறுதி யுத்த த்தின் போது சுமார் நாற்பதினாயிரம் பேர் வரை மடிந்தி ருக்கலாம் என்றே நம்பப்படுகிறது. இத்தனைக்கும் நியாயமான பொறுப்பான கடப்பாடுடைய நீதி விசார னை எதுவும் இடம் பெறவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஐ.நா. வின் தலையீட்டு முயற்சி என்ற நிலை வந்த போதே ஜனாதிபதி மகிந்த ராஜாபக்ஷ மீளிணைக்கத்திற்கான சுயா தீன ஆணைக் குழுவை நியமித்துள்ளார். இது கடந்த கால ஒரு பக்க சார்புடையதும் செயலற்ற துமான பல ஆணைக்கு ழுக்க ளில் ஒன்றாகவே இருக்கும் என்பது எதிர் பார்க்கக் கூடிய தேயாகும் இதற்கும் அப் பால் இவ் ஆணைக்குழுவின் செயற்பாட்டு அடிப்படையில் போர்க்குற்றங்களோ மனித உரிமை மீறல்களோ கண்டு பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அர சாங்கம் உளச்சுத்தியோடு முன் வந்து·


2 ஆம் பக்கம் →

## மா சீனி பாண் விலையேற்றம்
## உழைக்கும் மக்கள் விரக்தி !

மகிந்த சிந்தனை அரசாங்கம் மா சீனி பாண் என்பனவற்றின் விலைகளை அதிகரித்துள்ளது. எற்கனவே பால்மா எரிவாயு போன்றவற்றின் விலைகளையும் அதிகரித்தது. இவை வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக நடந்தவை அதற்குப் பிறகு எவை விலை ஏறுமோவென மக்கள் அஞ்சியவாறு உள்ளனர். வானத்தை நோக்கி வேகமாக உயர்ந்து செல்வது போன்று ஏறும் விலை உயர்வுகளால் வசதி வாய்ப்பு பணம் பொருள் படைத்தோருக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. அன்றாட உணவாக அரிசி சீனி மா பாண் பால்மா என்பனவற்றைப் பயன்படுத்தும் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் அனைத்து மக்களே பெரும் பாதிப்பைப் பெற்று நிற்கின்றனர். இது பற்றி மேட்டுக்குடி உயர்வர்க்க ஆட்சியாளர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் அக்கறை கிடையாது. அவ்வாறே தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கவலை கிடையாது. பாராளுமன்றச் சம்பளம், மாதிவெல வீடுகள், மற்றும் சௌக்கியங்கள், வரி இல்லா சொகுசு வாகனங்கள், வெளிநாட்டுப் பயணங்கள், இவற்றின் அனுபவிப்புகள் மத்தியிலே இடையிடையே அறிக்கைகள். பாராளுமன்றத்தில் தொழிளார்கள் விவசாயிகள் மற்றும் உழைப்போருக்காக யார் குரல் கொடுப்பா ர்கள்? கொடுத்தால் மட்டும் போதுமா? மக்களே சிந்திக்க வேண் டியவர்கள்.

# மலையக மக்களின் பிரச்சினைகள் வளர்கின்றன

மலையக மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் தொட்டு அடிப்படைப் பிரச்சினைகள் வரை தொடர்கின்றன. அவை நாளாந்தம் வளர்ந்து வருகின்றனவே தவிரத் தீர்வுகள் எதுவும் காணப்படவில்லை. ஆனால் அன்று எம் மக்களின் உழைப்பைச் சுரண்டி கொள்ளை அடித்துச் சென்ற பிரித்தானிய கொலனித் துவவாதிகள் போன்றே இன்றும் இருபத்திரண்டு தனியார் கம்பனி களும் அரசாங்க நிறுவனங்களும் உழைப்பைச் சுரண்டிக் கொள் ளையிட்டு வருகின்றன. இலங்கையில் ஆகக் குறைந்த நாட் சம் பளம் பெறும் தொழிலாளர்களாகவும் ஆகக் குறைந்த வாழ்க் கைத் தரம் கொண்ட மக்களாகவும் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு தளங்களில் மிகப் பின்தங்கியவர்களாகவும் பாராளு மன்ற அரசியல்வாதிகளின் ஏமாற்றுக்குப் பலியாகிறவர்களாகவும் மலையக மக்கள் இருந்து வருகிறார்கள் என்பது மனவேதனை தரும் உண்மையாகவே காணப்படுகின்றது.







சம்பள உயர்வு கிடை யாது. அப்படிக் கிடைப்ப தாயின் ஒரு சில ரூபாய் கள் மட்டுமே. பிரதான தொழிற்சங்கங்களும் கம்பனி முதலாளிமார் சம் மேளனமும் தீர்மானிக் கும் குறைந்த சம்பளத் தை இரண்டு வருடங்களு க்கு எவ்வித மறுப்பும் இன் றிப் பெற வேண்டிய நிர்ப்ப ந்தம் பின்பு இரண்டு வருட முடிவில் தமது வாழ்க் கைச் செலவுக்கு ஏற்ற சம் பள உயர்வை தொழிலா ளர்கள் முன்வைப்பார்கள். அவ்வேளை பிரதான தொழிற்சங்கத் தலைமை கள் தமது நாடகத்தை ஆட ஆரம்பிப்பார்கள். தொழிலாளர்கள் கேட்கும் சம்பளத்தைப் பெறப் போராடுவதாகக் கூறி அறிக்கைகள் வெளியிட்டுக் கூட்டங்கள் போடுவார்கள். தொழிலாளர்கள் முன்னெடுக்கும் வேலை நிறுத் தங்களில் பங்கும் கொள்வார்கள். கொஞ்ச நாட்கள் செல்லும் வரை விட்டுப் பிடித்து இறுதியில் முதலாளிமார் சம்மேள னத்துடன் திரைமறைவில் தமக்குரிய பேரத்தையும் பேச்சுவார்த்தை மேசையில் தொழி லாளர்களுக் குரிய ஒருசில ரூபாய்களைப் பற்றியும் தீர்மானிப் பார்கள். தொழிலாளர்களுக்காக ஏதேதோ வெல் லாம் பேசி நடித்து அறிக்கைகள் விட்டுக் கொள்வா ர்கள். இறுதிக் காட்சி, கேட்ட சம்பள உயர்வுத் தொகை தொலைக்கப்பட்டு அற்ப உயர்வு வழங் கப்படும். ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு அப்ப ட்டமான காட்டிக் கொடுப்பு இடம் பெறும். இது தான் இதுவரை நடைபெற்று வந்த சம்பள உயர்வு பெறும் நடைமுறையாகும். இருந்து பாருங்கள், அடுத்து வருடச் சம்பள உயர்வுக் காலத்திலும் இதே விட யங்களே முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு தான் மலையக மக்களின் நிலம்-வீடு இன்மை என்ற பிரச்சினையும் கல்வி-சுகாதாரம்-போசாக்கின்மை போன்றனவும உள்ளன. இவற் றுக்கு மேலாக மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தயாராக இல்லை. அவர்களுக்கு மலையக மக்களிடமிருந்து பெறுவதற்கு இரண்டு விடயங்கள் மட்டுமே தேவையானதாகும். ஒன்று, அவர்களின் இரத்தம் வேர்வையால் உருவாகும் உழைப்பும் லாபமும். இரண்டாவது அவர்களின் வாக்குகள். முதலாவதை கம்பனி நிர்வாகங்கள் மூலமாக முதலாளிகளும் அரசாங்கமும் பெறுகின் றன. இரண்டாவதை மலையக அரசியல் ஆதிக்க சக்திகளான தொழிற் சங்கத் தலைமைகள் பெற்று ஆளும் வர்க்கப் பங்காளிகளாகின்றன. இவற்றின் பிரதான தரகர்களாக ஊடக முதலாளிகள் செயற்பட்டு அவ்வெப்போது எழுத வேண்டிவற்றை எதை எழுதி மலையக மக்கள் மத்தியில் விற்று ஒரு புறத்தில்லாபத் தையும் மறுபுறத்தில் பிற்போக்கு கருத்துக்களையும் பரப்பி மக்களை அரசியல் மந்தை கூட்டமாக்கிக் கொள் கின்றன.

இந்த நிலை மாறவேண்டுமானால் நமது மக்கள் குறி ப்பாக மலையக இளந் தலைமுறை சிந்தனை-செயற்பா ட்டுத் தளத்தில் முன்னுக்கு வரவேண்டும். பழை மை வாய்ந்த அரசியல் கருத்தியலும், சிந்தனை நடைமுறை களும் தகர்த்தெறியப்பட்டு மக்களுக்கான புதிய மாற்று அரசியல் சிந்தனையும் நடைமுறைகளும் அதற்கான தலைமையும் தோற்றுவிக்கப்பட வேண்டும். இது காலத் தின் கடமையும் கட்டாயமும் ஆகம்.




கடந்த 25, 26ம் திகதிகளில் புதிய-ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அனைத்து இலங்கை மாநாடு நடைபெற்றது அதில் தோழர் சி.கா.செந்திவேல், ஆரம்பஉரை நிகழ்த்துவதையும் தலைமை குழத் தோழர்களாக இ.தமபையா க.தணிகாசலம் சோ.தேவராஜா வெ.மகேந்திரன். ஆகியேரை அமர்ந்திருப்பதையும் காணலாம்



## விடுதலைக்கு குரல் கொடுங்கள்

தோழர் எஸ்.சுகேசன் கடந்த மூன்று வருடங்களாவும் தோழர் நீ.பிரதீபன் ஒன்றரை வருடமாகவும் விசாரணை இன்றி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அநீதியான இத்தடுத்து வைத்தலுக்கு எதிராகத் தொடர்ந்து மக்கள் குரல் கொடுப்பது அவசியமாகும். யுத்தம் முடிந்த பின்பும் இவ் வகையான சிறை வைப்புத் தொடர்வதைப் புதிய பூமி கண்டிக்கின்றது. எமது தோழர்களையும் ஏனைய அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்குமாறு வற்புறுத்துகின்றோம். (ஆ.குழு)

# உலகில் பட்டினியால் வாடும் நூறு கோடி மக்கள் யார் காரணம்?

ஐ.நா. தகவல் ஒன்றின்படி 40 வருடங்களின் பின் முதற் தடவையாக உலகில் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை நூறு கோடியாய் உயர்ந்துள்ளது.

உலகின் பொருளாதார நெருக்கடியுடன் வறிய நாடுகளில் அத்தியாவசிய உணவின் விலைகள் பெருமளவில் உயர்ந்தமையினாலும் போஷாக்கின்மையால் வாடும் மக்களின் எண்ணிக்கை 1970ல் இருந்து கூடிக் கொண்டே செல்கிறது. சென்ற ஆண்டு மட்டும் பத்துக் கோடி மக்கள் இந்தப் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு உள்ளாகினர்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு, வளர்முக நாடுகளில் வாழும் மக்களில் பதினைந்து (15) சதவீதமானோர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த விகிதாசாரம் இன்று இருபது (20) சதவீதமாக உயர்ந்துள்ளது.

உலக உணவுத்திட்ட அமைப்பின் தலைவரான ஜோசெற் வீரன் உணவு விவசாய அமைப்பின் தலைவர் ஜகுஸ் டியூவ் ஆகிய இருவரும் சேர்ந்து வருடாந்த கணிப்பீட்டை மேற் கொண்டனர். அவர்களின் தகவலின் படி, வறிய நாடுகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உலக பொருளாதாரச் சரிவுக்கு முன்பே உயர்ந்து விட்டது.

உலக உணவுத் திட்டத்தின் ஆய்வின் படி 47 நாடுகளில் உணவின் விலைகள் 2007ம் ஆண்டை விட 19 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இந்த ஆய்வுக்கு 56 நாடுகள் உட்பட்டிருந்தன. உலகப் பொருளாதார நெருக்கடிக்கு முன்பே வளர்ச்சியடையும் நாடுகளில் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

நமது நாட்டில் அத்தியாவசியப் பொருள்கட்கு விலைகள் உயர்த்தப்படும் போது கூறப்படும் காரணம் உலகச் சந்தையில் விலைகள் அதிகரிக்கப்பட்டமையால் இங்கும் விலை ஏற்றம் தவிர்க்க முடியாது என்பதேயாகும். ஆனால் மக்கள் இந்த உலகச் சந்தை என்று கூறப்படுவது பற்றிக் கேள்வி எழுப்புவதில்லை. கண்டனம் தெரிவிக்கும் கட்சிகளும் தலைமைகளும் இந்த உலகச் சந்தை யாரால் யாருக்கு எதிராக செயற்படுத்தப்பட்டு யாருக்குலாபம் குவிக்கப்படுகிறது என்பது பற்றி விளக்கிக் கூறவோ அதனை அம்பலப்படுத்தி எதிர்க்கவோ தயாராக இல்லை. உலகின் முதலாளித்துவ ஏகாதிபத்திய பொருளாதார அமைப்பே நவதாராள பொருளாதாரக் கட்டமைப்பை இறுக்கி வைத்து உலகமயமாதல் செய்நிரல் அடிப்படையில் உலகின் வறுமையை அதிகரிக்க காரணமாக இருந்து வருகிறது. எனவே உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியமே வறுமையின் மூல காரணகர்த்தாவாகும். இது பற்றித் தேசியம் பேசும் கனவான்கள் -- குறிப்பாகத் தமிழ்த் தேசியவாதிகள் -- வாய் திறப்பதில்லை. ஏன்?

ஐ.நா. தலையீடு

1ம் பக்க தொடர்ச்சி

செயற்படும் சாத்தியம் ஏற்கனவே இருந்திருக்குமானால் ஐ.நா. தலையீடு என்பதனை எதிர்ப்பதற்கான அடிப்படை ஏற்பட்டிருக்கும். இன்றும் கூட அம் முயற்சிகள் வெறும் போக்குக் காட்டுவதாக மட்டுமே இருந்து வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், போதிய நஷ்டஈடு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டோர் விடுதலை, நியா யமான அரசியல் தீர்வு போன்ற அதிபிர தான விடயங்கள் தட்டிக் கழிக்கப்பட்டும் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளுமா கவே இருந்து வருகின்றன. இத்தகைய சூழலே ஐ.நா. சபையை இலங்கையில் தலையீடு செய்வதற்கான களத்தையும் தளத்தையும் உருவாக்கி வைத்துள்ளது. இதற்கான பொறுப்பை ஜனாதிபதியும் அர சாங்கமும் பேரினவாத முதலாளித்துவ சக்திகளும் தான் ஏற்கவேண்டும்.

அடுத்து ஐ.நா. சபை என்பது நீதி நேர் மையைக் கடைப்பிடிக்கும் உண்மையான ஒரு உலக அமைப்பு அல்ல என்பது ஏற்க னவே தெரிந்த உண்மையாகும். அது வல் லரசுகளினதும் உலக மேலாதிக்க சக்திகளினதும் கைக்கருவியாகவே செயல்பட்டு வந்திருக்கிறது என்பது மறைப்பிற்கு உரிய ஒன்றல்ல. சமகாலத்தில் கூட ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பாலஸ்தீனத்திலும் இழைக்கப்பட்டு வரும் போர்க் குற்றங்களுக்காக அமெரிக்கா, மேற்குநாடுகள் இஸ்ரேல் என்பனவற்றின் மீது ஐ.நா. எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தது என்பது கேள்விக்குரியதாகும். சில தமிழ்த் தேசிய வாதிகள் நம்புவது போன்று ஐ.நா. தமிழ் மக்களுக்காகப் பரிந்து பேசும் ஒன்றல்ல. அதே போன்று பேரினவாதிகள் நம்புவது போன்று அது தமிழர்களுக்காக செயற்படும் நிறுவனமும் அல்ல. அது முற்று முழுதாக அமெரிக்க மேற்குலக மற்றும் வல்லரசு நாடுகளுக்காக செயற்படும் ஒரு வலுவான முகவர் அமைப்புப் போன்றதேயாகும்.

இலங்கை மீது யார் ஆதிக்கம் செய்வது என்னும் நேரடி மறைமுகப் போட்டியில் ஐ.நா. அப்பட்டமாகவே அமெரிக்க மேற்குலகம் சார்ந்து நிற்கிறது. அதே வேளை இலங்கை அரசாங்கம் தமது போர்க் குற்றங்களை மனித உரிமை மீறல்களை மறைக்க இந்திய சீன ரஷ்சிய ஈரான் போன்ற நாடுகளுக்குப் பின்னால் நிற்கிறது. இலங்கை மக்கள் தமது இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் மீது அந்நியத் தலையீடு எந்த வடிவில் வந்தாலும் எதிர்த்து நிற்பது அவசியம். ஆனால் அவ்வாறான தலையீடு வருவ தற்கான ஏதுக்களை இல்லாமல் செய்து கொள்வது தான் யாவற்றையும் விட அதி முக்கிய மானதாகும்.

பெரும்பான்மை பலத்தையும் நிறைவேற்று அதிகாரத்தையும் ராணுவ பலத்தையும் கொண்டு இலங்கையின் அனைத்து உழைக்கும் வர்க்க மக்களையும் தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்கி ஆட்சி அதிகாரம் செய்து கொண்டு ஐ.நா. தலையீடு என்றும் அந்நிய சக்திகளது ஊடுருவல்கள் என்றும் கூப்பாடு போடுவதில் எவ்வித அர்த்தமும் இருக்க முடியாது.

இலங்கையின் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் உண்மையாகவே பாதுகாக்கப்படுவதற்கு நாட்டு மக்களை வருத்தி அடக்காது தேசிய இனங்களை ஒடுக்காது அனைத்து மக்களையும் பிரிந்து வைக்காது உரிய பாதையில் பயணிக்க வேண்டும். இல்லாதுவிடின் ஆட்சியாளர்களின் அதிகார இருப்பிற்கான செயற்பாடுகளே அந்நியத் தலையீடுகள் வருவதற்கான பாதையாக அமைந்துவிடும். இதில் அனைத்து மக்களும் விழிப்படைவது அவசியமானதாகும்.

## புதிய பூமி சந்தா சேருங்கள் ~ நிதி உதவி தாருங்கள்!

புதிய பூமி தொடர்ந்து வெளிவருவதற்கு வாசகர்கள் நண்பர்கள் ஆதரவாளர்களிடமிருந்து சந்தா மற்றும் நிதி உதவினை நாடி நிற்கிறது. மாற்று அரசியல் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் புதிய பூமியின் கருத்துக்களும் கண்ணோட்டமும் அவசியம் என்பதால் அதனைத் தொடர்ந்து வெளிவர ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகிறோம்.

சந்தா ஒரு வருடம் - 400 ரூபா, ஆறு மாதங்கள் - 200 ரூபா (தபாற் செலவு உட்பட)

**வெளிநாடுகள்**

ஐரோப்பா - 30 ஈரோ, அமெரிக்க நாடுகள் - 40 டொலர், ஏனைய நாடுகள் - 25 டொலர். வங்கி மூலம் அனுப்புவோர் **K. Senthivel, V.Mahendran Commercial Bank Grandpass Branch A/C No 1570018335 Colombo.** என்பதற்கு அனுப்பவும். தபால் நிலையம் மூலம் அனுப்புவோர் **K. Senthivel** என்ற பெயரில் **Grandpass** தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பவும். புதிய பூமியின் தொடர் வரவிற்கு தங்களின் மேலதிக நிதி உதவி பங்களிப்பாக அமையும் என நம்புகிறோம். நன்றி.

**The Manager Puthiya Poomi**

**47, 3rd Floor, C. C.S. M Complex, Colombo- 11 Sri Lanka.**

# நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

## எலி நட்சத்திரம்

மனோ கணேசனின் தோல்விக்குக் காரணம் என்னவென்று இப்போது அவருக்குத் தெரிந்துவிட்டது. கண்டி மாவட்டத்தில் 38 சதவீதமான தமிழரே வாக்களித்ததால் தான் கண்டியில் தமிழர் பிரதிநிதித்துவமே இல்லாமல் போய்விட்டதென்று அங்கலாய்த்துத் தமிழ் மக்களைத் திட்டித் தீர்த்திருக்கிறார். பெரும்பாலான தமிழ் மக்கள் ஏன் அக்கறையற்று இருக்கிறார்கள் என்று அவருக்கு விளங்குமா? அவர்களுக்கு அக்கறையூட்டக் கூடியளவுக்குத் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் தானல்ல என்ற உண்மை இந்தத் தலைக்கனம் பிடித்த அரசியல் பித்தலாட்டக்காரருக்கு விளங்குமா?

## பண்ணைக்காரரும் பார்வையாளர்களும்

இலங்கை அரசாங்கத்தின் கண்களில் மிளகாய்ப்பொடி தூவி மீள் குடியேற்றப் பிரதேசங்களைப் பார்த்து வந்ததாகத் தமிழகத்தில் 'ஜூனியர் விகடன்' நேர்காணலில் வாய்ச்சவடால் அடித்துவிட்டு வந்திருக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன். இங்கே எல்லாரும் போய்ப் பார்த்துவிட்டு வந்த மெனிக் ஃபார்ம் (மாணிக்கம் பண்ணை) முகாமைப் போய்ப் பார்க்க த.தே.கூ எம்பிக்கட்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியும் பாதுகாப்புச் செயலாளர் அனுமதி மறுத்ததைப் பற்றி அழுது வடித்திருக்கிறார் த.தே.கூ தலைவர் சம்பந்தன். எங்கள் வீரசாகசத் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சம்மந்தனுக்கு வழிகாட்டுவாரா? அல்லது அவர்களது இந்திய எசமானியின் முகவர்கள் யாராவது வழி காட்டுவார்களா?

## தமிழரசுப் பாரம்பரியம் நிலைநிறுத்தப்படுகிறது.

சம்பந்தன் பொத்திப் பொத்தி மறைக்கிற உண்மைகளை மாவை சேனாதிராஜாவின் உளறு வாய் வெளியே கொட்டிவிடுவதுண்டு. அப்படித் தான் இப்போதும் சுமந்திரன் என்ற கொழும்புப் பிரமுகர் ஏன் த.தே.கூ தேசியப்பட்டியல் பாராளுமன்றப் பிரதிநிதியானர் என்ற உண்மையையும் அவிழ்த்து விட்டுள்ளார். ஆங்கிலிக்கன் திருச்சபையின் பரிந்துரையை ஏற்றே சுமந்திரன் நியமிக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார். யாழ்ப்பாணக் கிறிஸ்தவ மேட்டுக் குடிகளை உள்ளடக்கிய இந்தக் கிறிஸ்தவ நிறுவனம் த.தே.கூட்டமைப்பின் வழிகாட்டியா? அதன் ஒரு பகுதியா? அல்லது அதன் அந்நிய எசமானர்களின் முகவர் அமைப்பா?

மாவை சேனாதிராஜா கூறிய இன்னொரு காரணம் சுமந்திரன் செல்வநாயகம் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதாகும்.

இதன் மூலம், தமிழரசுக் கட்சியின் சைவ - கிறிஸ்தவ வேளாள மேட்டுக்குடிக் குடும்ப அரசியல் மீளவும் நிலை நிறுத்தப்பட்டுள்ளதையே மாவை சேனாதிராஜா நமக்குச் சொல்லிவைத்திருக்கிறார். செல்வநாயகத்தின் சைவ வேளாள உறவினர் திருச்செல்வத்தை அமைச்சராக்கியது போல சுமத்திரனை அமைச்சராக்குகிற கணக்கு கொஞ்சம் பிழையாகிவிட்டது. அதனாலென்ன? இன்னமும் காலம் இருக்கிறது.

## அங்கு போலவே இங்கும்

சசி தரூர் என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம் 20-20 கிரிக்கட் கம்பனி ஒன்றில் தன் சினேகிதிக்கு ஒழுங்கீனமாகப் பங்குகளைப் பெற்றுக் கொடுத்தால் அமைச்சரவையிலிருந்து விலக நேர்ந்தவர். ஆனாலும் இந்திய ஆளும் நிறுவனத்தில் இன்னமும் செல்வாக்குள்ளவர் என்று சொல்லப்படுகிறது.

இந்தியாவின் சிறுபான்மை இனங்கள் நடத்தப்படுவது போல இலங்கைத் தமிழரும் நடத்தப்படுவதை இந்தியா உறுதி செய்யும் என்று அண்மையில் அவர் பேசி இருந்தார். இந்தியாவின் எந்தச் சிறுபான்மை என்று மட்டும் சொல்லவில்லை. மணிப்பூர் மக்கள்? காஷ்மீரிகள்? பழங்குடிகள்? குஜராத் முஸ்லிம்கள்?....

## குற்றமும் கைதும்

25 வருடம் பழைய குற்றத்துக்காக டக்ளஸ் தேவானந்தவைக் கைது செய்ய வேண்டும் என்று அண்மையில் தமிழ் நாட்டில் எழுப்பப்பட்ட சிறு புயலுக்கு வலுச் சேர்க்க இங்கிருந்தும் ஒருவர் வாயால் காற்றூதிப் பார்க்கிறார். ஆனால் எதுவும் எதையும் சாதிக்கப் போவதில்லை. அரசாங்கத்துடன் தேவானந்தா ஒட்டியுள்ளளவும், சிவபெருமான் மார்க்கண்டேயருக்கு அபயம் கொடுத்த மாதிரி அவருக்குப் பாதுகாப்பு உண்டு. இந்திய ஆட்சியாளர்களோ தி.மு.க. ஆட்சியோ அதற்குப் பதிலாக வரக்கூடிய எந்த ஆட்சியுமோ இலங்கை அரசுக்குச் சங்கடம் ஏற்படுத்தும் விதமாக நடந்துகொள்ளாது.

மகாராஜா நிறுவனத்தின் பாராளுமன்றப் பிரதிநிதி தன்னுடைய பழைய கோபங்களைத் தீர்த்துக் கொள்ளப் பத்திரிகை அறிக்கைகளை விடலாம். அதை அவருக்கு நட்பான ராஜபக்ச குடும்பமும் கணக்கிலெடுக்காது. ஏதோ சிறுபிள்ளைத் தனமான ஆத்ம திருப்தி.

இலங்கையில் ஈ.பி.டிபியின் அடாவடித்தனங்கள் பற்றி ஒன்றுமே நடக்கவில்லை இந்தியாவிலா நடக்கப் போகிறது?

மக்கள் விழிப்படையும் போது முதலாளிமாரின் கைப்பாவைகள் உட்பட எல்லா உதிரிகளும் காற்றோடு போக நேரும்.

### நமது அஞ்சலியும் அனுதாபமும்

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக விசாரணை இன்றி சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புதிய - ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சியின் முன்நிலைத் தோழர் நீ.பிரதீபனின் தந்தை ஜோ.நீக்கலஸ் அன்ரனி அவர்கள் 06-06-2010 அன்று வவுனியாவில் இயற்கை எய்தினார் அவரது மறைவினால் பிரிவுத்துயருடன் இருந்து வரும் தோழர் பிரதீபனுக்கும் குடும்பத்தினருக்கும் புதிய பூமி தனது அஞ்சலியையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர் குழு -

# வன்னி மக்களுக்கு வீடுகள் எப்போது கிடைக்கும்

வன்னி மக்களின் இழப்புகள் வரலாற்றில் முன் காணப்படாதவை. இந்த இழப்புக்கள் நிவர்த்திக்க முடியாதவை என்றும் நிவர்த்திக்கப்படக்கூடியவை என்றும் இருதரத்தில் காணப்படுகின்றன. நிவர்த்திக்கப்படக் கூடியவற்றில் இந்த மக்களின் வாழிடங்களின் அழிவுகளை முக்கியமானதொன்றாகக் காணலாம். தொண்ணூறு சதவீதமான வீடுகள் அழிந்துள்ளன. ஆரம்பத்தில் தற்காலிக வீடுகளும் அடுத்து நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படுமென்று இந்த மக்கள் நம்பவைக்கப்பட்டனர். சர்வதேச நிறுவனங்கள் இந்த நம்பிக்கையை ஊட்டின. தமிழ் நாளேடுகளுக்கும் இதில் கணிசமான பங்கு உண்டு. தாம் இழந்த அழிவுகளுக்குப் பதிலாக எவையெவற்றைப் பெறுவதற்கு மீளக் குடியேறுபவர்கள் உரிமையுடையவர்கள் என்பது பற்றிய சர்வதேச வரைபுகளும் உண்டு. இதனால் பெருத்த அவலங்களுக்கு மத்தியில் அழிக்கப்பட் தமது வீடுகளுக்குப் பதிலாக வீடுகள் அமைத்துத் தரப்படும் என்று முட்கம்பி வேலிகளுக்குள் இருந்து மக்கள் கனவு கண்டார்கள். இப்போது இருப்போரும் எதிர்பார்க்கிறார்கள். இவை எல்லாவற்றையும் புறந்தள்ளி ஜனாதிபதியானவர் தனது வக்கிரத்தை வெளிப்படுத்தியுள்ளார். வீடுகள் அமைப்பதற்கு அரசு இயலாத நிலையில் உள்ளதாக அவர் சிந்தித்துக் கூறியுள்ளார். தமது இரண்டு அறுவடைக்காலத்தில் தமக்குரிய வீடுகளைத் தாமே அமைத்துக் கொள்வார்கள் என்றும் அவர் சிந்தனையில் தோன்றியுள்ளது. ஜனாதிபதியின் கூற்றினால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த மக்கள் தமது உணர்வலைகளை வெளிப்படுத்த ஏது நிலை அற்றவர்கள் என்பதே உண்மை. தோன்றுதொட்டே வனச்சூழல் காரணமாக புறம்போக்கு நிலையை வன்னி கொண்டிருந்தது. தொடர்ந்தும் விடுதலைத் தலைமைகள் எனப்பட்டவை இந்த மக்களை அப்பாவிகளாகவும் வாய் பேசமுடியாதவர்களாகவும் இருப்பதற்கு நிர்ப்பந்தித்து அதற்குரிய அமைவுகளையும் திணித்திருந்தார்கள். நாளேடுகளில் பிரசுரமாகும் இது சம்பந்தமான பதில்களும் கட்டுரைகளும் அறிக்கைகளும் இந்த மக்களுக்கு எவ்வகையில் மருந்தாகும். மேற்படியாவும் அவரவர் தமது வாக்கு வங்கிகளைத்தக்க வைப்பதற்கும் விஸ்தரிப்பதற்குமான உபாயங்களாகவே தோன்றுகின்றன.

அடுத்த மாரிகாலம் ஆரம்பிக்க இன்னும் நான்கு மாதங்கள் கூடஇல்லை. நீர்ப்பாசனக் குளங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக சிதைவடைந்துள்ளன. ஆனால் அரச போர் வெற்றிவிழா, வடபகுதிக்கான சுற்றுலா, திரைப்படவிழா போன்றவற்றை மட்டுமே தேசிய முக்கியத்துவமாகக் கருதுகிறது.

இந்திய அரசின் 50 ஆயிரம் வீடுகள் அன்பளிப்பு என்பதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தனை போய்ச் சேரும் என எவராலும் சொல்லமுடியாது. அன்பளிப்புச் செய்ததைத் தொடர்ந்து சந்தேக தேதையும் இந்திய அரசு பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளது. பற்றாக்குறையான இந்த உதவித்திட்டம் தமிழ்த் தலைமைகளுக்குப் பிரச்சினையான ஒன்றல்ல. ஏனெனில் பற்றாக்குறையான வளங்கள் பகிரப்படுகிற பொழுது மக்கள் பெருத்த அங்கலாய்ப்பு நிலைக்குக் கொண்டு வரப்படுவர். கட்சித்தலைமைகளுக்குப் பின்னும் நிர்வாகிகட்குப் பின்னும் மக்கள் அலைந்து திரிவர். இவ்வாறான சஞ்சலங்களைத் தமது அரசியல் பலமாகவும் அரசியல் அணியாகவும் மாற்றிக் கொள்வது தமது அரசியல் தலைவர்களுக்குக் கைவந்த கலையாகும். இந்திய அரசும் இதை நன்கு அறியும். போருக்கான ஆயுதங்களையும் அதற்கான அனுசரணைகளையும் மாத்திரம் இந்திய அரசால் நூறுவீதமாக வழங்க முடிந்தது. இந்தியாவை நம்பிக் கொண்டு வாழ்பவர்கள் இந்த உண்மைகளை ஜீரணித்துக் கொள்ளக் கடமைப் பட்டவர்களாவர்.

மக்கள் மீளக்குடியேறுமிடங்களில் தமிழ்த்தலைமைகள் தங்களை அறிமுகப்படுத்துவதற்காகப் பல உத்திகளைக் கையாளத் தொடங்கியுள்ளன. இந்த அரசியல் களங்களுக்குள் மீண்டும் தங்கள் வாழ்வு சிதைந்து சீரழிவு அடையாமல் மீட்கப்படவேண்டும் என்பதே மக்கள் மனநிலையாக உள்ளது. அவர்களுக்கு முதன்மையான எதிர்பார்ப்புகள் பல உண்டு. அதில் வாழிடம் பற்றிய துன்பமும் ஒன்று. அழிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இது அவர்களுக்கு வழங்கும் வெறும் அன்பளிப்போ உதவியோ அல்ல. இழைத்த கொடுமைகளுக்குப் பிராயச்சித்தமாகச் செய்யப்படவேண்டிய பலவற்றுள் ஒன்று என்பதே உண்மையாகும்.

விசு

## சம்பந்தனின் சம்பந்தங்கள்

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் திருகோணமலையில் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக 1952 முதல் 1963 வரை இருந்த காலஞ்சென்ற ந.இ. இராஜவரோதயத்தின் மகன் என்று "சுடர்ஒளி" நாளேடு தேர்தல் காலத்தில் தகவல் வெளியிட்டது. "சுடர்ஒளி" முதலாளியும், ஆசிரியரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். இப்போது முதலாளி சரவணபவன் யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பு எம்.பி.

உண்மையை அறிய வேண்டி ந.இ. இராஜவரோதயத்தின் உறவினர்களிடம் விசாரித்தேன். இராஜவரோதயத்துக்கு ஸ்ரீதரன், ராஜ்மோகன் என்று பிள்ளைகள் இருவர் என்றும் அவர்களில் எவருமே தங்கள் பேரைச் சம்பந்தன் என்று மாற்றியதாகத் தகவல் இல்லை என்றும் எனக்கு உறுதிப்படுத்தப்பட்டது. சம்பந்தன் குடும்பம் தடித்த யூ.என்.பி. குடும்பம். சம்பந்தனின் தாய் மாமன் சிவபாலன் திருகோணமலையில் 1947ல் தமிழ்க் காங்கிரசில் வென்று யூ.என்.பியில் சேர்ந்து 1952 தேர்தலில் தோற்றவர் என்றும் சொன்னார்கள். 1961 சத்தியாக்கிரகத்தின் இறுதியில் திருகோணமலைத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களில் சம்பந்தனும் ஒருவர். எனினும் 1977 வரை சம்பந்தனுக்கு நியமனம் வழங்குவதற்குத் திருகோணமலைத் தமிழரசுக் கட்சியினர் விரும்பவில்லை என்றும் தெரியவருகிறது.

தமிழீழம் கோரிய தமிழர் விடுதலைக் கூட்டணியில் நின்று வெற்றி பெற்ற சம்பந்தன் பாராளுமன்றத்தில் ஆற்றிய முதலாவது உரையில் ஜே.ஆர். ஜயவர்தனவின் திறந்த பொருளாதாரக் கொள்கையை மெச்சிப் பேசினார். பழைய யூ.என்.பி. பாசம் அவரை என்றுமே விட்டுச் செல்லவில்லை.

ந.இ. இராஜவரோயத்துக்கு மகனென்று உறவு கற்பிக்கும் முயற்சிக்கு நோக்கம் இல்லாமலில்லை. சம்பந்தனின் சறுக்கி இறங்கிவரும் நம்பகத்தன்மைக்கு ஒரு தடைக் கல்லாகவே இந்தப் புளுகு அவிழ்த்துவிடப் பட்டது என்றே தெரிகிறது.

இது போலவே, சம்பந்தன் 1977 முதல் இன்றுவரை தொடர்ச்சியாகப் பாராளுமன்றத்தில் உள்ள நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் என்று ஒரு பொய் தேர்தல் காலத்தில் "டெய்லி மிரரில்" சொல்லப்பட்டது. சுட்டிக்காட்டிய பின்பும் அது திருத்தப்படவில்லை. சம்பந்தன் 1984 இல் ஆறாவது சட்டத் திருத்தத்தின் கீழ்ப் பதவி இழந்தார். 1989 தேர்தலில் படு தோல்வி அடைந்தார். 1994 இலும் தோல்வியடைந்து, தங்கத்துரை புலிகளாற் கொல்லப்பட்ட பின்பு 1998இல் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்டார். இப்பொழுது தமிழர் பிரதிநிதித்துவத்தைக் காப்பது என்ற பேரில் தன் ஆசனத்தைக் காப்பாற்றியுள்ளார்.

நமது நிருபர்

# தெற்கின் மாணவப் பிரதிநிதிகளுக்கு வடக்கில் தடுப்பு ஏன்?

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையினரான தென்னிலங்கை மாணவர் குழு ஒன்று அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருந்தனர். தம்முடன் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்களை பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு கையளிக்கவும் எடுத்துச் சென்றனர். யாழ்ப்பாணத்தல் தற்போது ஜனநாயக சூழல் நிலவுவதாக நம்பியே அவ்வாறு சென்றனர். ஆனால் யாழ் பல்கலைக்கழக வாசலில் இத் தென்னிலங்கை மாணவர் குழு தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. எவ்வளவோ முயன்றும் அவர்களால் உட்செல்ல முடியவில்லை. அவ்விடத்தில் வைத்து அங்கு வந்த ஊடகவியலாளர்களுக்கு தாம் தடுக்கப்பட்ட விடயத்தைக் .கூறினர்.

இவ்வாறு தடுக்கப்பட்டமைக்கு யாழ் பல்கலைக்கழக நிர்வாகமே காரணமன்றி அங்குள்ள மாணவர்களோ பொதுமக்களோ அல்ல என்பது காண வேண்டியதொன்றாகும். அவ்வாறு நிர்வாகம் தடுத்தமைக்கு கொடுக்கப்பட்ட பதில் மேலிடத்து உத்தரவு என்பதாகும். அந்த மேலிடம் யார்? பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவா, உயர் கல்வி அமைச்சா, ராணுவ நிர்வாகமா, ஜனாதிபதி செயலகமா அல்லது வடபுலத்து ஆதிக்க அரசியல்வாதிகளா என்பது புரியாத புதிராகவே உள்ளது.

மேலும் இவ் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அரசியல் உள்நோக்கத்துடன் வந்தவர்கள் என்ற கண்டுபிடிப்பு சிரிப்பிற்கு இடமானது. பல்கலைக்கழக உயர் மட்ட நிர்வாகத்தில் இருப்பவர் தொடக்கம் மாணவர்கள் வரை யாரிடம் அரசியல் நோக்கம் இல்லாதிருக்கின்றனர்? கடந்த பொதுத் தேர்தலில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஆதரவு திரட்ட பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பல்கலைக்கழகத்தினுள் வரவில்லையா? அமைச்சர்கள் என்ற பட்டயத்துடன் வருவோர் தமது அரசியலை வாசலில் கழற்றி வைத்துவிட்டா வருகிறார்கள்? எனவே மொட்டை நியாயங்களால் முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைத்து விடமுடியாது.

அ.ப.க.கழக மாணவர் ஒன்றியத் தலைமையிடம் கேட்க வேண்டிய அரசியல் கேள்விகள் நிறையவே உண்டு. அதற்கான பதிலை கொடுக்க வேண்டிய கடமையும் அவர்களுக்கு உண்டு. இதனை அவர்களுடனான சந்திப்பு, கலந்துரையாடல் மூலமான கடந்த கால நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டியே அவற்றைச் செய்ய முடியும். அதனை விடுத்து தென்னிலங்கையின் சிங்கள மாணவர் பிரதிநிதிகளை யாழ் பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்து பேசவோ உறவு கொள்ளவோ தடுப்பது பழைய புலிகள் இயக்கம் கைக்கொண்ட ஆதிக்க அதிகாரத் தொனியின் தொடர்ச்சியை ஏனையோர் செய்ய முற்படுவதைப் போன்றதாகவே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் இன்னும் வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்வும் ஜனநாயக சூழலும் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அரசாங்க தரப்புகளில் இருந்து வந்தால் மாலைகள் தோரணங்கள் கட்டி வரவேற்பதும் எதிர்த் தரப்புகள் வந்தால் அரசியல் உள்நோக்கம் என நிராகரிக்கப்படுவதும் என்ன நியாயம்? தமிழ் மக்கள் அனைவருமே நியாய அநியாயத்தைப் பேசுவது மறுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆயிற்றே. இப்போது இருப்பதாக நம்புவது தான் முட்டாள் தனம் போலும்.

இதே அ.ப.க.கழக மாணவர் ஒன்றியம் அண்மையில் காணாமல் போனோர், மீள் குடியேற்றம், மாணவர்கள் தடுத்துவைப்பு பற்றியெல்லாம் பகிரங்கமாகப் பேசி வருகிறார்கள். அவர்களது அரசியல் பின்புலமும் அவர்களது கோரிக்கைகளும் அரசாங்கத்திற்குச் சார்பானவையாக இல்லை. சிங்கள மக்கள் மத்தியில் அவரகளது பிரசாரம் போவதையும் அரசாங்கம் விரும்பவில்லை. அதன் பிரகாரம் அவர்கள் வடக்கே போவதையும் அரசாங்கம் விரும்பவில்லை. அதன் ஒரு பகுதியே யாழ் பல்கலைக்கழகத்தில் தென்னிலங்கைப் ப.க.கழக மாணவர்கள் தடுக்கப்பட்டமையாகும்.

ராமு

# முட்கம்பி முகாமில் போராளிகளுக்குத் திருமணம்

கடந்த 13.06.2010 அன்று வவுனியா பம்பைமடு முட்கம்பி முகாமில் முன்னாள் புலிப் போராளிகளான 53 சோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. போராளிகளாக இருந்த வேளை ஒருவரை ஒருவர் விரும்பியிருந்த இளைஞர் யுவதிகளுக்கே இவ்வாறு திருமணம் சட்டபூர்வமாகவும் சமயக் கிரிகைகளுடனும் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. புனர்வாழ்வுக்குப் பொறுப்பான ராணுவ நிர்வாகம் 20 லட்சம் ரூபா செலவில் இத்திருமண நிகழ்வை நடாத்தியதுடன் ஒவ்வொரு சோடி தம்பதிகளுக்கும் ரூபா 10 ஆயிரம் அன்பளிப்பும் வழங்கப்பட்டதாம். இந்து, கிறிஸ்தவ முறைப்படி இடம் பெற்ற இத் திருமணத்திற்கு சில உறவினர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அதே வேளை முகாமில் தனியாகப் பிரித்தொதுக்கப்பட்ட ஓர் இடத்தில் இத் திருமண நிகழ்வு நடைபெற அதனை ஏனைய தடுப்புக்கைதிகள் முட்கம்பி வேலிகளுக்கு அப்பால் இருந்தவாறு பார்த்து வாழ்த்தியதாக அறிய முடிகிறது.

இத் திருமண நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ போக, இந்திய திரைப்பட நடிகர் விவேக் ஒபரேயும் கலந்து கொண்டனர். இத் திருமண நிகழ்வுப் படங்களை ஊடகங்கள் தடல்புடலாக வெளியிட்டன. இது ஒருவகை காட்சிப்படுத்தலேயாகும். இதன் மூலம் தடுத்து வைக்கப்பட்டோரினதும் விசாரணை இன்றிச் சிறைகளில் அடைக்கப் பட்டிருப்பவர்களினதும் அவலங்கள் மறைக்கப்படுகின்றன.

இத் திருமண செயற்பாட்டின் மூலம் இத் தம்பதிகள் வெளியே விடப்படவில்லை. மேலும் மூன்று ஆண்டுகள் புனர்வாழ்வு முகாமில் கண்காணிப்புடன் கூடிய கூடாரங்களில் தான் தமது குடும்ப வாழ்வை நடாத்த வேண்டியுள்ளது. அதுவும் சேர்ந்து வாழ அனுமதிக்கப்படுவரா அல்லது மூன்றாண்டுகள் தனித்தனியே தான் புனர்வாழ்வை மேற்கொள்ள வேண்டுமா என்பது பற்றியும் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெளிவானது. அதாவது தடுத்து வைக்கப்பட்டோர் பற்றி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எழுப்பப்படும் கேள்விகளுக்கு இத் திருமணக் காட்சி ஒரு வகையான திசைதிருப்பும் காட்சி மட்டுமேயாகும்.

இதனை மனிதாபிமானம் மிக்க செயற்பாடு என வர்ணித்து எழுதும் அரசாங்கத் சார்பினர் இருக்கவே செய்கின்றனர். அப்படியான மனிதாபிமானம் பல வருடங்களாகச் சிறைகளில் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் மீது காட்டப்படாது வன்மம் சாதிக்கப்படுவது ஏன்? போராளிகளுக்கு புனர்வாழ்வும் திருமணமும் என்றால், அதே போராளிகளுக்கு உதவிய சந்தேகத்தின் பெயரில் இளைஞர் யுவதிகள் வயது வந்தோர் என ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது எந்த மனிதாபிமானத்தின் கீழ் எனக் கேட்க விரும்புகின்றோம். ஆர்.எஸ்

# மக்களுக்குத் தேவையான இலங்கை வேண்டும்!

சுதந்திரத்திற்கு பின் இலங்கைத் திருநாடு சாதித்தது என்ன? அதன் எதிர்காலம் சுதந்திரத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் இலங்கையின் அரசியல் சமூக பொருளாதார, நிலைமைகளில் நாடு எதிர் நோக்கிய விடயங்கள் யாவை? இலங்கையின் எதிர்காலம் பற்றிய நோக்கும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை பற்றியும், கொள்கை அரசியலின் தேவை பற்றியும் இக் கட்டுரை ஆராய்கின்றது.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது எனப் படித்திருக்கிறோம். அக் காலத்திலிருந்து 2010 வரை 62 வருடங்களுக்கு மேலாக எமது நாட்டை முதலாளித்துவ கடும் போக்குவாத, சர்வதேச முதலாளித்துவ அரசாங்கங்களின் நண்பனான மேலைத்தேய, பிரித்தானிய, அமெரிக்க அரசியல் நடைமுறைகளை இலங்கைக்கு புகுத்திய பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சி. அதிலிருந்து சற்று மாறிய பிரித்தானிய அமெரிக்க நடை முறைகளை முற்றுமுழுதாக ஆதரிக்காதது போன்று தோற்றம் காட்டி, ஆனால் சிங்கள பௌத்தம் என்ற இனவாத வேறுபாட்டை இலங்கை சமுதாயத்திலே புகுத்தியது சிறி லங்கா சுதந்திரக் கட்சி. விவசாயிகளையும் தொழிலாளர்களையும் தன்னகத்தே பெருமளவு திரட்டிக் கொண்டு நாங்கள் கொஞ்சம் இடதுசாரித் தன்மையானவர்கள் என்று சொல்லிக் கொண்டு (இனவாத அரசியல் ஒரு நாளும் இடதுசாரியம் ஆகாது) பெரும்பான்மை உழைக்கும் வர்க்கத்தைப் பயன்படுத்தியது அக் கட்சி. அரசியல் தளத்தில் தமக்கென இடம்பிடித்த இச் சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலம் தொட்டு மாறி மாறி இலங்கையை ஆட்சி செய்துள்ளனர். செய்து கொண்டும் இருக்கின்றனர்.

இக் கட்சிகளின் ஆட்சியால் விளைந்தது என்னவென்றால், சமுதாயத்திலே வர்க்கப் பிளவும், இன முரண்பாடும் சமூகப் பாகுபாடும், வேறுபாடுகளுமேயாகும். மேலும் மதப் பிணக்குகள், கலவரங்கள், சமூகச் சீர்குலைவுகள் பாதாள உலக சாம்ராஜ்ஜியம், அடக்குமுறையும் சுரண்டலும் ஒடுக்குமுறையும் தான். இவை தவிர சுதந்திரம், சமத்துவம், அடிப்படை உரிமை ஆகிய விடயங்கள் என்ற அனைத்தும் அரசியல் யாப்புகளில் எழுதப்பட்டதாகக் காணப்படுகின்றதே ஒழிய நடைமுறையில் துளி கூட காணமுடியாத நிலையே அன்றிலிருந்து இன்று வரையும் காணப்படும் சமூக நிலைமையாகும்.

பொருளாதார நிலைமைய நோக்கும் போது இவ் அழகிய இலங்கையை ஜப்பான், அமெரிக்க, பிரித்தானிய, சீனா, இந்தியா முதலான வல்லரசுகளிடம் விற்று வந்துள்ளனர். அந் நாடுகளின் பல்தேசிய கம்பனிகளுக்கும், முதலீட்டு நிறுவனங்களிலும், இலங்கை வளங்களையும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் தாரை வார்த்துக் கொடுக்கின்றனர். உழைக்கும் பாட்டாளி வர்க்கத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைப் பறித்து, உழைக்கும் வர்க்கத்தை உதைத்துத் திறந்த பொருளாதார கொள்கை என்ற பெயரில் ஒரு காலத்தில் தன்னிறைவு பெற்றிருந்த நெல்லைக் கூட இறக்குமதி செய்யப் பிச்சை எடுத்து நிற்கும் நிலைக்குத் தள்ளினர். இயற்கை வேளான்மையை நாசப்படுத்தி நிலப்பயன்பாட்டை ஊக்குவிக்காது, விவசாயிகளை கவனிக்காது பெருந்தோட்டத் தொழிலாளர்களை மறந்து யாவற்றையும் இறக்குமதி என்பதன் ஊடாக நுகர்வை ஊக்கப்படுத்தி வருகின்றனர். அதே வேளை சொந்த உற்பத்தி, ஏற்றுமதிக் களஞ்சியப்படுத்தல், தொழிற்சாலை நிறுவுதல் புதிய தொழில்களை உள்நாட்டில் நிறுவுதல் என்பனவற்றைச் செய்யவும் அருகதையற்று, ஊசி ஒன்றுக்கூட சீனா தான் வேண்டும் என்று மக்கள் கூறும் அளவிற்கு அந்நிய சக்திகளை நம்பி வாழ்வைக் கழிக்கும் வங்ரோத்து பொருளாதார நிலைமையே காணப்படுகின்றது.

அரசியல் நிலைமையை நோக்கும் போது, சந்தர்ப்பவாதமும் மக்கள் நலன் அன்றிக் குடும்பத்தைக் கவனிப்பதுமாக, தனி மனித சர்வாதிகாரத் தன்மை கொண்டு பணத்தின் மூலம் மக்களை ஏமாற்றி விடலாம் என்ற எண்ணமே ஆட்சி புரிகிறது. பல இலட்சக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டு உண்மைகளையும் யதார்த்த நிலைமைகளையும் மூடி மறைத்து மேடையில் மட்டும் வெட்டிப் பேச்சுப் பேசுவதே இடம் பெற்றுவருகிறது. அடிப்படை மாற்றங்களை செய்யாது, அபிவிருத்தி என்று (அதாவது உறுதியான அத்திவாரமிடாது அதில் கட்டிய பழைய கட்டிடத்திற்கு நிற பூச்சுப் பூசுவது போல) மேலாக சில மூடி மறைப்புத் திட்டங்கள் தான் பிரசாரப்படுத்தப்படுகின்றன. அதே வேளை மனிதர்களைப் பயங்கரவாதிகள் என்று குற்றச்சாட்டும் சூழல் தான் அரசியலில் காணப்படுகின்றது.

ஒட்டுமொத்த இலங்கைச் சூழலின் இன்றைய சமூக பொருளாதார அரசியல் நிலைகள் இதன் மூலம் எவ்வளவு கீழ் மட்டத்தில் சனநாயக தன்மையற்றதாகக் காணப்படுகின்ற நிலை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலைமைகளிலிருந்து மீள்

**சுபி கஸ்ரோ**

வதற்கு ஒரே வழி மாற்று அரசியல் பாதையேயாகும். அதற்கான ஒரே வழி மாக்சிய லெனினிய மாவோ சிந்தனை முன் வைக்கும் தத்துவத்திலேயே காணப்படுகின்றது. இனிமேலும் நாட்டு விரோத, மக்கள் விரோத முதலாளித்துவ கடும் போக்குவாத மக்கள் நலன் அற்ற கட்சிகளை நம்பி ஏமாற முடியாது. மக்கள் நலனை முதற்கொண்டு, நாட்டை நேசிக்கும் இலங்கை வளங்களை, இயற்கையை உயிராய் மதிக்கும் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். விவசாய, தொழிற்துறையை மேம்படுத்தி நாட்டை அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். அதற்குப் புதிய ஜனநாயகப் போராட்டப் பாதையில் சென்று சமூகத்தை உருவாக்குவதற்காக தொடர்ந்தும் முயன்று கொண்டிருக்கின்ற வெகுஜன போராட்ட புரட்சிகர அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதற்கான பாதையில் புரட்சிகர சக்திகளைக் கட்டியெழுப்பி உரிய கட்சி தேர்ந்தெடுப்பது மாத்திரமே தற்போது இலங்கையின் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளான மக்கள் முன்னுள்ள ஒரேயொரு தெரிவாகும். காலம் இதை நிச்சயமாகத் தெரிவு செய்யும். பொருளாதார சக்தி மிக்க இலங்கை உரிமைகளை உறுதிப்படுத்தும். இலங்கை, உண்மையான சனநாயக இலங்கை, ஒடுக்கப்படும் உலக மக்களுக்காக உறுதியாகக் குரல் கொடுக்கும் இலங்கை இறைமையும் சுதந்திரமும் சுபீட்சமும் ஐக்கியமும் கொண்ட இலங்கை யை நம்மால் உருவாக்க முடியும்.

## எமது பதில்கள் ஜெயம்

கேள்வி: தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு எப்போது சொந்தமாகும்?

- எஸ். மாயழகு, அப்கட்

*பதில் : 2083ம் ஆண்டு ஜூலை மாதம் 22ம் திகதி சொந்தமாக்கப்படும். 1983ம் ஆண்டு ஜூலை கலவரத்தின் நூற்றாண்டு பரிசாக.*

கேள்வி: இலங்கையிலிருந்து இந்தியா முதலில் பறித்துக் கொண்டது காணி வளத்தையா அல்லது நீர் வளத்தையா?- எம் ஜெகன், பொகவத்தலாவ

*பதில்: இல்லை ஜெகன் 'அது' பறித்துக் கொண்டது இலங்கையின் சுயாதிபத்தியத்தையும் தன்மானத்தையும்.*

கேள்வி: நீங்கள் பார்த்து இரசிக்க விரும்புகின்ற சில காட்சிகளை கூற முடியுமா?

ப. பிரியா, ரொசெல்ல.

*பதில் :போக்குவரத்து அமைச்சர் பொகவந்தலாவ பஸ்ஸில் ஏறி புட்போட்டில் நின்று கொண்டே செல்வதை பார்க்க, பெருந்தோட்டத் துறை அமைச்சர் பெத்துராசி தாட்டடபள் சைட் லயத்தில் குடியிருப்பதைப் பார்க்க, கல்வி அமைச்சர் கல்கந்தவத்த தமிழ் வித்தியாலயத்தில் படிப்பதைப் பார்க்க, கால்நடை அபிவிருத்தி அமைச்சர் காபெக்ஸ் தோட்டத்தில் ஆயிரம் அட்டைகள் கடிக்க புல் அறுப்பதைப் பார்க்க.... போதுமா?*

கேள்வி: மலையகத்தில் உள்ள ஆசிரியர்களில் சிலர் மாணவிகளோடு அப்படி இப்படி என நடந்து கொள்கிறார்களாமே?

எம் - கணேஸ் - தலவாக்கலை

*பதில் :சும்மா இருப்பதற்கு சம்பளம் கொடுக்க முடியுமா? பாடசாலைக்குச் சென்றால் ஏதாவது செய்ய வேண்டாமா? கணேஸ்*

கேள்வி:இந்திய திரைப்பட விழா, கிறிக்கட் விளையாட்டு எல்லாம் நடந்து முடிந்து விட்டது இனி என்ன செய்யலாம்?

ம.அன்புராசினி - பதுளை

*பதில் :இந்திய லோக்சபை (பாராளுமன்றம்) கூட்டங்களை கோட்டே ஜயவர்த்தனபுரவில் நடத்தலாம்.*

கேள்வி:தென்னிந்திய தமிழ் நாடகத்தொடர்களின் நடிக்கும் நடிகைகள் தொடர்ந்து அழுவதனால் எங்கள் வீட்டு டீவி நனைந்து விட்டது என்ன செய்யலாம்?

எம் - உதயகுமாரி - நுவரெலியா

*பதில் :ஐந்து லீற்றர் பெற்றோல் அல்லது பத்து லீற்றர் மண்ணெண்ணெய் வாங்கி வந்து, டீவி பெட்டியின் மீது ஊற்றி உடனடியாக பற்ற வையுங்கள். பின்னர் எல்லாம் சரியாகிவிடும்.*

உங்களது கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி ஜெயத்தின் பதில்கள்
c/o எஸ். ஜெயம் 50/9, பிரதான வீதி,
இராகலை ஹல்கரனோயா.

# ஒரு மலையக மாணவனின் டயறி

01.05.2010:

உலகத் தொழிலாளர்கள் தினம் தொழிலாளர்கள் தமது உரிமைக்காக போராடுகின்ற தினம். ஆனால் மலையகத்தில் தொழிலாளர்களை உறுப்பினர்களாக கொண்டிருக்கின்ற தொழிற்சங்கங்கள் பல, நிகழ்வுகள் எதையுமே செய்யாது மௌனமாகி விட்டன. இ.தொ.காவுக்கு சவால் விட்ட தொழிற்சங்கத்தின் தலைவர் ஒருவர் வீட்டுக்கு வந்திருந்தார். இவனுங்க ஒருத்தனும் ஒழுங்கா ஓட்டுப்போடல அப்புறம் என்னா மே தினம். கோடிக் கணக்குல செலவழிச்சும் வாங்கி குடிச்சிப்புட்டு கால வாரீட்டானுங்க என்று மாமாவிடம் கூறினார். எனக்கு சிரிப்பு ஒரு புறம், கோபம் மறு புறம்.... மாமா முறைத்ததால் பேசாமல் இருந்து விட்டேன். தலவாக்கலையில் ஒரு மே தின நிகழ்வு இடம்பெற்றது. இதற்காக ஒட்டப் பட்டிருந்த போஸ்டர்களில் தொழிலாளர்களைக் காண முடியவில்லை கோரிக்கைகளையும் காண முடியவில்லை.

சிக்காகோ நகரில் இரத்தம் தோய்ந்த கொடி சிவப்பு நிறத்தில் காணப்பட்டது. தொழிலாளர்களின் கொடி சிவப்பாகத் தானே இருக்கும். ஆனால் இங்கு அவ்வகையான கொடியைக் காண முடியவில்லை மேதினத்தை ஏதோ ஒரு விழாவாக கொண்டாடி குடித்து விசிலடித்து, பஜா போடும் நிகழ்வாக மாற்றி விட்டதை நினைக்கும் போது கோபமாக இருந்தது.

03-07.05.2010 :

திங்கட் கிழமை இரண்டு பாடங்கள் நடைபெற்றன "இனி வகுப்பறைகளில் பாடம் நடக்காது" என்று ரவிசேர் சொன்னார். எல்லோரும் ஏன் என்று கேட்டோம். "நம்ப ஸ்கூலுல உள்ள நாற்பத்தைந்து சேர்மாரில முப்பத்தைந்து பேர் பொதுத் தேர்தலின் போது மும்முரமாக ஒரு கட்சிக்கு வேலை செய்ததால் அத்தனை பேருக்கும் பிரின்சிபல் பதவி கொடுக்கப் போறாங்க" என்று நக்கலாக சொன்னார். "ஒரு வகுப்புக்கு ஒரு பிரின்சிபலா சேர்" என்று குமார் கேட்க எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

செவ்வாய்க் கிழமை காலையிலேயே அதிபர் அவரது காரியாலயத்துக்கு அனைவரையும் வரச் சொல்லி ஏசினார். "அவன் ரவி சேருக்கு புத்தியில்லன்னா எங்களுக்கும் புத்தி இல்லாமலா போச்சி" என்றார் வாய்க்கு வந்தபடி பேசினார்.

புதன் கிழமை ரவி சேருக்கும் அதிபருக்கும் பெரும் சண்டையாகப் போய்விட்டது. "நீ ஒழுங்கா படிச்சி இருந்தீனா பிரின்ஸிபல் பதவி கிடைக்கும் தானே. நீ ஓ எல்லே ஒழுங்கா பாஸ்பன்னல. பதவிக்காக நாய் மாதிரி அலைஞ்ச.... இப்ப... சும்மா சண்டை புடிக்கிற" என்று பெரிய சத்தமாக ரவிசேர் ஏசினார்.... அதற்குப்பிறகு தான் அதிபர் சற்று அடங்கினார். 'ஸ்கூல் புள்ளக வூட்டு காச கொள்ளையடிக்கிறவன்.... திருட்டுப் பய" என்று பலவாறாக ஏசிவிட்டு சேர் போய்விட்டார். அரைநாள் லீவு போட்டுவிட்டு அதிபரும் போய் விட்டார். அதிபராக வருவதற்கு கல்வித் தகைமை தேவையா. தேவை இல்லையா? என்று வகுப்பில் விவாதம் வைத்தோம். இப்போதைய சூழலில் கல்வித்தகைமை தேவையில்லை என்றே அதிகமானவர்கள் பேசினார்கள்.

10-14.05.2010

கடுமையான மழை, பிள்ளைகளின் வரவு குறைவு என்பதால் பாடங்கள் ஒன்றும் நடைபெறவில்லை.

17 - 21.05.2010

தலவாக்கலை பகுதியில் கற்பிக்கும். ஆசிரியரொருவர் மாணவியோடு தகாத உறவு என்று கேள்விப் பட்டேன். இது மாதிரி எத்தனையோ சம்பவங்கள் இடம்பெறுகின்றன. வெளிவராத சங்கதிகள்... ஆயிரமாயிரம். செல்போனில் ஊத்தையான படங்களை டவுன்லோட் செய்து மாணவிகளுக்கு காட்டுதல்... மணித்தியாலக் கணக்கில் போனில் பேசிக் கொண்டிருத்தல்.... புளுபிலிம் சீடி பரிமாற்றிக் கொள்ளுதல்.... இப்படி எத்தனையோ விடயங்கள். என்.சி. என்ற புகையிலைத் தூளை வாயில் கொட்டிக் கொண்டு 'உம்'மென்று இருப்பது... வாயைத் திறக்காமலே சைகை காட்டுதல்... இவை தானே பாடசாலை வாழ்வாக போய்விட்டது.

24 - 28.05.2010

திங்கட்கிழமை புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியை ஒருவர் திருமணம் முடித்த ஒருவரோடு தகாத உறவை வைத்திருப்பதாகவும் அதுபற்றிக் கலந்துரையாடுவதற்காக சகல ஆசிரியர்களும் அதிபர் காரியாலயத்துக்கு அருகிலுள்ள அறையில் கூடியிருந்தார்கள். சகல பிள்ளைகளும் ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தனர். குமார், சே தோழரின் புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்திருந்தான். அதிலுள்ள விடயங்களை வாசித்து கலந்துரையாடினோம். சேயைப் போல வருவேன் எனப் பலரும் கூறினார்கள். சேயின் உருவம் என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. அவரது அழகு சிரிப்பை பார்க்க பொறாமையாக இருந்தது. வெசாக் எக் காலத்திலும் இல்லாதவாறு தோரணங்களும், கொடிகளும் மின் விளக்குகளும், காணப்பட்டன. இராணுவ வெற்றியை கொண்டாட முனைந்த போது பெருமழை பெய்து தடுத்துவிட்டதால்... அந்த வெற்றியை இந்த வெசாக் காலத்தில் வேறுவிதமாக வெளிப்படுத்தியதை என்னால் உணர முடிந்தது. வரலாறு எப்பொழுதும் நேர் கோட்டில் பயணிப்பது இல்லை. பாசிசம் வென்ற வரலாறும் இல்லை என்பதை நினைத்து மௌனமாக இருந்தேன். குமார் கொடுத்த சேயின் வாழ்க்கை பற்றிய புத்தகத்தைத் தொடர்ந்து படித்தேன்.

# குறிஞ்சிக் களத்தில் கருத்துப் பகிர்வு

புதிய மலையகம்-மாத்தளைக் கிளையின் ஏற்பாட்டில் கடந்த 28.05.2010 அன்று, எல்கடுவ தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் "குறிஞ்சிக் களம்" என்ற மாதாந்த தொடர் கருத்துப் பகிர்வு வெகு சிறப்பாக நடைப்பெற்றது.

அன்றைய நிகழ்வின் தொனிப்பொருளாக அமைந்த விடயம் "மலையக மக்கள் பற்றிய ஓர் வரலாற்று பார்வை" என்பதாகும். மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரச, அரசசார்பற்ற, உத்தியோகத்தர்கள் என பலரும் இந் நிகழ்விற் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தினர். "மலையக மக்கள் பற்றிய ஓர் வரலாற்று பார்வை" என்ற ஆய்வியல் ரீதியான முன்வைப்பை நிகழ்த்தியவர் ஹட்டன் சமூக வள நிலைய வெளிக்கள உத்தியோகத்தரும் வளர்ந்து வரும் சமூக ஆய்வாளருமாகிய, திரு.A.C.R. ஜோன் ஆவார்.

புதிய மலையகம்-மாத்தளைக் கிளைப் பொறுப்பாளர்களாகிய பெ. சுரேன், செ. மோகன் மற்றும் புதிய மலையகம் உறுப்பினர்கள் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

அடுத்த "குறிஞ்சிக் களம்" நிகழ்வை எதிர்வரும் 20.6.2010 அன்று எல்கடுவையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமூக ஆர்வலர்களையும் தொழிலாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'பயங்கரவாதத்துக்கு' வழிவகுத்த காரணங்களையும் அதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவையும் மீளிணக்கத்திற்கான பாதையையும் கண்டறியும் சுயாதீன ஆணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அமைத்துள்ளார். எட்டுப் பேரைக் கொண்ட அக்குழுவிற்கு முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாணைக்குழு 21-02-2002 அன்று நடைமுறைக்கு வந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை தோல்வியடைந்ததற்கான நிகழ்வுகளையும், சந்தர்ப்பங்களையும் அதன் விளைவாக 19-05-2009 வரை இடம்பெற்ற நிகழ்வுகளையும் கண்டறியும். அவற்றுக்கு தனிப்பட்ட ஆள் அல்லது குழு அல்லது நிறுவனம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொறுப்பை கொண்டுள்ளதா என்பதையும் அறியும். அந்த நிகழ்வுகளிலிருந்து நாங்கள் படிக்க வேண்டிய பாடங்கள், அவை மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அணுகுமுறைகளை அறிந்து கொள்ளும். அதனால் பாதிக்கப்பட்ட நபர்கள் அல்லது அவர்களை தங்கி வாழ்வோர் அல்லது அவர்களின் மரபுரிமையாளர்களை மீள நிலை நிறுத்துவதற்கான வழிகளையும் கண்டறியும்.

அத்துடன் மேற்படி சம்பவங்கள் எதிர்காலத்தில் மீள நடக்காமல் இருக்கும் வகையில் தேவையான, நிறுவன ரீதியான, நிர்வாக ரீதியான, சட்டவாக்க ரீதியான ஏற்பாடுகளையும் சிபாரிசுகளையும் மேலும் தேசிய ஒற்றுமையையும், மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தும் சிபாரிசுகளையும் செய்யும்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் பகிரங்கமாக பொதுமக்கள் பார்வையிடக் கூடியதாகவன்றி இரகசியமாகவே நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நெருக்கடிகளும் அழுத்தங்களும் அதிகரித்துள்ள நிலையிலேயே அறிவித்துள்ளது. 2009 மே மாதம் முடிவிற்கு கொண்டவரப்பட்ட அரசாங்க இராணுவ நடவடிக்கையின் போது போர்க்குற்றம் புரியப்பட்டுள்ளதா என்பதை கண்டறியும்படி இலங்கைக்கு அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகள் அழுத்தம் கொடுத்து வந்தன. இராணுவ நடவடிக்கைகள் முடிவுற்ற போதும் போர்க்குற்ற விசாரணைகள் தேவை இல்லை என அரசாங்கம் அறிவித்து வந்தது. இந்நிலையில் ஐ.நா. சபை இது பற்றி ஆராய நிபுணர்கள் ஆலோசனைக் குழுவொன்றை நியமிக்க தீர்மானித்தது. அரசாங்க இராணுவ வெற்றியின் ஒரு வருடப் பூர்த்தியை மே 19 கொண்டாடப்படவிருந்த போதும் கடு மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டு யூன் 18இல் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்போது தான் ஒரு சுயாதீனக்குழுவை அமைத்திருக்கும் போது ஐ.நா. நிபுணர்கள் ஆலோசனைக் குழுவை நியமிக்கத் தேவை இல்லை எனக் குறிப்பிட்டு ஜனாதிபதி உரையாற்றினார்.

இந்த வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா.சபையின் அரசியல் விவகாரங்களுக்குரிய செயலாளர் நாயகம் லின் பாஸ்கோ கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இலங்கை விவகாரங்கள் தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்கள் குழுவை செயலாளர் நாயகம் பான் கீ மூன் வெகு விரைவில் நியமிப்பார் என அறிவித்தார்.

இந்த அறிவிப்பானது இலங்கையின் இறைமையில், உள்விவகாரங்களில் தலையிடுகின்ற செயல் எனப் பேரினவாதிகள் கூறுகின்றனர். இவ்வாறான ஒரு குழுவை நியமித்து விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நா.சபைக்கு அதிகாரம் இல்லை என்று இலங்கையின் சட்டமா அதிபர் மொஹான் பீரிசும், இன்னொரு சந்தர்ப்பத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும் ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் எடுத்துக் கூறியுள்ளார். அதனை அவர் கொள்ளவில்லை.

இலங்கை ஐ.நா.சபையின் பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. அத்துடன் இலங்கை ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுமாகும். எனவே இலங்கை நடவடிக்கைகளின் போது போர்க் குற்றம் புரியப்பட்டதா என விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது இலங்கையின் பொறுப்பாக கொள்ளப்பட வேண்டும்.

## சர்வதேச உள்நாட்டு விசாரணைகளும் பாதிக்கப்பட்டோருக்கான நீதியும்

இதில் ஏகாதிபத்தியங்களின் அக்கறைகள் அவற்றின் நலன் சார்ந்ததாகும். அவை இலங்கை அரசாங்கத்தை தங்கள் பிடிக்குள் வைத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். ஐ.நா. சபை கேட்கிறதோ இல்லையோ குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கையின் போது 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அச்சந்தர்ப்பத்தில் சர்வதேச தராதரங்கள், நியமங்களுக்கேற்ப போர்க் குற்றங்கள் புரியப்பட்டுள்ளதா என்பதை விசாரிக்க வேண்டும் என்பது மக்கள் சார்பான நியாயமான, நேர்மையான கோரிக்கையே ஆகும். இதனை ஐ.நா. சபையினது அல்லது ஏகாதிபத்தியங்களின் அழுத்தங்களுக்காகச் செய்ய வேண்டுமென்பதில்லை. இலங்கை அரசாங்கம் உள்நாட்டிலேயே அவ் விசாரணைகளை நியாயமான முறைகளில் மேற்கொள்ள முடியும். ஆனால் அதனை மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் மேற்கொள்ளப் போவதில்லை. இதனால் ஐ.நா.வும் ஏகாதிபத்தியங்களும் அழுத்தங்களை கொடுப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கச் செய்து வருகின்றன.

ஐ.நா சபையினது அழுத்தங்களும், ஐ.நா பொதுச் செயலாளர் நியமித்திருக்கும் குழுவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதற்கு துணைபுரியும் என்று நம்புவதற்கில்லை. அந்த அழுத்தங்களும் இல்லாது போகின்றபோது இலங்கை அரசாங்கம் மேலும் தன்னிச்சையாக செயற்படுவதை எல்லோரும் அனுமதிப்பதாக அமையும். இலங்கையுடன் நட்புறவைப் பேணும் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாக கூறும் அரசுகள் போர்க்குற்றம் பற்றி விசாரிப்பதன் மூலமே ஏகாதிபத்திய, ஐ.நா தலையீட்டை தவிர்க்கலாம் என்பதை இலங்கைக்கு எடுத்துக் கூறாமல், நிபந்தனையற்ற வகையில் இலங்கையை ஆதரித்து கூறும் மக்கள் விரோத. அடக்குமுறை அரசுகளிடம் வேறெந்த சரியான நிலைப்பாட்டையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் விதிவிலக்காக ஓரளவாவது மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயற்படும் அரசுகள் ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கான ஒத்துழைப்பிற்கப்பால் இலங்கை அரசின் மக்கள் விரோத செயற்பாடுகளை கண்டிக்காமல் விடுவது அல்லது போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்காமல் விடுவது நியாயமானதாக இராது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நியமித்துள்ள ஆணைக்குழுவானது தெளிவற்றதாகும். அது குறிப்பாக போர்க் குற்ற விசாரணைகள் பற்றி எதையும் குறிப்பிடவில்லை. அத்துடன் இவ்வாணைக்குழுவின் நம்பகத்தன்மை பற்றி எல்லோருமே கேள்வி எழுப்புகிறார்கள். ஏற்கனவே பிரச்சித்தமான சர்வதேச புத்திஜீவிகள் முன்னிலையில் திருகோணமலை மாணவர்கள் கொலை, என்.ஜி.ஓ. பணியாளர்கள் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டது தெரிந்ததே.

ஜப்பானிலிருந்து இங்கு வந்திருந்த தூதுவர் யூசூசி அகாசி ஐ.நா. செயலாளர் நாயகம் நியமிக்கவிருக்கும் ஆலோசணை குழுவை ஏற்பதாகவும் அதனால் அக்குழு இலங்கை ஜனாதிபதி நியமித்திருக்கும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது என்றும் கூறியுள்ளார். இதன் மூலம் ஐ.நா. சபையின் நடவடிக்கைக்கு ஜப்பானின் ஆதரவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

இலங்கை அரசாங்கம் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள மறுப்பதுடன், இராணுவநடவடிக்கைகளின் போது வெள்ளைக் கொடிகளை பிடித்துக் கொண்டு சரணடைய வந்தவர்களை இலங்கை இராணுவம் சுட்டுக்கொன்றதாக ஜெனரல் சரத் பொன்சேகா கூறியதாக வெளிவந்த செய்திகளையும் மறுத்து வருகிறது. அவ்வாறான தகவலை தெரிவித்த சரத் பொன்சேக்கா தேசத்துரோகி ஆவார் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். வெள்ளைக் கொடி விவகாரத்தை சரத்பொன்சேகா முன்னெடுப்பாராயின் அவர் தூக்கி லிடப்படுவார் என்று பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். இவற்றின் மூலம் அரசின் நிலைப்பாட்டை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும். போர்க்குற்ற விசாரணைகளில் இலங்கைக்கு மட்டும் விலக்களிக்கப்படலாகாது. பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதவிடத்து அம்மக்களுக்கு ஐ.நா.சபையின் நடவடிக்கைகளாலோ, ஜனாதிபதியின் நடவடிக்கைகளாலோ, நீதி கிடைக்கப் போவதில்லை.

**ஆசிரியர் குழு**

புதிய பூமி
சுற்று 17 யூன் - யூலை 2010 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 131
இல. 47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org

# மகிந்த சிந்தனையின் போக்கும் மாற்று அரசியலின் தேவையும்

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு அசைக்க முடியாத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. அவரது தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆறு வருடங்களுக்கு பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை நடாத்திச் செல்வதற்குரிய அறுதிப் பெரும் பான்மையைக் கொண்டிருக்கிறது. அக் கட்சியில் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிட்டவர்களில் பெரும் பகுதியினர் பதவிச் சுகங்களை முதன்மைப் படுத்துபவர்களே அன்றி நாட்டு நலன், மக்கள் துயரங்கள், தேசிய இனங்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பவர்கள் அல்லர். தொழிலாளர்கள் விவசாயிகள் உழைக்கும் மக்களுக்காக நேர்மையாகக் குரல் கொடுக்கக் கூடியவர்களும் அல்லர்.

அதே வேளை ஜனாதிபதியானவர் தனது குடும்ப ஆதிக்கத்தை அரசியலில் நிலை நிறுத்தி வலுப்படுத்துவதில் முழுக் கவனத்தையும் குவித்து வந்துள்ளார். அவை பற்றி விலாவாரியாக எடுத்துக் கூறவே வேண்டியதில்லை. யாவும் பகிரங்கமானதேயாகும். அவ்வாறே அரசு யந்திரத்தினதும் அரசாங்க நிர்வாகத்திலும் இக் குடும்ப ஆட்சியின் பிடிகள் மிக இறுக்கமாகப் படிந்திருக்கும் அளவிற்கு நியமனங்கள் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றன. அத்துடன் பேரினவாதமானது நன்கு நிறுவனமயப்பட்டதாகவும் இறுக்கமுடையதாகவும் இருந்து வரும் சூழலும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் மிகச் சாதகமாக இருந்து வருகின்றது. இது ஆளும் வர்க்க அதிகார அரசியலுக்கு பக்கபலமான ஒன்றாகும். இவ்வாறு ஆட்சி அதிகாரப் பலமும் அதனைத் தக்கவைக்கும் குடும்ப ஆதிக்கப் பிணைப்பும் கொண்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிப் பயணம் எத் திசையில் செல்லத் தொடங்கியிருக்கிறது என்பது ஆழ்ந்து நோக்க வேண்டியதாகும்.

முப்பது வருட யுத்தத்தின் இறுதி ஆண்டுகளும் அதன் வெற்றியும் மகிந்த சிந்தனைக்கு ஒரு ஏறுமுகத்தை ஏற்படுத்தியிருந்தன. அதனை வைத்தே மாகாண சபைகள், ஜனாதிபதி பதவி, பாராளுமன்ற ஆட்சி என்பன வெற்றி கொள்ளப்பட்டன. இவற்றால் ஆட்சி அதிகார மமதையும் தம்மால் எதையும் சாதிக்க இயலும் என்ற அதிகார இறுமாப்பும் தோன்றியுள்ளன. இவ்வாறு தான் அன்று ஜே.ஆர். ஆறில் ஐந்து பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் நிறைவேற்று அதிகார ஆட்சி முறையைக் கொண்டு வந்து பதினேழுவருட இருண்ட ஆட்சிக்கு வழி வகுத்தார். அன்றைய காலகட்டத்தில் நாடு இரத்தக் குளிப்பையே கண்டது. மகிந்த சிந்தனை ஆட்சியின் கீழும் அதே இரத்தக் குளிப்பைத்தான் நாடு கண்டு நிற்கிறது. அன்றும் இன்றும் பலிகொள்ளப்பட்டவர்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக மக்களான சாதாரண உழைக்கும் மக்களே ஆவார். அதிலும் ஆகக் கூடிய பேரழிவையும் பேரவலங்களையும் தமிழ் மக்களே பெற்றுக் கொண்டனர்.

இத்தனைக்குப் பின்பும் பேரழிவுக்குக் காரணமான இனமுரண்பாடு தோற்றுவித்த தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற பேச்சுக்கே இடம் வைக்கப்படவில்லை. யுத்தம் முடிந்த நிலையில், புலிகள் அழிக்கப்பட்ட சூழலில், நாட்டின் அபிவிருத்தியும் சமாதானமுமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பேசப்பட்டு வந்தாலும், நடைமுறையில் அவ்வாறான விடயங்கள் எந்தளவிற்கு திட்டமிட்ட வழிகளில் முன்னெடுக்கப் படுகின்றன என்பது கேள்வி மேல் கேள்விகளேயாகும்.

சமாதானம் என்பது நாட்டின் இன முரண்பாட்டுடனும் அது தோற்றுவித்த தேசிய இனப் பிரச்சினையுடனும் இணைந்த ஒன்றாகும். இனப் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு எட்டப்படாமல் உண்மையான சமாதானம் உருவாக முடியாது. ராணுவ ஒடுக்குமுறை மூலம் மக்களை மௌனிக்க வைத்துவிட்டு அதனை சமாதானத்தின் வெளிப்பாடு எனக் கூறுவது ஏமாற்றுத்

**வெகுஜனன்**

தனமானதாகும். அல்லது யுத்த சூழலில் நிலவிய தடைகளை அகற்றி போக்குவரத்தையும் விநியோ கத்தையும் இலகுவாக்குதன் மூலம் இயல்பு வாழ்வை முழுமைப்படுத்தி விடமுடியாது. எனவே எவ்வாறு தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கொண்டுவர இயலாது என்பது இன்று வரை ஆட்சி அதிகார சக்திகளால் உணரப்ப டவே இல்லை. அவர்கள் ஒருபோதும் உணரப் போவதில்லை. ஏனெனில் அவர்களது பேரினவாத முதலாளித்துவ ஆட்சியின் அடிப்படையானது உயர்வர்க்க மேட்டுக்குடி ஆட்சி அதிகாரமேயாகும்.


மேலும் நாட்டு மக்கள் எதிர் நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கோள்வதற்கு எவ்வித முன்முயற்சியும் இல்லை. பொருட்களின் விலைகள் நாளாந்தம் ஏறிக் கொண்டிருக்கின்றன. அவ் விலைகளுக்குப் பொருட்களை வாங்கும் சக்தியை மக்கள் இழந்துள்ளனர். விலை உயர்வுக்கு ஏற்ற சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் வாக்குறுதி வழங்கியபடி 2500 ரூபா சம்பள உயர்வு பற்றி அரசாங்கம் வாய் திறக்க மறுக்கிறது. அதே வேளை உயர் வர்க்கத்தினரின் கொள்வனவுக்குரிய சொகுசு வாகனங்களும் ஆடம்பர நுகர்வுப் பொருட்களுக்கும் ஐம்பது வீத வரிக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்ந்து கூட்டப்பட்டே வருகின்றது. அரிசி, மா, சீனி, பாண், பால்மா, எரிபொருட்கள் உள்ளிட்ட அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக விலைகள் அதிகரிக்கப்பட்டவாறே உள்ளன. இதுவரை காலமும் யுத்தத்தைக் காட்டி பொருளாதாரக் கோரிக்கைகளை மறுத்து வந்த மகிந்த சிந்தனை ஆட்சியை நோக்கி உள்ளார்ந்த நிலையில் வளர்ந்து கொண்டிருக்கும் மக்களது அதிருப்திகள், விரைவில் கோரிக்கைகளாகி போராட்ட வடிவைப் பெறவே போகின்றன. தொழிற் சங்கங்கள் 2500 ரூபா சம்பள உயர்வுக்கு வீதியில் இறங்கப் போவதாக ஏற்கனவே அறிவித்துள்ளன. அரசாங்கத்துடன் இருந்து வரும் தொழிற்சங்கங்கள் எத்தனை நாட்களுக்குத் தான் முட்டுக் கொடுத்து தொழிலாளர்களை திசை திருப்பி வைத்திருக்க முடியும். கூர்மையடைந்து வரும் பொருளாதார நெருக்கடிகள் வளர்ச்சி பெற்றுத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் வீதியில் இறங்க வைக்கும் நாட்கள் அதிக தூரத்தில் இல்லை. அவ் வேளை மகிந்த சிந்தனை அரசாங்கம் மக்களது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்கப் போவதில்லை. பதிலுக்கு அடக்கு முறைகளை ஏவிக் கொள்ளவே செய்யும். அதற்காகவே அவசரகாலச் சட்டமும் பயங்கரவாத ஒழிப்புச் சட்டமும் பேணி வரப்படுகிறது. தமிழ் மக்களைப் பதம்பார்த்து பலிவாங்கிவந்த அச்சட்டங்கள் சிங்கள மக்களை சும்மாவிட்டு வைக்கப் போவதில்லை. 1988-1989 காலகட்டத்தில் இச் சட்டங்கள் மூலம் நடாத்திய இரத்தக் குளிப்பை சிங்கள மக்கள் நன்கு அனுபவித்தவர்களாவர்.

இவ்வாறான மக்கள் அதிருப்திகளும் எதிர்ப்புகளும் வளர்ச்சி பெற்று வெடித்தெழுவதற்கு முன்பாக ஜனாதிபதியானவர் தனது அதிகார இருப்பின் நீடிப்பிற்கும் தனக்குப்பின் தன் குடும்ப ஆட்சியின் தொடர்ச்சிக்கும் வழிவகை தேடுவதற்கு முனைந்து நிற்கின்றார். அதற்காகவே அரசியலமைப்புத் திருத்தம் என்பதை முன்வைப்பதில் வேகம் காட்டப்படுகிறது. மூன்றாவது, நான்காவது தடவையாகவும் பதவிக்கு வரக்கூடியதான அரசியலமைப்புத் திருத்தம் பற்றியே ஆலோசிக்கப்படுகிறது. தானும் தனக்குப் பின் தனது மகனும் பதவியில் இருப்பதற்கே அரசியலமைப்புத்

தொடர்ச்சி 10ம் பக்கம்

# ஹந்தானை போராட்டமும் தொழிலாளர் எழுச்சியும்

உழைக்கும் பாட்டாளிகளே நாட்டின் பலம். இது வெறும் கொள்கைக் கூற்றாகவே இருந்து வருகிறது. இலங்கையின் முதுகெலும்பு தேயிலை. அதாவது இலங்கையின் உற்பத்திப் பொருளாதாரத்தில் பாரியளவு பங்கினை வகிப்பது தேயிலை ஆகும். அவ் வகையில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கொட்டும் மழையாயினும், கொழுத்தும் வெயிலிலும், அட்டைக்கடியிலும் குளவிக் கொட்டியும், பாம்புக்கடியிலும், தம்மை தியாகம் செய்து தொழிலில் ஈடுபட்டு, பச்சைத் தேயிலை சிவப்பாய் மாறிப் பருகும் நிலை வரை பாடுபட்டு உழைக்கின்றனர்.





கிட்டத்தட்ட 200 வருடகால வரலாற்றைக் கொண்ட மலையக சமூகம் படுகின்ற பாடோ, வார்த்தையில் சொல்ல இயலாது. சமூக, பொருளாதார, சுகாதார, கல்வி, கலாச்சார, அடிப்படையில் பாரியளவில் பின் தங்கிய நிலையிலேயே இருந்து வருகிறது. உழைக்கும் இயந்திரமாயும், ஓட்டுப்போடும் இயந்திரமாகவும் எம் மக்கள் விற்கப்படும் அவலம் பச்சைத் தேசத்தில் தொடர்கிறது. தொழிலாளர்கள் ஒன்றுபட்டு முதலாளித்துவத்தை முறியடிக்கும் போது தான் விடியலின் கீதத்தை உலகறியும். "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை" என மாமேதை கார்ல் மார்க்ஸ் கூறிய வார்த்தைகள் கடல்கடந்து நெடுங்காலத்தின் பின் - ஹந்தானை தொழிலாளர்களின் செவியில் விழுந்ததோ என்னவோ அங்கேயொரு போராட்டம் வெடித்தது.

கண்டியிலிருந்து, கிட்டத்தட்ட 3 கி.மீ. தூரமேயுள்ள தோட்டம் தான் ஹந்தானை. இங்குள்ள தோட்டக் காரியாலயத்திற்கு முன்னால், தொழிலாளர்கள் பதாகைகளுடன் மேடையொன்றை அமைத்து அதில் நால்வருமாக அமர்ந்து கூடி இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. நாம் அங்கு சென்ற போது 2 போலிஸ் வாகனங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. விடயம் என்னவென்று, தொழிலாளர் ஒருவருடம் வினவினோம். எங்களுக்கு சேரவேண்டிய பணத்தினை J.E.D.B. (Janatha Estate Development Board) கையாடல் செய்துவிட்டதாக மு. குமாரசாமி எனும் தொழிலாளி கூறினார். தெளிவாக விடயத்தை அறிய, போராட்டத்தை ஏற்பாடு செய்த தலைவர்களை அணுகினோம். அவர் கூறுகையில், நாங்கள் 3.6.2010 முதல் தொடர்ந்து 6 நாட்களாக, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எமக்கு சேரவேண்டிய EPF, ETF, பென்சன், சேவைக்கால கொடுப்பனவு என்பன கடந்த 2010ல் இருந்து எமது கணக்கில் வைப்பிலிடவுமில்லை, கிடைக்கவுமில்லை. அதாவது எமக்கு சேரவேண்டிய மொத்த தொகை 10,143,627.03 ரூபாயாகும். இனாமாகவோ அல்லது கடனாகவோ கேட்கவில்லை நாங்கள். எங்களது பணத்தையே கேட்கின்றோம் என்று கூறினர். கொஞ்சமேனும் ஈவிரக்கம் இன்றி, எங்களது பணத்தை கையாடல் செய்துள்ளனர் என மு. தனபாலன் எனும் தொழிலாளத் தலைவர் கூறினார். மேலும் அவர் கருத்து தெரிவித்த போது J.E.D.B.யின் கீழ் 16 தோட்ட பிரிவுகள், காணப்படுகின்றன. ஆனால் ஹந்தானை தோட்டம் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அனைத்து தோட்டங்களுக்குமே இந்நிலை தான். ஹந்தானை தோட்டமானது கீழ்வரும் பிரிவுகளை கொண்டுள்ளது. அவை

1. Kithulmullaidiv. 2. Hanthana Factory Division
3. Hanthana West Division 4. Hanthana Top Division
5. Hanthana Middle Division 6. Ooragala Division
7. Nanthana Division என்பனவாகும். இங்கு மொத்தமாக 630 பேர் தொழில் புரிகின்றனர். இறந்தோர் உட்பட 183, பேருக்கான சேவைக்கால பணம், EPF பெறாதவர்கள் தொகையும் தரப்படாமல் உள்ளது.

பின்னர் M.K.R. டியூடர் என்பவர் தகவல் தருகையில் நான் ஹந்தானை தோட்ட பாதுகாப்பு ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் என்றார். இது என்ன தொழிற் சங்கம் என வினவினோம். அப்பொழுது அவர்கள் கூறிய பதில் எம்மை, ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இது நாங்கள் உருவாக்கிய தொழிற்சங்கம், இங்கு பல தொழிற்சங்கங்கள், தொழிற்படுகின்றன. அதாவது,

1. இ.தொ.கா
2. தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம்
3. இலங்கை பொது சேவையாளர் சங்கம்
4. மலையக மக்கள் முன்னணி
5. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தொழிலாளர் சங்கம்

என்பனவாகும். நாம் பலதடவை இந்த தொழிற்சங்களிடம் முறைப்பாடு செய்தும் பலனில்லை, அனைத்து தொழிற்சங்கங்களும் எமக்கு தரும் பதில், 'ஜனவசம' விடம் பேசியுள்ளோம். அவர்களிடம் பணம் இல்லை, பணத்தை விரைவில் மத்திய வங்கியில் வைப்பிலிடுவார்கள்" என்பதேயாகும். அதை, மேலும் பல அமைச்சர்கள், மகாண சபை உறுப்பினர்கள் கவனத்திற்கு உட்படுத்தியுள்ளதுடன் அவர்களை இங்கு அழைத்தும் வந்துள்ளனர். 2001ல் இருந்து கீழ் வருவோர் தமது தோட்டத்திற்கு வருகைத் தந்துள்ளனர். சரத் அமுனுகம, S.B. திசாநாயக்க, மஹிந்தானந்த அலுத்கமகே, துரை மதியுகராசா, லொஹான் ரத்வத்த, லக்ஷ்மன் கிரியெல்ல, மகிந்த அபேகோன், ராஜரட்ணம் போன்றோர் வந்துள்ளனர். அத்துடன் மல்வத்தை பீட மகாநாயக்க தேரருக்கும் இவ் விடயம் தொடர்பாக அறிவித்துள்ளோம். ஆனால் பலன் ஏதுமில்லை. அரசியல்வாதிகள் எம்மை தேர்தலுக்கு மாத்திரமே பயன் படுத்துகின்றனர். எனத் தொழிலாளர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

ஆகவே இனி எந்த தொழிற்சங்கத்தையும் நம்பி பலனில்லை என அறிந்த நாங்கள் இணைந்து உருவாக்கிய தொழிற்சங்கம் தான் கந்தானை தோட்ட பாதுகாப்பு ஒன்றிணைந்த தொழிற்சங்கம்.

(Security of the Joint Trade Union. Hanthana Estate) ஆகும். ஏற்கனவே நாங்கள் ஏனைய தொழிற் சங்கங்களுக்கு கொடுத்து வந்த சந்தாக்களையும் நிறுத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்.

எமது தொழிற்சங்கத்தில் உள்ள முக்கிய உறுப்பினர்களை மு.தங்கராஜ், சு.செல்வராஜ், S.P. ராசலிங்கம், கலைஞர் அ.பச்சமுத்து ஆகியோர் தொடர்ந்து 6 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து போராட்டத்தை செழுமைப்படுத்தி வருகின்றார். அத்துடன் இப் போராட்டத்தை நசுக்கவும் பல நடவடிக்கைகள் எமக்கெதிராக நடைபெற்றன. அதாவது பொலிஸாரும் CIDயினரும், எம்மை விசாரணை செய்தனர். அத்துடன் 8 தலைவர்களை காரியாலயத்திற்குள் அழைத்து கைது செய்ய முயற்சித்தனர்.

பின் அனைவரும் எதிர்க்கவே அது கைவிடப்பட்டது. அதற்கு நிமல் ரட்ணாயக்க, சமிந்த பண்டார என்ற இரு தோட்ட உதவி முகாமையாளர்களும் உடந்தையாவர். இன்னொருவர் J.E.D.B.யின் Chariman தனசிறி தலுவத்த என்பவராவார். இவர் 3வது தடவையாக இப் பதவியில் இருக்கின்றார்.

இவர் தான் எமக்கு பதில் தரவேண்டும். இவர் முன்னைய காலப்பகுதியில் எமக்கு பணம் தருவதாகப் பொய் கூறிய வராவர். தொழிலாளர்கள், யார் என்ன செய்தாலும் நாம் எமது கோரிக்கையில் உறுதியாக உள்ளோம் என்றார்கள். அத்துடன் துணிச்சலாக முன்வந்து பேட்டி தந்த V.G. சந்திராவதி எனும் பெண்மணி எங்களை இனியும் ஏமாற்ற முடியாது. அரசாங்கம் எங்களை ஏன் இப்படி செய்கின்றது என்றும் தெரியவில்லை. நாங்கள் ஏழைகள் நாங்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தையே கேட்கின்றோம். என மனவருத்தத்துடன் கூறினார்.

இலங்கை அரசாங்கம் அபிவிருத்திகள் பல செய்கின்றோம். ஒப்பந்தங்கள் செய்கின்றோம். வாகன வரியை நீக்கியுள்ளோம் என பலவாறு தம்பட்டம் அடித்துக் கொள்கின்றது. அத்துடன் "ஐபா" என்கிற சினிமா நிகழ்விற்கு அரசாங்கம் பல கோடிக் கணக்கான பணத்தை செலவிடு கின்றது.






இது என்ன நியாயம். மக்கள் கஷ்டத்தை அறியாத எந்த அரசாங்கமும் நிலைத்ததில்லை. மக்களுக்காகத் தான் அரசாங்கம், அரசாங்கத்திற்காக மக்கள் இல்லை. இதனை அரசாங்கம் அறிந்து கொள்ளவேண்டும். இப்படியான கொடுப்பனவு பிரச்சினைகள் ஹந்தானை தோட்டத்திற்கு மட்டு மல்ல சகல தோட்டங்களுககும் உள்ள. பிரச்சினையாகும். இது ஒரு தோட்டத்திற்கான பிரச்சினையல்ல -- முழு மலையகத்திற்கான பிரச்சினையாக பார்க்கப்பட வேண்டும். தொழிலாள வர்க்கம் சுரண்டப்படுகின்றது என்பதை தொழிலாளர்கள் உணர ஆரம்பித்து விட்டனர்!

செய்தி:பெ. சுரேன், செ. மோகன்,
மாத்தளை - கண்டி புதிய பூமி நிருபர்கள்

# பாதுகாப்புச் செலவுக்கு 20 ஆயிரம் கோடி மீள்குடியேற்றத்திற்கு 2 ஆயிரம் கோடி வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு.

ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை அவதானிக்கும் போது அந் நாடு எத்தகைய அபிவிருத்திப் பாதையில் பயணிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அண்மையில் பாராளுமன்றத்தில் அடுத்த வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டை பிரதமர் சமர்ப்பித்தார். அதில் எல்லாவற்றையும் விட பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையே முதலிடம் வகித்தது. அது 20 ஆயிரத்து 221 கோடியே 74 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவாகும். இவ் ஒதுக்கீடு யுத்தம் இடம்பெற்ற கடந்த ஆண்டின் ஒதுக்கீட்டைவிட 2 ஆயிரத்து 165 கோடியே 74 லட்சத்து 41 ஆயிரம் ரூபா மேலதிகமாகும்.

அதேவேளை மீள் குடியேற்றம்-புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை வெறும் 2 ஆயிரம் கோடியே 43 லட்சத்து 30 லட்சம் ரூபா மட்டுமேயாகும். அத்துடன் சுகாதாரத்திற்கு 5, 309 கோடியே 65 லட்சத்து 48 ஆயிரம் ரூபாவும், கல்விக்கு 2,750 கோடியே 78 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தான் ஏனைய துறைகளிற்கும் குறைந்த தொகைகளே ஒதுக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்றத்திற்கு ஒதுக்கியது 2 ஆயிரம் கோடி என்றால் ஜனாதிபதி செயலகத்திற்கு 6 ஆயிரம் கோடி வழங்கப்படுகிறது.

இவை இன்றைய ஆட்சியில் நாடு எங்கே இழுத்துச் செல்லப்படுகிறது என்பதைத் தெளிவாக்கிறது. 3 லட்சம் மக்களது மீள் குடியேற்றம் நாடு என்ற வகையில் மிக முக்கியம். ஆனால் தமிழர்கள் -- அதிலும் விவசாய தொழிலாளர்கள் என்பதால் -- இன வர்க்க ரீதியில் புறக்கணிக்கப்ப டுகின்றனர். அதே வேளை பாதுகாப்புச் செலவின் அதிகரிப்பின் பிரதான காரணம் நான்கு படைகளின் பராமரிப்பும் ராணுவ ரீதியான உறுதிப்பாடுமேயாகும். குறிப்பாக வடக்கு கிழக்கில் குறிப்பாக வன்னியில் ராணுவ பொலீஸ் பெருமளவில் நிரந்தர முகாம்களாக விஸ்தரிக்கப்படுவதற்கு பல கோடிகள் தேவை என்பதாலேயே இவ்வளவு பெருந் தொகை பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. நாட்டை சர்வாதிகாரத்திற்கும் அப்பால் அப்பட்டமான ஃபாசிச சர்வாதிகாரத்திற்குள் மூழ்க வைக்கவே பாதுகாப்புக்கு இத்தனை ஆயிரம் கோடி கொட்டப்படுகிறது. இது யாருடைய பணம் ஆட்சி அதிகார த்தை சுவைத்து வரும் தலைவர்களுடைய வீட்டுப் பணம் அல்ல நாளாந்தம் மக்களிடம் இருந்து பெருமளவில் கறந்தெடுக்கப்படும் பணமேயாகும். அவ்வாறு மக்களிடம் உறுஞ்சி எடுத்துவிட்டு மக்களுக்கு மீளச் செலவுக்கு ஒரு சில ஆயிரம் மட்டுமே கிள்ளித் தெளிக்கப்படுகிறது. இவற்றை கல்வி, சுகாதாரம், சமூகநலன் போன்றவற்றுக்கு ஒதுக்கிய சிறு தொகைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இவற்றை மக்கள் புரிந்து தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்காத வரை ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் மேன்மேலும் மக்களை வாட்டி வதைத்து தமது ஆளும் வர்க்க ஆட்சியின் இரும்புப் பிடியை இறுக்கிக் கொள்ளவே செய்வர்.

ஆளும் வர்க்கம் மக்களுக்கு எதிராக நடந்து கொள்வதை நியாயப்படுத்த எத்தனையோ நியாங்களை கூறிக்கொள்வர் அவற்றைப் பிரசாரம் செய்ய அரசசார்பு ஊடகங்கள் உண்டு. இதில் அனைத்து ஆளும் வர்க்க கட்சிகளும் ஒன்றேயாகும். யூ.என்.பி வந்தாலும் இதே கதி தான்.

# சிங்கள மக்கள் வெல்லவுமில்லை

# தமிழ் மக்கள் தோற்கவுமில்லை

### பெரும் பான்மை ஆதரவு

தமிழ பேசும் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற அரசியல், சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற அரசியல் என்ற இரு நிலை அரசியல் ஆதரவும் இலங்கையில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்று இங்கே விளக்கத்தேவையில்லை. (இந்தப் பெரும்பான்மை ஆதரவை இந்தத்தரப்புகள் பெற்றவிதத்தைப் பின்னர் பார்க்கலாம்).

கடந்த கால வரலாறு இதைத் தெளிவாகவே சொல்லும். இரண்டு தரப்பிலும் பெற்றிருந்த இந்த ஆதரவுத்தளம் இனமுரண்பாட்டைக் கூர்மைப்படுத்தியிருக்கிறது. இன முரண்பாட்டை வளர்த்தே இந்த



ஆதரவுத்தளத்தை இரண்டு தரப்பும் பெற்றும் இருக்கிறது. காலப்போக்கில் இது முஸ்லிம்களிடமும் வளர்ச்சியடைந்து அதுவும் இரு தரப்பாகப் பிரிந்து இப்பொழுது மூன்று தரப்பாகிவிட்டது.

மேற்படி மூன்று சமூகங்களிலும் செல்வாக்கைப் பெற்றதரப்புகள், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கியோ, நாட்டின் அமைதிக் காகவோ, அந்தந்தச் சமூகங்களின் நலன் குறித்தோ, நேர்மையாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்திக்கவில்லை. செயற்படவும் இல்லை.

இந்தச் சமூகங்களில் ஆதரவைப் பெறுதல் கொண்டு, இந்தச் சமூகங்களுக்கும் நாட்டுக்கும் இந்தத் தரப்புகளின் தலைமைச் சக்திகள் தீமைகளையே செய்திருக்கின்றன. தரப்பாக தமது நலன்களைப் பேணிக்கொண்டு, இனமுரண்பாட்டைக் கூர்மைப்படுத்தி வளர்த்திருக்கின்றன.

எனவே 'மக்களின் பேராதரவு' என்பதை தீர்வை நோக்கிய செயற்பாட்டுக்காக மாற்றி அமைக்காமல், அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளாமல், அவற்றுக்கு எதிர்நிலையில் முன்னெடுத்து போரை உருவாக்கி, வளர்த்து, பெரும் அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. நாட்டை ரத்தக்களரியாக்கியிருக்கின்றன. பொருளாதார ரீதியிலும் வாழ்க்கை நிலையிலும் பெரும்பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

### ஆதரவு பெற்ற சக்திகளின் நிலை

ஆனால், பேரழிவை ஏற்படுத்திய போர் முடிந்த பின்னரும் இந்தச் சக்திகள் அதே வலுவுடன், அதே ஆதரவுடன், அதே பாதையில் பயணிக்கின்றன. அதேமாதிரியே வரலாற்றுக்கும் மக்கள் நலனுக்கும் எதிர்த்திசையில் இயங்குகின்றன. இதுதான் இங்கே கவனிக்கவும் புரிந்து கொள்ளவும் வேண்டிய விசயமாகும்.

இதுவரையில் இந்தச் சக்திகள் காட்டிய வழியில், மக்கள் தமது ஆதரவை வழங்கியும் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என்றால் அந்த வழிகாட்டலின் அர்த்தம் என்ன? அந்த அரசியற் செயற்பாட்டினதும் அதற்கான பங்களிப்பினதும் பெறுபேறு என்ன? இந்தத் தலைமைகளின் பெறுமானம்தான் எத்தகையது? இனியும் இந்தச் சக்திகளுக்கு என்ன தேவையும் அவசியமும் இருக்கிறது? ஆகவே, ஏகபிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசும் எந்தத் தரப்பாக இருந்தாலும் அல்லது தமக்கே அதிக ஆதரவு என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் எந்தத் தரப்பும் எதையிட்டும் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு எந்த விசயமும் இல்லை. எந்த அடிப்படையும் கிடையாது.

### பெரும் ஆதரவின் பெறுமதி

எனவே இது குறித்து மக்கள் சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது. இதுவரையிலும் தாம் வழங்கிய ஆதரவின் பெறுமதி என்னவாகியிருக்கிறது? அதனுடைய இறுதி விளைவு எத்தகையது? தேசியம் என்றும் இன அடையாளம் என்றும் வைத்த நம்பிக்கைகள் இன்று மக்களை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன? இந்தக் கருத்துருவாக்கங்களை ஏற்படுத்திய சக்திகள் இவற்றை அவற்றுக்குரிய அர்த்தங்களில் செயற்படுத்தியிருக்கின்றனவா? அதாவது, இந்தக் கருத்துகளுக்கமைய குறுகிய வரையறைகளைக் கடந்து 'மக்கள் நலன்' என்ற விரிந்த தளத்தில், இன, மத, பிர தேச, சாதி அடையாளங்களைக் கடப்பதற்கு இந்தத் தரப்புகள் உதவியிருக்கின்றனவா? முன்னே வளர்ச்சி பெற்றிருந்த இனவாதத் தைத் தோற்கடிப்பதற்கு முற்போக்குச் சக்திகளை அடையாளங் கண்டு, அந்தச் சக்திகளுடன் இணைந்து மக்களை அணிதிரட்டியிருக்கின்றனவா? ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, இணக்கம், ஒன்றிணைதல், கூட்டுப்பணியாற்றுதல், சேர்ந்து போராடுதல் என்று தமது செயற்பாட்டுக் களத்தை இவை விரித்திருக்கின்றனவா?

இப்படியான கேள்விகள் பலவுண்டு. தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் கூட அவர்களுடைய கடந்த அறுபது ஆண்டுகால 'பெரும்போக்கு அரசியல்' இந்த மக்களுக்கு எதிர்விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கிறது. முஸ்லிம் - தமிழ் உறவில் ஏற்பட்டிருக்கும் விரிசல். வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் பிரிப்பு. இனவாதத்தை ஆயுத மயப்படுத்தியமை. அல்லது இராணுவமயப்படுத்தியமை. சிங்களப் பெரும்பான்மை உளவியலில் தமிழ் மக்கள் பற்றிய எதிர் நிலைச் சித்திரத்தை உருவாக்கியதுடன், அந்த உளவியலில் வெற்றி தோல்வி என்ற பெரும் படிமத்தையும் உருவாக்கியது. அதாவது சிங்களவர்கள் வென்றதாகவும் தமிழர்கள் தோற்றுப்போனதாகவும் இந்தப் படிமம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ்மக்களுக்கும் ஒருவகையான உளவியற்சிக்கலே. இப்படிப் பல.

### வெற்றி தோல்வி யாருக்கு?

இங்கே கவனிக்க வேண்டியது தமிழ் மக்கள் தோற்றுப்போனதோ சிங்கள மக்கள் வெற்றி பெற்றதோ என்பதல்ல. அப்படிக் கருதுவதற்கு யாரும் வெற்றிபெறவும் இல்லை. யாரும் தோற்றுப்போகவும் இல்லை. ஏனென்றால் எந்தப் பிரச்சினைக்கும் எந்தத்தீர்வும் காணப்படவில்லை. அது, இனப்பிரச்சினையாகட்டும் பொருளாதாரப் பிரச்சினையாகட்டும்.

ஆனால், உண்மையில் ஒட்டு மொத்தமாக இலங்கைத்தீவு தோற்றுப் போய் இருக்கிறது. அது பெரும் பின்னடைவையும் நெருக்கடி களையும் சந்தித்திருக்கிறது. உள்நாட்டுப் போர் முடிந்தாலும் இனிமேல் செய்யவேண்டிய அபிவிருத்திக்கான நெருக்கடி, இனமுரண்பாட்டைத்தீர்ப்பதில் உள்ள நெருக்கடி, சர்வதேச அழுத்தங்கள், போட்டிகளின் விளைவான நெருக்கடி என இலங்கை பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. அல்லது கொதித்துக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இதற்கெல்லாம் பின்னணியாகவும் முழுக்காரணமாகவும் இந்தப் பெரும்பான்மை ஆதரவுத்தளமே இருக்கிறது. அதாவது, மக்களை இனரீதியாக சிந்திக்கப் பழக்கி, இன உணர்வைத்தூண்டி, இனரீதியான பிளவுகளை உருவாக்கிய தரப்புகள் நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கின்றன. இனமுரண்பாட்டை வளர்த்த இந்தச் சக்திகள் எப்பொழுதும், உள்நாட்டை பதற்றத்துக்குள்ளும் நெருக்கடிக்குள்ளுமே வைத்திருந்திருக்கின்றன. உள்நாட்டு நெருக்கடியை வெளிச்சக்திகள் தமது ஆதிக்கப்போட்டிக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த இந்தச் சக்திகள் உதவியிருக்கின்றன. அதனால் உள்நாட்டுப் பிரச்சினையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இந்தச் சக்திகள் விளைந்திருக்கின்றன. இப்போதும் அதற்காக முயன்றுகொண்டிருக்கின்றன.

### உயிர் வாழும் தரப்புக்கள்

இந்தப் பெரும்பான்மைத்தரப்பு என்பது எப்போதும் பிரச்சிகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக பிரச்சினைகளிலேயே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழரசுக்கட்சியை எடுத்துக் கொண்டால், அதற்கு எப்போதும் பிரச்சினைகள் தேவை. எந்தப் பிரச்சினைகளையும் அது தீர்க்க முனைந்ததில்லை. அது அந்தப் பிரச்சினைகளை வைத்தே தனது அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறது. அதாவது பிரச்சினைகளில், மக்களின் அவலங்களில்தான் அது உயிர்வாழ்கிறது.

தமிழரசுக்கட்சியின் அரசிலால் தமிழ் பேசும் மக்களோ வடக்கு கிழக்குப் பிரதேசமோ இதுவரையில் எத்தகைய பயனைக்கண்டிருக்

## இ.சி. அன்பரசன்

கின்றன? பொருளாதார அடைவுகளாக இருக்கட்டும் அரசியல் அடைவுகளாகட்டும் எதுவுமே மக்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்திருந்தால் அந்தக் கட்சி அதை நிரூபித்துக் காட்டட்டும். ஆகக் குறைந்தது சிறுபான்மைத் தரப்பினரான தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையான முரண்பாடுகளைக் களைவது, பிரதேசவாதங்களைப்போக்கி, தமிழ்பேசும் மக்கள் என்ற பொது அடையாளத்தின் கீழ் தேசிய உணர்வைக் கட்டி வளர்ப்பது என எதையும் அது செய்யவில்லை. அது மட்டுமல்ல, தமிழ்ச் சமூகத்தில் வலுவாகவே இருக்கும் சாதி, மத வேறுபாடுகளைக்கூட அது போக்கவில்லை. பெண்களுக்கான சமனிலைகுறித்துக்கூட அதனிடம் தெளிவான பார்வைகள் இல்லை.

### தமிழ் முஸ்லீம் இனவாதம்

ஏறக்குறைய இதே நிலைதான் முஸ்லிம் அரசியற் தலைமைகளிடத்திலும் காணப்படுகிறது. சிங்கள இனவாதம் தமிழ் இனவாதத்தின் வளர்ச்சிக்கு எவ்வாறு வாய்ப்பான இடங்களை வழங்கியதோ அதைப்போல தமிழ் இனவாதம் முஸ்லிம் இனவாதத்துக்கும் வாய்ப்புகளை வழங்கியிருக்கிறது. ஆனால், தமக்கு முன்னேயுள்ள இனவாதத்தை முறியடிப்பதற்கு பதில் இனவாதத்தை வளர்ப்பதிலேயே இந்தச் சக்திகள் கவனஞ்செலுத்தியிருக்கின்றன. அதை விடுதலைக்கான மக்களின் தரப்பிலிருந்து எதிர்கொண்டு, ஒட்டுமொத்த மக்கள் ஆதரவுத்தளத்தைக் கட்டமைத்து முறியடிப்பதைப்பற்றி இந்தச் சக்திகள் சிந்திக்கவில்லை. ஏனெனில் முரண்பாடுகள்தான் இவற்றின் உயிர் வாழ்தலுக்கான ஆதாரமே.

### தமிழ்த் தேசிய அரசியல்

எனவே, இத்தகைய வேறுபாடுகளை வைத்துக் கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையைப் பற்றி எந்தத் தளத்திலும் சிந்திக்க முடியாது. என்பதால்தான், விடுதலைப்புலிகளின் போராட்டமும் முப்பதாண்டுகால பெரும் உழைப்புக்குப்பின்னரும் தோல்விகண்டது. அரசியல் தெளிவும் தேசியம் பற்றிய அகன்ற புரிதலும் இல்லாத காரணத்தால் மக்கள் பெரும் பேரழிவுகளைச் சந்திக்க வேண்டியேற்பட்டது. தமிழ்த்தேசியம் என்பது இன்று தமிழ் இனவாதமாகவே சிங்களவர்களாலும் முஸ்லிம்களாலும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப்புரிதலுக்கு 'தமிழ்த்தேசியம்' என்ற சொல்லை வைத்துக் கொண்டு, அரசியல் நடத்திய, நடத்திக்கொண்டிருக்கின்ற, அத்தனை தரப்புகளும் பொறுப்பு.

இனவாதத்தை வளர்ப்பதால், பகை முரண்பாடுகளை கூர்மைப்படுத்துவதால், வாக்குகளை அறுவடை செய்யலாம், அந்த வாக்குகளின் மூலம் தமது ஆதரவுத்தளத்தைப் பெருக்கலாம், அந்த ஆதரவுத்தளத்தின் மூலம் அதிகாரத்தைப் பெற்றுத் தம்மை வலுவாக்கிக் கொள்ளலாம், அந்த அதிகாரத்தின் மூலம் தமது நலன்களைப் பேணிக் கொள்ளலாம் என்ற வாய்பாடும் மூலோபாயமுமே இந்த இனவாதத்தரப்புகளால் கடைப்பிடிக்கப்படும் வழிமுறையாகும். இதுதான் சிங்களக்கட்சிகளிடத்திலும் காணப்படுகிறது.

இது தனியே வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குச் செல்லும் அரசியலில் மட்டுமல்லாது, அதற்கப்பால் ஆயுதந்தாங்கிய, நாடாளுமன்றத்தை நிராகரித்த அரசியலிலும் இருந்துள்ளது. இந்த மனோபாவம் இன்னும் பலரிடமும் காணப்படுகிறது. இது ஏறக்குறைய சாதிய மனோபாவத்தின் விளைவு அல்லது கூறு எனலாம்.

### அரசியலும் ஊடகங்களும்


மக்களுக்கான அரசியல் என்பதை மக்களின் தளத்திலிருந்து, அவர்களுடைய அடிப்படைகளிலிருந்து செய்யவேண்டும். இலங்கையில் அமைதிக்கும் நிரந்தரத்தீர்வுக்கும் மாற்று அரசியல், மெய்யான ஜனநாயக அரசியல், முற்போக்கு அரசியல் ஆகியன தேவை என்ற கருத்து மிக நீண்டகாலமாகவே வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், இந்தக் கருத்தை, இந்த அடிப்படையை வெகுஜன ஊடகங்கள் கவனத்திற்கொள்வதில்லை. மட்டுமல்ல, இந்த மாற்று அரசியற் சிந்தனைக்கு எதிராகவே தமது ஆதிக்கப்பரப்பை - இன ரீதியான அணுகுமுறைகளை ஊக்கப்படுத்தும் போக்கை – மக்களிடம் இந்த வெகுஜன ஊடகங்கள் வளர்த்திருக்கின்றன. இன்னும் இந்த ஊடகங்கள் இந்தப் போக்கிலும் இயல்பிலும்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதற்குக் காரணம் இந்த ஊடகங்களும் முன்னர் நாம் குறிப்பிட்டிருக்கும் இனரீதியான பேராதரவுச் சக்திகளும் அடிப்படையில் ஒன்றாகவே உள்ளன. அரசியலாளர்களுக்கு இந்த ஊடகங்களும் இந்த ஊடகங்களுக்கு அரசியலாளர்களும் மாறிமாறி ஆதரவு, தீனி, பரஸ்பர ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன.

எனவே மக்கள், இந்த இடத்தில் மிகச் சுலபமாக தெளிவைப் பெற்றுக் கொள்ள வேணும். இந்த ஊடகங்கள் இதுவரையிலும் சொன்னவை என்ன? இப்போது சொல்லிக் கொண்டிருக்கும் சேதிகளும் என்ன?

அதைப்போல இதுவரையிலும் தேசிய அரசியலைச் சொல்லிக் கொண்டும் வலியுறுத்திக் கொண்டும் இருந்த அரசியற் சக்திகளால் மக்களுக்கோ நாட்டுக்கோ எந்த நன்மைகளாவது கிடைத்திருக் கின்றனவா? அல்லது, இப்போதோ, இனிமேலோ மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றனவா? என்பதை மக்கள் தங்களுக்குள் கேட்க வேண்டும்.

இதற்குப் பதிலாக மாறிமாறி ஒவ் வொரு தரப்பும் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டே மேலும் காலத்தைக் கழிக்கப்போ



கின்றனவா? இந்தக் காலங்கடத்துதலில் மேலும் மக்கள் பாதிக்கப்படவே போகிறார்களா? நாடும் நிலைமைகளும் மேலும் நெருக்கடிக்குள்ளாகத்தான் போகிறதா?

ஏனெனில, எப்போதும் எந்தப் பாதிப்பும் மக்களுக்கே உரியவையாக இருக்கின்றன. ஆகவே மக்கள் தங்களைக் குறித்து முதலில் விழிப்பாக இருக்க வேண்டும். இந்த விழிப்பு நிச்சயம் மாற்று அரசியலை நோக்கிய பயணத்துக்கு வழியேற்படுத்தும். மாற்று அரசியல் என்பது மக்களுக்கான மக்களின் அரசியலாகும். அதுதான் புதிய ஜனநாயகத்தை நமக்கு அறிமுகமாக்கும். முரண்பாடுகளுக்குப் பதிலாக தீர்வுகளை நோக்கி மக்கள் பயணிப்பதற்கான வழியுமாகும்.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 7

- வெகுஜனன் -

1983ம் ஆண்டு யூலையில் இடம்பெற்ற இன வன்முறையானது அதற்கு முன்பு இடம்பெற்ற இன வன்முறைகளைவிட நாடு தழுவியதாகவும் கொடூரமானதாகவும் காணப்பட்டது. அது தமிழ் மக்கள் அனைவரினதும் மனங்களில் ஆழமான இனப் பிளவுக் காயங்களாகப் பதிந்து கொண்டது. அதன் தாக்கம் இலங்கையின் அரசியல் பொருளாதார சமூகத் தளங்களில் கடுமையான எதிர் விளைவுகளைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்தது. அவற்றை வரிசைப்படுத்தி நோக்குவது பயன் தருவதாகும்.

1. முன்பிருந்தே விரிவடைந்து வந்த இன முரண்பாடுகள் இன வன்முறையுடன் அப்பட்டமான இன ஒடுக்குமுறையாக வளர்ச்சி பெற்றுப் பகை முரண்பாடாக மாற்றம் பெற்றது.

2. பேரினவாத ஒடுக்குமுறை நிறுவனமயப்பட்டதாகி அரசியல் தீர்வு எதனையும் நாடாது ராணுவமயப்பட்ட வழிகளில் முன்செல்லும் போக்கு முனைப்பாகியது.

3. அதன் எதிர்நிலையிலே ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனம் பிரிவினையின் மூலமான தனித் தமிழீழத்திற்கான குறுந் தேசியவாதத்தின் பின்னாற் செல்வதற்கும் மேற்படி இன வன்முறை நிர்ப்பந்தித்தது.

4. அத்துடன் தமிழீழத்தை வென்றெடுப்பதற்கு ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தமிழ் இளைஞர்களுக்கு அதனை விஸ்தரித்து முன்னெடுப்பதற்கு உரிய தளத்தையும் இவ் வன்முறை வழங்கியது.

5. ஜே.ஆரும் அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலகும் முன்வைத்த தனியார்மயம், தாராளமயம், உலகமயமாதல் நிகழ்ச்சிநிரல் இலங்கைக்குள் இலகுவாகவே உட்புகுத்தப் படுவதற்கும் இவ் இன வன்முறை நிகழ்வு மிகச் சாதகமானதாக அமைந்து கொண்டது.


6. தமது பிராந்திய மேலாதிக்கத்திற்கான பாதையில் முன்னேறி வந்த இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையில் தனது தலையீட்டை கொண்டு வந்து ஆதிக்கப்பிடியை வலுப்படுத்துவதற்கான சூழலையும் இவ் வன்முறை தோற்றுவித்தது.

7. அதன் மூலம் இந்தியாவின் பிராந்திய ஆதிக்கம் ஒரு புறமாகவும் அமெரிக்க மேற்குலக ஆதிக்கம் மறுபுறமாகவும் இலங்கையில் வேகம்பெற ஆரம்பித்தன. இதனைத் தத்தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் ஆட்சி அதிகாரம் பெற்ற பேரினவாத முதலாளித்துவ சக்திகளும் தமிழீழத்தை வென்றெடுக்க முன்னின்ற தமிழ் குறுந்தேசி யவாதக் குட்டி முதலாளித்துவ சக்திகளான தமிழ் இளை ஞர்களும் முன்னின்றனர்.

இலங்கையில் தலையிடுவதற்கு காத்து நின்ற இந்தியா, 1983 இன வன்முறைக் காலத்தைப் பயன்படுத்தித் தனது கைகளை அசைக்க ஆரம்பித்தது. அதன் உளவுப் பிரிவான "றோ" (RAW) முற்று முழுதான ஆட்டத்திற்கு தயாரானது. இலங்கைத் தமிழர்களுக்கு இன்னல் வருவதை எவ் வகையிலும் தாங்கிக் கொண்டு இந்தியா சும்மா இருக்கமாட்டாது என்ற விதமான அறிக்கைகள் கடுந் தொனியில் வர ஆரம்பித்தன. அங்கு இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். இங்கு ஜே.ஆர். ஜனாதிபதியாக விளங்கினார். முன்னையவர் சோவியத் யூனியனின் பக்கம் நின்று இந்தியாவைப் பிராந்திய வல்லரசாக்கச் செயற்பட்டவர். அதனால் அமெரிக்காவின் மனக் கசப்பிற்கு உட்பட்டவர். மாறாக, இலங்கையின் ஜே.ஆர். பூரண அமெரிக்க விசுவாசியாக விளங்கி வந்தவர். ஜே.ஆர். 1977ல் பதவிக்கு வந்த நாள் முதல் இந்தியாவையும் இந்திரா காந்தியையும் ஒருவகை வன்மத்துடன் நோக்கி வந்தவர். முன்பு இந்திரா காந்தியையம் அவரது அரசியல் வாரிசான மகன் சஞ்சய் காந்தியையும் "பசுவும் கன்றும்" என நிந்தித்தவர்.

இவ்வாறு இந்திய-இலங்கை ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடு, போட்டிக்கும் இந்தியத் தலையீட்டுக்கும் வழி செய்ய 83ன் இன வன்முறை தகுந்த வாய்ப்பாகியது. வன்முறை பரவிய தொடக்கத்திலேயே அதனை ஜே.ஆரால் தடுக்க முடிந்திருக்கும். ஆனால் தமிழர்களுக்கும் தமிழீழக் கோரிக்கைக்கும் பாடம் புகட்டத் திட்டமிட்டவாறே அவர் நடந்து கொண்டார். தமிழர் மீதான வன்முறையை உடன் நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா வற்புறுத்தியது. அதனால் தமிழர் தரப்பில் இந்தியா நற்பெயரைச் சம்பாதித்துக் கொண்டது. தன் பிராந்திய நலனுக்கான தலையீட்டைக் கருதியே அது அவ்வாறு நடந்து கொள்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கான அரசியல் தொலைநோக்கு பெரும்பாலான தமிழர்களிடம் அன்று இருக்கவில்லை. குறுந்தேசியவாத, பழைமைவாத தமிழ் ஆதிக்க சக்திகள் பரப்பி வந்த "தாய்நாடு" "தொப்புள்கொடி உறவு" போன்ற அர்த்தமற்ற ஆனால் உணர்ச்சி மிகுந்த பரப்புரைகளில் தமிழ் மக்கள் கட்டுண்டு காணப்பட்டனர். அதனை இந்திய ஆளும் வர்க்கமும் அதன் உளவுப் பிரி வான றோவும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

தான் இராஜதந்திர வழிகளில் தலையிடுவதாகக் கூறியே இலங்கை இனப் பிரச்சினைக்கான ஆடுகளத்தில் இந்தியா இறங்கியது. உடனடியாகவே இந்திய வெளிவிவகாரச் செயலாளரான ஜி. பார்த்தசாரதி இந்திரா காந்தியால் கொழும்புக்கு அனுப்பப்பட்டார். அவர் ஒரு தமிழராக இருந்தமை தமிழர் தரப்பில் அதி உற்சாகத்தையும் இந்தியாவிற்கான அடிமை விசுவாசத்தையும் அதிகரிக்க வைத்தது. இலங்கைத் தலைவர்கள் உயர் அதிகாரிகளுடன் பார்த்தசாரதியின் சந்திப்பும் கடுமையான சொற் பிரயோகங்களும் ஜே.ஆர். அரசாங்கத்தை சற்று அதிர்ச்சிக்கு உட்படுத்தி ஆலோசிக்கவும் வைத்தது. அதனால் இலங்கையின் இனப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கான ஆலோசனைகளும் பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து இடம்பெற ஆரம்பித்தன. இதில் ஜே.ஆர். தனது பக்கத்தின் பேரினவாத முதலாளித்துவ காய் நகர்த்தலை மிகுந்த கவனத்துடன் நடாத்தி வந்தார். சிங்கள மக்கள் மத்தியில் இயல்பாகவே இந்திய விரோதம் வரலாற்று வழியாக இருந்து வந்த ஒன்றாகும். டி.எஸ். சேனநாயக்கா முதலாக, பின்வந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைகள் எல்லாமே அதனைப் பயன்படுத்தி வந்தன. அதன் மூலம் அமெரிக்க பிரித்தானிய விசுவாசத்தை இறுகப் பிடிப்பதற்கும் அவர்களுக்கு வசதியாயிற்று.



இலங்கை இனப் பிரச்சினையில் அரசாங்கத்தையும் தமிழர் தரப்பையும் ஒரு தீர்வுக்கான இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரும் அனுசரணையாளராகத் தான் நின்று வருவதாகவே இந்தியா காட்டிக் கொண்டது. மோதலையும் முறிவையும் ஏற்படுத்தாது நடந்து கொள்வதாகவே புது டில்லியின் கொள்கை வகுப்பாளர்கள் தம்மைக் காட்டிக் கொண்டனர். மாறிமாறி இராஜதந்திரிகள் கொழும்புக்கும் டில்லிக்கும் பறந்த வண்ணம் இருந்தனர். இதில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் செயலாளர் நாயகமான அ. அமிர்தலிங்கமும் தமிழர் தரப்பில் இந்திய மத்திய அரசாங்கத்திடம் நம்பிக்கை வைத்துச் செயல்பட்டனர். தானே இந்திரா காந்தியை இலங்கை விடயத்தில் தலையிட வைத்ததாகவும் அமிர்தலிங்கம் பெருமை பேசிக் கொண்டார்.

இவ்வாறு இலங்கை அரசாங்கம் இந்திய ஆளும் தரப்பினர் தமிழர் தலைமைகள் ஆகிய மூன்று தரப்புக்களின் மத்தியில் பேச்சுவார்த்தை என்ற வெளிப்படையான செயற்பாடுகள் நடந்து கொண்டிருந்த அதே வேளை, அதே தரப்புகள், மறைமுகமாகத் திரைக்குப் பின்னால் தத்தமக்குரிய நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் மும்முரம் காட்டினர். இலங்கை அரசாங்கம் தமிழ் இளைஞர் இயக்கங்களின் ஆயுத நடவடிக்கைகளை அடக்குவதற்குப் பெருந்தொகையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததுடன் ராணுவத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்றுவிப்பதிலும் முன்நின்று செயற்பட்டது. முப்படைகளின் எண்ணிக்கையை அதிகரித்து வந்தது. இவ்வாறு, அரசியல் தீர்வில் காட்டாத அக்கறையை ராணுவத்தை பெருக்கிப் பயன்படுத்துவதில் காட்டியது. ஜே.ஆர். நரிக்குணம் படைத்த வெள்ளுடையணிந்த மோசமான பேரினவாத முதலாளித்துவவாதியாகவே செயற்பட்டுவந்தார்.

அதே வேளை, தமிழீழ ஆணை பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான அ. அமிர்தலிங்கமும் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான பரந்துபட்ட சக்திகளை ஐக்கியப் படுத்தி முன்செல்லும் தூரநோக்கும் நிதானமும் மிக்க கொள்கையுடைய தலைமைத்துவமாக இருக்கவில்லை. பழம்பெருமை பேசி "ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை?" என்ற நிலைப்பாட்டில் பழைமைவாத தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் பிரதிநிதிகளாகவே இருந்தனர். தமது இவ் ஆதிக்க நிலைப்பாட்டிற்கு இந்தியாவையும் ஏகாதிபத்திய சக்திகளையும் இறுகப் பற்றியே நின்றனர்.

இலங்கையில் வளர்க்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினையில் தெற்கே பௌத்த சிங்கள பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கச் சக்திகளால் சிங்கள உழைக்கும் மக்கள் திசைதிருப்பப்பட்டு ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். அவ்வாறே வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் தமிழர் பழைமைவாத மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் சக்திகளின் குறுந்தேசியவாதக் கொள்கைகளால் திசை திருப்பப்பட்டு ஏமாற்றப்படட்டு வந்துள்ளனர். இதற்கு தமிழ் மக்களிடையே தோன்றி வளர்ந்த பல்வேறு பெயரிலான ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களும் விதிவிலக்கானவையாக இருக்கவில்லை. அவ்வாறன்றி ஒரு இடதுசாரிப் பாதையிலான மக்கள் போராட்ட இயக்கமாகவும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமாகவும் தமிழ் இளைஞர்கள் முன்செல்வதை தமிழர் ஆதிக்க தலைமைகள் விரும்பவில்லை. அவ்வாறே அவர்களது எசமானர்களான இந்திய அமெரிக்க ஆளும் வர்க்க சக்திகளும் விரும்பவில்லை என்பது ஆழ்ந்து நோக்க வேண்டியதாகும்.


இத்தகைய சூழலில் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய இளைஞர் இயக்கங்கள் 1983ம் ஆண்டு யூலை இன வன்முறையைத் தொடர்ந்து இந்தியா நோக்கிப் பெருமளவில் செல்ல ஆரம்பித்தனர். ஏற்கனவே தமிழ் நாட்டைத் தமது தளமாகப் பாவித்து வந்த தமிழ் இளைஞர் இயக்கங்கள், போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிர்ப்பந்த வேகத்துடன் வந்த இளைஞர்களை உள்வாங்கிக் கொள்வதில் மும்மரம் காட்டின. அப்பொழுது பல பெயர்களில் பத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் இயக்கங்கள் உருவாகி இருந்தன. அவற்றில் படித்த, படிக்காத இளைஞர்கள் பெருமளவில் இணைந்து கொண்டிருந்தனர். இவ்வாறு நகர்ப்புற, கிராம ப்புற இளைஞர்கள் யுவதிகள் வடக்கு கிழக்கில் அனைத்துப் பிரதேச "தமிழர்கள்" என்ற இன-மொழி அடையாளத்துடன் அலைஅலையாக ஒவ்வொரு இயக்கத்திலும் இணைந்து கொணடனர். குறிப்பாக ஆயுதப் பயிற்சிக்காக குறுகிய அகலம் கொண்ட பாக்கு நீரிணையைத் தாண்டித் தமிழ் நாட்டில் இறங்குவதற்காகப் படகுகளில் ஏறிய இளைஞர்கள் தாம் எந்த இயக்கத்தின் படகில் ஏறவேண்டும் என்ற தெரிவு இன்றி எல்லா இயக்கங்களும் தமிழீழத்தை வென் றெடுக்கும் விடுதலை இயக்கங்களே என்ற பெரு நம்பிக்கையுடனே ஏறித் தமிழ் நாட்டில் இற ங்கினர்.

இவ்விடத்திலே ஒரு விடயம் ஆழ்ந்து நோக்க வேண்டிய தாகும். அதாவது இளைஞர் யுவதிகள் என்போர் தனி ஒரு வர்க்கத்தினர் அல்லர். அவர்கள் பல்வேறு வர்க்கப் பின்புலக் குடும்பங்களில் இருந்து வருவோராவர். அத்தகை யவர்கள் வர்க்க, சாதிய குடும்ப சூழலின் கருத் தியல் சிந்தனை நடைமுறைகளுக்கு உட்பட்டவர்களாவர். இன உணர்ச்சியும் பேரினவாத ஒடுக்குமுறைக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற இனவழி மன உணர்வும் ஓர்மமும் மட்டுமே அவர்களை பல்வேறு இளைஞர் இயக்கங் களில் இணைய வைத்தன. அவ்வாறு ஆயிரக் கணக்கில் பல்வேறு இயக்கங்களில் இணைந்த இளைஞர் யுவதிக ளுக்கு எவ்வித அரசியல் போதமூட்டலோ அன்றி எத்தகைய கோட்பாட்டின் அடிப்படையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது என்பது பற்றிய விளக்கமோ கொள்கை வழிகாட்டலோ தரப்பட வில்லை. ஆயுதப் பயிற்சி பெறுவது மட்டுமே முதன்மைப் படுத்தப்பட்டது. இத்தகைய ஆயுதப் பயிற்சியானது சிங்கள ராணுவத்திற்கு எதிராகப் போராடி தமிழ் ஈழத்தை வென்றெடுப்பதற்கு என்ற மிகக் குறுகலான விளக்கமே அளிக்கப்பட்டது. இவ்வாறான ஆரம்பம் இந்திய தலையீட்டிற்கே வழிவகுத்தது. இது பற்றி அடுத்த தொடரில் காண்போம்.

# புதிய - ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சியின்

## 5வது அனைத்து இலங்கை மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

தேசிய இனப் பிரச்சினை இன்னும் இலங்கையின் பிரதான முரண்பாடாக இருப்பதால் அதற்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் ஆகிய தேசிய இனத்தவர்கள் மற்றும் சமூகத்தினர் இலங்கையில் பல்இன சமூகமாக வாழ்வதன் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு அவர்களிடையே சமத்துவம் சுயாட்சி சுயநிர்ணய உரிமை, ஐக்கியம் என்பனவற்றை உறுதி செய்யும் வகையில் ஐக்கிய இலங்கைக்குள் உரிய அரசியல் தீர்வு காணப்படுவது தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் அவசரகாலச் சட்டம் பயங்கரவாத தடைச்சட்டம் என்பன நீக்கப்படுவதுடன் அவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும், அச் சட்டங்களின் கீழ் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படவர்களும், கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போனவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகின்றது. மேலும் அனைத்தையும் இழந்து நிற்கும் வடக்கின் மூன்று இலட்சம் மக்களின் புனரமைப்பு புனர்வாழ்வு உட்பட அகதிகளாக்கப்பட்ட வடக்கு கிழக்கின் அனைத்து மக்களது மறு வாழ்வும் இயல்பு வாழ்வும் உடனடியாக மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதே வேளை, அடிப்படை முரண்பாடாக இருந்து வரும் வர்க்க அடிப்படையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வும் அதன் வெளிப்பாடான பொருட்களின் விலை உயர்வுகளும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் சம்பள உயர்வு மறுப்பும் தொடர்கிறது. இவற்றால் வறுமை வேலை இன்மை என்பன உயர்ந்து கல்வி சுகாதாரம் சமூக நலன்கள் யாவும் சீரழிக்கப்பட்டும் வருகின்றன. பூதாகரமாகி வரும் இப் பிரச்சினைக



ளைத் தீர்க்க முடியாது மக்களைத் திசை திருப்பவே ஆளும் வர்க்க சக்திகள் தேசிய இனப் பிரச்சினையை தகுந்த கருவியாகத் தமது கைகளில் வைத்து ஆட்சி அதிகாரம் நடாத்தி வருகின்றனர். இதனை அனைத்து சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் உழைக்கும் மக்களும் உணர்ந்து வர்க்க அடிப்படையிலான போராட்டங்களை முன்னெடுக்க அணிதிரள வேண்டும் என மாநாடு கோருகின்றது.

இவ்வாறு புதிய-ஜனநாயக மாச்சிச-லெனினிசக் கட்சியின் (புதிய ஜனநாயக கட்சி) ஐந்தாவது மாநாட்டில் அங்கிகரிக்கப்பட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், 2009 ஆண்டின் இராணுவ நடவடிக்கைகளின் போது இடம் பெற்றுள்ளது எனப் பரவலாக முன்வைக்கப்படும் போர்க் குற்றங்கள் மனிதஉரிமை மீறல்கள் பற்றி இலங்கை அரசாங்கம் நேர்மையாக விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இல்லாவிடின் இலங்கையின் சுதந்திரம் இறைமை சுயாதிபத்தியத்தில் ஏகாதித்திய மேலாதிக்க நவகாலனித்துவ சக்திகளும் ஐ.நா. சபை போன்ற நிறுவனங்களும் மேன் மேலும் தலையிடுவதற்கே வாய்ப்பு ஏற்படும். போர்க் குற்றம் மனிதஉரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளதாக கூறிக்கொண்டு வெளிநாட்டு சக்திகள் எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முடியாது. அதே போன்று உள்நாட்டு விவகாரங்களில் வெளியார் தலையிடக் கூடாது என்று கூறிக்கொண்டு தனது சொந்த நாட்டு மக்கள் மீதான போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்களை இலங்கை அரசாங்கம் முடி மறைக்கவோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநீதி இழைகவோ முடியாது என்பதையும் மாநாடு வலியுத்தியது.

புதிய ஜனநாயகக் கட்சியின் 5வது அனைத்து இலங்கை மாநாடு யூன் 25,26 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம் பெற்றது. சி.கா. செந்திவேல், இ. தம்பையா, க. தணிகாசலம், சோ. தேவராஜா, வெ. மகேந்திரன் ஆகியோரைக் கொண்ட தலைமை குழு தலைமையில் இம் மாநாடு நடைபெற்றது. அதன் போது கட்சியின் பெயர் புதிய - ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சி என மாற்றம் செய்யப்பட்டது.

இம் மாநாட்டில் சர்வதேச உள்நாட்டு அறிக்கைகளும் ஸ்தாபன, நிதி அறிக்கைகளும் கட்சியின் யாப்புத் திருத்தங்களும் சமர்ப்பிக் கப்பட்டு விவாதங்களின் ஊடே ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

புதிய ஜனநாயகக் கட்சியின் 5வது அனைத்து இலங்கை மாநாடு யூன் 25,26 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம் பெற்றது. சி.கா. செந்திவேல், இ. தம்பையா, க. தணிகாசலம், சோ. தேவராஜா, வெ. மகேந்திரன் ஆகியோரைக் கொண்ட தலைமைக் குழுவின் தலைமையில் இம் மாநாடு நடைபெற்றது. அதன் போது கட்சியின் பெயர் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி என மாற்றம் செய்யப்பட்டது.

இம் மாநாட்டில் சர்வதேச உள்நாட்டு அறிக்கைகளும் ஸ்தாபன, நிதி அறிக்கைகளும் கட்சியின் யாப்புத் திருத்தங்களும் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்களின் ஊடே ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனையையும் அவற்றின் விருத்திகளையும் வழிகாட்டும் கோட்பாடுகளாக ஏற்றுக் கொண்டுள்ள தால் அதனை பிரதிபலிக்கும் வகையில் கட்சியின் பெயர் அமைய வேண்டும். புதிய ஜனநாயகக் கட்சி என்ற பேரில் உலகின் பல நாடுகளில் முதலாளித்துவ கட்சிகள் இயங்கி வருகின்றன. அத்துடன் ஒத்த பெயருடைய கட்சி ஒன்றை தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே அரசியல் கட்சியாக அங்கீகரித்தும் இருக்கிறார். அத்துடன் வெளிநாடுகளின் மாக்சிச லெனினிச சகோதரக் கட்சிகள் எமது கட்சியின் பெயர் பற்றிச் சுட்டி காட்டி இருந்தனர். மேற்படி காரணங்களை விவாதித்த மாநாடு கட்சியின் பெயரை புதிய- ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி என மாற்றுவதற்கு அங்கீகாரம் அளித்தது.

அந்த அடிப்படையில் நடைபெற்ற புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 5வது அனைத்து இலங்கை மாநாடு சுதந்திரமான ஐக்கிய இலங்கை, தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான புதிய ஜனநாயப் புரட்சி, சோசலிஷ எதிர்காலம் என்பனவற்றை அடிப்படை அரசியல் இலக்குகளாகப் பிரகடனப்படுத்தியது.

மேற்படி மாநாடு 15 பேரைக் கொண்ட மத்திய குழுவை தெரிவு செய்தது. அம் மத்திய குழுவானது கட்சியின் தலைமை நிர்வாகிகளையும் தெரிவு செய்து கொண்டது. பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், தேசிய அமைப்பாளர் வெ. மகேந்திரன், சர்வதேச அமைப்பாளர் இ. தம்பையா, பொருளாளர் சோ. தேவராஜா ஆகியோர் தெரிவாயினர்.

**மாநாடு அங்கீகரித்த முக்கிய தீர்மானங்கள்.**

1. பௌத்த சிங்கள நிலவுடைமை பழைமைவாத பெருமுதலாளித்துவ அல்லது தரகு முதலாளித்துவ அதிகார சக்திகளே இலங்கையின் இன்றைய நவ கொலனித்துவ அமைப்பைக் கட்டிக் காத்து நிற்கும் ஆளும் வர்க்கங்களாக இருந்து வருகின்றன.

இத்தகைய சக்திகளே தொழிலாளர்கள், விவாசாயிகள் சிறு வியாபாரிகள், மத்தியதர வர்க்கத்தினர், பெண்கள், இளைஞர்கள், சிறுபான்மைத் தேசிய இனங்கள் போன்ற பிரிவினர் உட்பட ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களை ஆள்வதுடன் இலங்கை மக்களுக்குரிய தேசிய ஜனநாயகத்தைக் மறுத்தும் வருகின்றன. ஆதலால் தேசிய ஜனநாயகத்தை வென்றெடுப்பது உடனடியானதும் அவசரமானதுமான தேவையாகவே உள்ளது. அதனை வென்றெடுக்க இடதுசாரி ஜனநாயக முற்போக்கு கட்சிகளும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசியல் கட்சிகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகள் தொழிற்சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், கலை இலக்கிய அமைப்புக்கள், புத்திஜீவிகள் ஆகியோரைக் கொண்ட பரந்துபட்ட ஐக்கிய முன்னணி கட்டப்பட வேண்டும். பாராளுமன்ற வரையறைகளுக்கப்பால் விரிந்தது பரந்த அரசியல் வேலைத்திட்டம் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டும். அரசியல் பொருளாதார தீர்மானங்களை எடுப்பதில் மக்கள் முடிவெடுப்பவர்களாக மாறும் நிலையில் மக்களின் கைகளுக்கு அதிகாரத்தை கொண்டு செல்ல வேண்டும். இலங்கையின் சுதந்திரம் இறைமை ஐக்கியத்தை உறுதிசெய்யும் விதமாக ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் தேசிய இனங்களின் சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை உறுதி செய்யவேண்டும். தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிப் பல்லினத் தேசியப் பண்பாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களை வகுத்துச் செயற்பட்டுத் தேசிய ஜனநாயகத்தை வென்றெடுக்க வேண்டும்.

2. அடுத்த கட்டமாக இலங்கை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடல்லாதபடியால் சோஷலிஸ புரட்சியின் முன்தேவையாகப் புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்பது அவசியமாகும். புரட்சிகரப் போராட்டங்களினூடாக தொழிலாளர் விவசாயிகளின் ஐக்கிய முன்னணியில் தேசிய இனங்களையும் அனைத்து சுரண்டப்படும் வர்க்கங்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த சக்திகளையும் தேசிய முதலாளித்துவ சிறு முதலாளித்துவ வர்க்கங்களையும் அணிதிரட்டி ஏகாதிபத்தியத்தையும் பெரும்/தரகு முதலாளித்துவத்தையும் தோற்கடித்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அந்தந்த இனங்களின் சுயவிருப்பின் படி உறுதிசெய்து, நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களை அகற்றி, சோஷலிஸ கட்டுமானங்களை முன்னெடுக்க வேண்டும்.

3. ஏகாதிபத்திய முகவரான ஐ.நா. சபையையும் அதன் நவகொலனித்துவ நிகழ்ச்சி நிரலையும் ஏற்றுக் கொண்டு பலவிதமான உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை அரசு யுத்தத்தை நடத்துவதற்கு இந்தியா, சீனா, பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகளின் இராணுவ உதவிகளையும் பெற்றுக் கொண்டே செயற்பட்டது. யுத்தத்தின் போதும் அதன் பிறகும் வெளிநாடுகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடும் வகையிலேயே இலங்கை அரசாங்கம் நடந்து கொண்டது. அப்போதெல்லாம் இலங்கை அரசு நாட்டின் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் மீது எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை. ஆனால், இலங்கையில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல் களும் பற்றிய ஆலோசனை வழங்கவென ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் குழுவொற்றை நியமித்த பிறகே கவலையடைவதாகவும் அதனால் ஆத்திரமடைவதாகக் காட்டுவது நம்பகத்தன்மையற்றதும் மக்களை ஏமாற்றக் கூடியதுமாகும். ஐ.நா. போன்ற அமைப்புகளினது ஏகாதிபத்திய மேலாதிக்க நிகழ்ச்சி நிரல் அவற்றின் உள் நோக்கத்துடனேயே நடவடிக்கைகளை

- சுதந்திரமான ஐக்கிய இலங்கை
- தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை
- தொழிலாளர் வர்க்கத் தலைமையில் புதிய ஜனநாயகப் புரட்சி
- சோஷலிஸ எதிர்காலம்

எடுக்கும் என்பது குறித்துச் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. ஐ.நா. பொதுச் செயலாளர் நியமித்துள்ள ஆலோசனை வழங்கும் குழு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதற்கோ அரசியல் தீர்வு காணப்படுவதற்கோ எவ்வகையிலும் உதவப்போவதில்லை. எனவே தமிழ் மக்கள் ஐ.நா.விடம் எதிர்பார்க்க எதுவும் இருக்க மாட்டாது.

அதே வேளை, இலங்கை போர்க்குற்ற விசாரணைகளையும் மனித உரிமை மீறல்களையும் மறுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இலங்கை அரசாங்கம் பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதுடன் போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் பற்றி விசாரித்துக் குற்றவாளகளைத் தண்டிப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் அதனுடாகவே வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையில் தலையிடுவதை தடுக்க முடியும்.

4. மிதவாதத் தமிழ்த் தேசியவாதிகள் முதல் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வரை எவரும் முற்போக்கு தேசியத்தை முன்னெடுக்காது ஏகாதிபத்தியச் சார்பு, இந்தியச் சார்பு நிலை நின்று பழைமைவாதப் பிற்போக்குத் தேசியத்தை முன்னெடுத்தனர். அவர்கள் தமிழ் மக்கள் மீது தனிநாட்டுக் கோரிக்கையைத் திணி த்தார்கள். தற்போது புலம் பெயர்ந்த தமிழர்களில் மேட்டுக்குடியினர் "நாடு கடந்த தமிழீழ அரசை" நிறுவி, அதனைத் தமிழ் மக்கள் மீது மீண்டும் திணிக்கின்றனர். இதற்கு அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஆதரவு தெரிவிப்பதாக கூறுகின்றனர். 1998ம் ஆண்டில் முதல்முதலாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்தது இந்தியாவே. அத் தடை இன்னும் நடைமுறையில் இருக்கிறது. அவ்வாறே வட அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் இடம் பெற்றது. இடையிடையே முணுமுணுப்பதற்கு அப்பால் மேட்டுக்குடியினரால் எதனையும் செய்யமுடியவில்லை. இந்தியா இலங்கையுடன் இணைந்து யுத்தம் செய்து கொண்டிருந்த போது விமானத்தை அனுப்பி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களைக் காப்பாற்றப் போவதாக உறுதியளித்த அமெரிக்கா காத்திருந்து கழுத்தறுத்தது போன்று செயற்பட்டது தெரிந்ததே. தனிநாட்டைக் கோரிய சிலர், மாகாண சபை அதிகாரங்களையே தர மறுக்கும் பேரினவாத அரசாங்கத்துடன் கூட்டிணைந்துள்ளதால் தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமையும் கிடைக்கப் போவதில்லை. இலங்கையில் தேசிய ஜனநாயகத்தை நிலைநாட்டும்போதே நியாயமான அரசியல் தீர்வைக் காணமுடியும். புதிய-ஜனநாயகப் புரட்சி வெற்றிபெறும் சூழ்நிலையில், தமிழ் மக்களின் சுயவிருப்பின் பேரிலான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முடியும். எனவே தேசிய ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் பங்கெடுப்பதே புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு சிறந்த தெரிவாக இருக்க முடியும். தேசிய இன விடுதலைக்கு ஆதரவான நிலைப்பாடு ஏகாதிபத்தியத்திற்கும் பெரும்/தரகு முதலாளித்துவத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் ஆதரவாக இருக்க முடியாது. அதாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல் பெரும்பான்மைச் சிங்கள உழைக்கும் மக்களது ஏகாதிபத்திய ஏதிர்ப்பு, பூகோளமயமாதல் எதிர்ப்பு, நவகொலனித்துவ எதிர்ப்பு, பெரும்/தரகு முதலாளித்துவ அதிகாரத்துவ நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறமுடியாது. அதேபோன்று சிங்கள மக்களது. மேற்படி போராட்டங்களுக்கு ஆதரவளிக்காமலோ அவற்றுடன் இணையாமலோ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு — அதாவது பிரதான முரண்பாட்டைத் தீர்ப்பதற்குச் — சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவோ அவர்களை இணைத்துக் கொள்ளவோ முடியாது.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 26

# பேரினவாதத்தின் வன்முறைக்கோலம்

பண்டார நாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்த சிங்களப் பேரினவாதிகள் எல்லாரும் ஒரே நோக்கத்திற்காக எதிர்த்ததாகக் கூற இயலாது. அதுபோலவே சிங்களப் பேரினவாதச் சிந்தனைக்குட்பட்ட எல்லாருமே அதை எதிர்நோக்கவுமில்லை. எவ்வாறு தமிழ்த் தேசியவாதத்திலும் ஆதிக்கம் செலுத்திய குறுந்தேசியவாதிகளின் நிலைப்பாடுகள் வேறுபட்டனவோ அவ்வாறே சிங்களப் பேரினவாதிகள் நடுவிலும் வேறுபாடுகள் இருந்தன. முக்கியமாக வெறித்தனமாக சிங்களப் பேரினவாதத்தை முன்னெடுத்த கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜி.சேனநாயக்க போன்றவர்களும் தீவிரவாத புத்த பிக்குமாரும் இலங்கையில் சிங்கள பௌத்த ஆதிக்கத்திற்கு மறுப்பான முறையில் சிறுபான்மைச் சமூகங்கட்கு எவ்விதமான சலுகைகளும் வழங்கப்படலாகாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அவர்களது நிலைப்பாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றியோ அரசியல் அதிகாரத்தை நேரடியாகத் தம் வசமாக்குவது பற்றியோ கணிப்புகள் இருக்கவில்லை. பண்டாரநாயக்கவைத் தமக்கு உடன்பாடாகச் செயற்படவைக்கிற நோக்கத்தை விட வேறு இலக்கு அவர்கட்கு அப்போதைக்கு இருக்கவில்லை.

ஜே.ஆர்.ஜயவர்த்தன சிங்கள மக்களிடையே பண்டா-செல்வா உடன்படிக்கை பற்றி இருந்திருக்கக் கூடிய ஐயங்களைப் பயன்படுத்தி உடன்படிக்கையை எதிர்ப்பதன் மூலம் பண்டாரநாயக்காவைப் பலவீனப்படுத்தி யூ.என்.பியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதுடன் தன்னையும் யூ.என்.பிக்குள் பலப்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்குடன் செயற்பட்டாரென்றே கூற வேண்டும். பாராளுமன்றத்தில் யூ.என்.பியின் பிரதிநிதிகள் எவருமே அக்கறை காட்டாத ஒரு பிரச்சனையை தேர்தலில் தோல்விகண்ட ஜே.ஆர். ஜயவர்த்தனா தீவிரமாக முன்னெடுத்தது 1970களில் முக்கியமாக 1972ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு உருவான பின்பு, அமிர்தலிங்கம் அதை எதிர்ப்பதிலும் தமிழீழக் கோரிக்கையை இளைஞர்களுடாக ஊக்குவிப்பதிலும் காட்டிய தீவிரத்துடன் ஒப்பிடலாம். ஜே.ஆர்.ஜயவர்த்தன முன்னெடுத்த கண்டி யாத்திரை பண்டாரநாயக்கவுக்கு மிக நெருக்கமான அரசியல்வாதியான எஸ்.டி.பண்டாரநாயக்கவின் தலைமையில் பொதுமக்களின் பேராதரவுடன் முறியடிக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கையை வெற்றிகரமாக முன்னெடுத்துத் தமிழ் மக்களின் மொழியுரிமைக்கும் பிரதேச உரிமைக்குமான சில குறைந்தபட்ச உத்தரவாதங்களை நிலை நிறுத்தத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பும் தேவைப்பட்டது.

சிங்களப் பேரினவாதிகள் தென்னிலங்கையில் பண்டா-செல்வா உடன்படிக்கையை இல்லாதொழிக்க முயன்ற வேளையில் வடக்கில் தமிழ்க் காங்கிரஸ் அந்த உடன்படிக்கையைத் தீவிரமாக எதிர்த்தது. தமிழரசுக் கட்சித் தலைமை ஒரளவு விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய அந்த வேளையில், பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்துக்கு சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறித்த பஸ்களை அனுப்ப முடிவெடுத்ததால், வடக்கில் ''ஸ்ரீ'' என்ற எழுத்துப் பொறித்த அனைத்து இலக்கத் தகடுகளிலும் அச்சிங்கள எழுத்தின் இடத்தில் தமிழ் எழுத்தைப் பொறிக்கும் போராட்டமொன்று அக்கட்சிக்குள் ஒரு கட்சியாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு குழுவால் எடுக்கப்பட்டு 1958 ஜனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பயனாக ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு விதமாக தமிழ் எழுத்து பொறிக்கப்பட்டது. இந்தச் சிறுபிள்ளைத் தனத்திற்கு நாடும் தமிழரும் கொடுத்த விலை பெரிது.

அதன்பின்னணியில் பண்டாரநாயக்க மீது செலுத்தப்பட்ட பேரினவாத அழுத்தங்கள் வலுத்தன. பண்டாரநாயக்கவை ஆட்சிக்குக் கொண்டுவரப் பிரசாரம் செய்த பிக்குமாரின் தலைவர்கள் கொடுத்த நெருக்குவாரத்தின் முன் பணிந்து போன பண்டாரநாயக்க பண்டா-செல்வா உடன் படிக்கையைச் செல்லுபடியற்ற தாக்குவதாக அறிவித்தார். இது தமிழரசுக் கட்சியின் பொறுப் பற்ற நடத்தையின் விளைவு என்று தட்டிக் கழிக்க முடியாது. பண்டாரநாயக் கவின் உறுதியின்மை அதற்கு முக்கிய காரணமாகும். தமிழரசுக்கட்சி நடத்தப் போவதாக மிரட்டிய சத்தியாக்கிரகம் தனது ஆட்சிக்குப் பெரிய கெடுதல் விளைக்குமா அல்லது சிங்கள பௌத்த எதிர்ப்பு பெரிய கெடுதல் விளைக்குமா என்ற கணிப்பைவிட நாட்டின் எதிர்காலம் பண்டார நாயக்காவுக்குப் பெரிதாகத் தெரியவில்லை என்றே கூறவேண்டும்.

நாம் மறக்கக் கூடாத விடயம் ஒன்று உண்டு. பண்டாரநாயக்காவுக்கு, அவரது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனநாயக, முற்போக்குச் சிந்தனை கொண்ட வர்களை விட்டால் இடதுசாரி களது, குறிப்பாகக் கம்யூனிஸ்ற் கட்சியினது ஆதரவு, மட்டுமே இருந்தது என லாம். பேரி னவா திகட் குப் படி கொடுக்கிற விதமாக நடந்து கொண்ட தமி ழரசுத் தலை மையோ பொறுப் பற்ற முறை யில் உடன்படிக்கையை நிராகரித்த தமிழ்க் காங்கிரசோ அடுத்து நடக்கக் கூடியது பற்றிச் சிந்தித்துச் சரியாகச் செயற்படாதமைக்கு அவர்களது மேட்டுக்குடி அரசியலும் ஒரு முக்கிய காரண மாகும்.

1958ம் ஆண்டு பண்டா-செல்வா உடன்படிக்கை செல்லுபடியற்றதாகிய பின்பும் பேரினவாத வெறியர்கள் ஓயவில்லை. சிங்கள ஸ்ரீ எதிர்ப்பைக் காரணமாக்கித் தமிழ் எழுத்துக்களுக்குத் தார்பூசும் இயக்கமொன்று 1958 ஏப்ரல் மாதம் முன்னெடுக்கப்பட்டது. வீதிகளின் பேர்ப் பலகைகள் முதலாகக் கடைகளின் பேர்ப்பலகைகள் வரை இலக்கு வைக்கப்பட்டு அவற்றிலிருந்த தமிழ் எழுத்துக்கள் மீது தார் பூசப்பட்டது. அதையிட்டு அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதன் வளர்ச்சியாகச் சில வதந்திகளைக் காரணமாக்கித் தமிழரின் மீதான வன்முறை மே மாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. கொழும்பிலும் தென்னிலங்கையின் பல்வேறு நகரங்களிலும் இருந்த தமிழர்களின் வணிக நிறுவனங்கள் தாக்கப்பட்டன. சிங்களக் காடையர்கள் தமிழர்களைத் தெருக்களில் வைத்துத் தாக்கினர். தீ வைப்பு, கொலை, கொள்ளை என்பன வேகமாகப் பரவிய பின்பே, சனாதிபதி ஒலிவர் குணதிலகவின் வற்புறுத்தலுக்கிணங்க பண்டாரநாயக்க அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தார். பல்வேறு பகுதிகளிலும் நடப்பதைத் தடுக்க நாட்கள் சென்றன. (அன்றைய நிகழ்வுகள் பற்றிய வியாக்கியானத்தில் யூ.என்.பி. சார்பு இருந்த போதும் பத்திரிகையாளரான ற்றார்சி விற்றாச்சி எழுதிய ''1958 அவசரகாலம்'' என்ற ஆங்கில நூல் நிகழ் வுகளின் நேர்மையான ஒரு ஆவணப்படுத்தலாகக் கொள்ளப்படுகிறது).

பண்டாரநாயக்க உடனடியாகவே உறுதியான நடவடிக்கை எடுத்துத்திருந்தால் வன்முறை பரவ வாய்ப்பிருந்திருக்காது. பண்டாரநாயக்கவின் தடுமாற்றத்திற்கான விளக்கங்கள் இன்றுவரை முரண்படுகின்றன தீய நோக்கம் எதுவுமே இல்லை என்று கொண்டாலும் நாட்டின் பிரதமர் என்ற வகையில் அவர் தனது குடிமக்களில் ஒரு பகுதியினரைக் காக்கும் கடமையில் தவறிழைத்துவிட்டார் என்பதும் அதன் விளைவாகப் பேரினவாதமும் வலுவிழந்து போன யூ.என்.பியும் நன்மை கண்டன என்பதும் ஏற்கக் கூடிய மதிப்பீடுகள். பண்டாரநாயக்கவின் அரசியற் கோழைத்தனத்தின் இன்னொரு அடையாளமாக, வன்முறையைத் தூண்டிவிட்ட சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் சிலரைத் தடுப்புக் காவலில் வைத்த அவர், அதன் விளைவாகச் சிங்கள மக்கள் நடுவே பகைமையைச் சம்பாதிக்காமல் சமாளிக்க அனைத்துத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக் காவலில் வைத்தார். செல்வநாயகம் தனது வீட்டிலும் மற்றோர் பாராளுமன்ற உறுப்பினர்கட்கான விடுதியிலும் மறித்து வைக்கப்பட்டனர்.

1958 மே கலவரத்தில் கொழும்பில் யூ.என்.பி. அடியாட்களின் பங்கு முக்கியமானதாக இருந்தது. இன்றும் இதைப்பற்றி அதிகம் பேசப்படுவதில்லை. அவ் வன்முறைக்கான பழியை பண்டாரநாயக்க மீது மட்டுமே சுமத்தும் போக்கை தமிழரிடையே நாம் இன்னமும் காணலாம்.

1958 ஒகஸ்ற்றில் பண்டாரநாயக்க தமிழ்மொழிப் பிரயோகம் பற்றிய சிறப்புச் சட்டம் ஒன்றைப் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்து அது நிறைவேறுகிறது. 1959 முதல் அரச கருமமொழிச்சட்டப்படி அரச நிருவாகம் சிங்கள மொழிக்கு மாற்றப்படுகிறது.

1959ம் ஆண்டு செப்ரெம்பர் 25 அன்று பண்டாரநாயக்க சுடப்பட்டு மறுநாள் உயிரிழக்கிறார். அவருடைய கொலையில் சிங்கள பௌத்தத் தீவிர அரசியலுடன் தொடர்புடைய பத்தரக்கித தேரோவும், சுகாதார அமைச்சராயிருந்த விமலா விஜவத்தனவும் சதிகாரர்களாக அடையாளங் காணப்பட்டுப் பின்பு குற்றவாளிகளாகத் தீர்ப்புப் பெற்றதைக் குறிப்பிட வேண்டும்.

பண்டாரநாயக்கவின் கொலைக்கான காரணம் அவர் தமிழருக்குச் சலுகைகள் வழங்கினார் என்பது தான் கொலைக்குற்றவாளி சோமராம தேரோ சொன்ன காரணம். ஆனால் வேறு அரசியற் காரணங்களும் இருந்தன என்றே நம்ப வேண்டியுள்ளது.

பண்டாரநாயக்கவுக்கு அடுத்த மட்டத்தில் கட்சியில் முக்கியமான பிரமுகரான சி.பி.டி.சில்வா அப்போது மருத்துவத்திற்காக இங்கிலாந்தில் இருந்தார். எனவே டபிள்யூ. தஹநாயக்க இடைக்காலப் பிரதமரானார். தஹநாயக்க உடனடியாகவே அமைச்சரவையில் தனக்கு எதிரானவர்களாக அமையக் கூடியவர்களைப் பதவி நீக்கிப் புதிய அமைச்சரவையை அறிவித்துப் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

தஹநாயக்கவின் நடத்தையில் அரசியற் கோமாளித்தனம் மிகுதியா அல்லது சில்லரைத்தனமான ஊழல் மிகுதியா என்று சொல்வது கடினம். தகநாயக்க மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற பேரில் ஒரு கட்சியை உண்டாக்கி 1960 மார்ச் மாதம் நடந்த தேர்தலில் பங்கு பற்றினார்.

1960ம் ஆண்டு இலங்கை அரசியலில் திடீர்த் திருப்பங்களைக் கொண்ட ஆண்டாக அமைந்தது. வளரும்

---

புதிய - ஜனநாயக
9ம் பக்க தொடர்ச்சி

5. மலையகத் தமிழர்கள் தனியான தேசிய இனமும் இன ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்களும் ஆவர். இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் அவர்கள் ஓர் அங்கமாக உள்ளனர். அதே வேளை, வர்க்கச் சுரண்டலுக்கு உள்ளான தொழிலாளர்களாகவும் இருந்து வருகின்றனர். எனவே இன, வர்க்க ரீதியில் ஒடுக்கப்பட்டு வரும் மலையக மக்கள் அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு வர்க்கப் போராட்டப் பாதையில் அணி திரட்டப்படுவது அவசியமானதாகும்.

6. முஸ்லீம் மக்களும் ஒரு தேசிய இனமாக உள்ள போதிலும், மத அடையாள எல்லைகளுக்குள் மட்டும் நிற்பதற்கும் அப்பால், வர்க்க ரீதியான அணிதிரள்வுக்கு உள்ளாக்கப் படல் வேண்டும்.

7. இனவாதம் மக்களின் ஐக்கியத்திற்குப் பாரிய தடையாக இருந்துவருகிறது. இலங்கையின் தொழிற்சங்க-இடதுசாரி இயக்க வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு அனைத்து இனத் தொழிலாளர்களையும் வர்க்க ரீதியாக ஐக்கியப்படுத்தும் புரட்சிகர இயக்கம் கட்டி வளர்க்கப்பட வேண்டும். சமூக ரீதியாகவும் தொழிற் பிரிப்பினாலும் இனவாதத்தினாலும் பிரிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களிடையே வர்க்க ஒத்துழைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து ஐக்கியத்தைக் கட்ட வேண்டும்.

தொழிலாளர்களின் உடனடிக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களினூடாக அரசியல் ரீதியாகத் தொழிலாளர்களுக்கு விழிப்பூட்டி ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டி அவர்களைத் தொழிலாளர் வர்க்கப புரட்சியின் தலைமைச் சக்திகளாக வளர்க்கச் செயற் திட்டங்களுடன் செயற்பட வேண்டும். உழைக்கும் மக்கள் அனைவரையும் தொழிலாளர்கள் என்ற பொது அடையாளத்திற்குள் கொண்டு வருவதுடன் அவர்களது அனைத்துப் போராட்டங்களிடையேயும் ஒத்துழைப்பை உறுதி செய்து வர்க்கப் போராட்ப் பாதையில் அணிதிரளச் செய்தல் வேண்டும்.

8. விவசாயிகள் சமூக மாற்றப் புரட்சியின் பிரதான சக்திகளாவர். அதனால் விவசாயிகளதும் விவசாயத் தொழிலாளர்களதும் பரந்துபட்ட ஐக்கியம் கட்டப்பட வேண்டும். விவசாயத் துறையில் ஏகாதிபத்திய முகவர்களாக செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் (என்.ஜி.ஓக்கள்) முன்வைக்கும் ''பேண்தகு உற்பத்தி'' ''அபிவிருத்தி'' ''மாற்று உற்பத்தி'' ''அரசியல்நீக்கச் செயற்பாடு'' போன்ற நவகொலனித்துவ பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். கடற்றொழிலாளர்களிது பிரச்சினைகளும் பிரத்தியேகமாக ஆராயப்பட்டு பெரிய/தரகு முதலாளிகளதும் பன்னாட்டுக் கம்பெனிகளதும் பிடியிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட, அவர்கள் வெகுஜனப் போராட்டங்களின் பங்குதாரர்களாக்கப்பட வேண்டும்.

9. தற்போது தீண்டாமை அடங்கு நிலையில் இருந்தாலும் சாதியத்தை வெறும் அடையாளம் தொடர்பான பிரச்சினையாகக் காணவன்றிச் சாதிய ஆதிக்கத்திற்கும் குறுகிய சாதிவாதத்திற்கும் எதிரான போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில் சாதியம் மக்களின் ஐக்கியத்தைக் குலைக்கும் நிலப்பிரபுத்துவக் கருத்தியலாகும். இலங்கையில் 1960களில் மாக்சிச லெனினிசப் புரட்சிகரக் கம்யூனிஸ்ட்டுகளால் முன்னெடுக்கப்பட்ட சாதியத்திற்கு எதிரான வெகுஜனப் போராட்டம் இந்தியாவில் போன்று அடக்கப்படும் சாதியினருக்கு இட ஒதுக்கீடு போன்ற சலுகைகளை கோரும் சாதி அடையாளத்தை நிலைநிறுத்தும் போராட்டமாகவன்றி வர்க்கப் போராட்டத்தின் ஊடாகச் சாதியத்தையும் தீண்டாமையையும் தகர்க்கும் இலக்கைக் கொண்டதாகவே இருந்தது.

சாதியத்திற்கு எதிரான போராட்டம் — தலித்தியப் பார்வையில் — சாதிகளை இல்லாமல் செய்துவிடும் என்ற குறுகிய சாதியவாத நிலைப்பாட்டை நிராகரிக்கும் அதே வேளை வர்க்கப் போராட்டத்திற்கும் சாதிய எதிர்ப்பிற்குமிடையிலான நெருங்கிய இணைப்பையும் ஒத்துழைப்பையும் பேண வேண்டும்.

10. தனிச் சொத்துடமைக்கு எதிரான வர்க்கப் போராட்டம் பெண் விடுதலைக்கான போராட்டமே. ஆரம்பகாலத்தில் எவ்வாறு பெண்கள் தனிச் சொத்தாக கொள்ளப்பட்டனர் என்ற வரலாற்று உண்மையை மாக்சியமே விளக்கியது. அதனால் பெண் விடுதலைக்கான போராட்டத்தை வெறும் அடையாளப் பிரச்சினையாகவன்றி வர்க்கப் போராட்டத்தின் பகுதியாகவும் அதே வேளை குறிப்பாகவும் இரண்டு தளங்களிலும் சமாந்தரமாக முன்னெடுக்க வேண்டும்.

11. இலங்கையின் மீது மேலாதிக்கம் செய்ய முந்நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் பிராந்திய மேலாதிக்க சக்தியான இந்தியாவிற்கு எதிராகவும் இலங்கை மக்கள் ஐக்கியப்படா விட்டால் இலங்கையின் சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம், ஐக்கியம் என்பன பறிபோகும் அபாய நிலையே இருந்து வருகிறது. அமெரிக்க மேற்கு உலக ஏகாதிபத்தியங்களும் ஐப்பானிய ஏகாதிபத்தியமும் இலங்கையில் பூகோளமயமாதலின் முன்னெடுப்பாளாகளாவர். அத்தகைய பூகோளமயமாதலின் பங்காளிகளாக இருக்கும் இந்தியா, சீனா போன்றவையும் இலங்கை மீது தமது கட்டுப்பாட்டையும் ஆதிக்கத்தையும் செலுத்தி வருகின்றன. எனவே ஏகாதிபத்தியத்திற்கும் பூகோளமயமாதலுக்கும் மேலாதிக்கத்திற்கும் எதிராக வலுவான ஐக்கியப்பட்ட பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை கட்ட வேண்டும் எனவும் மாநாடு அறைகூவல் விடுத்தது.

# இறால் போட்டுச் சுறாப் பிடிக்கும் இந்திய மேலாதிக்கம்

- மோகன் -

சனாதிபதி மகிந்த ராஜபக்ச டில்லி சென்று ஏழு உடன்படிக்கைகளைச் செய்து மீண்டு வந்திருக்கிறார். அவற்றில் முக்கியமானவை "வடக்கிற்கான புகையிரதப்பாதையின் மீளமைப்பு, மீள்குடியேற்றத்திற்கான வீடுகள், சம்பூரில் அனல் மின்னிலையத்துக்கு மேலதிக நிதி ஆகியன" என்றும் அவற்றைக் குறைந்த வட்டியிலான கடனில் வழங்கவுள்ளதாகவும் ஒரு பேரினவாத ஏட்டிற் கூறப்பட்டுள்ளது. உடன்படிக்கைகளின் விபரங்கள் முழுமையாகத் தெரிவிக்கப்படவில்லை. அவற்றால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பொருளாதார நன்மைகள் பற்றிய ஐயங்கள் ஒருபுறமிருக்க பெருந்தொகையான கடனுக்கும் மேலான கணிசமான நன்கொடை என்ன நோக்கத்தை மனதிற் கொண்டு வழங்கப்படவுள்ளது என்பது கவனத்துக்குரியது. ஏலவே இந்திய இலங்கை வர்த்தக ஒப்பந்தம் இலங்கைக்குப் பாதமாகவே செயற்பட்டு வந்துள்ளது என்ற முறைப்பாடு சகல மட்டங்களிலும் எழுந்துள்ள ஒன்று. எனவே இம்முறை சனாதிபதி ராஜபக்ச டில்லிக்குப் புறப்படு முன்னமே அடுத்து ஏற்படுத்தப்படவுள்ள சீபா (CEPA) என்ற பொருளாதார உடன்படிக்கை பற்றிய எதிர்ப்புக் குரல்கள் எழத் தொடங்கிவிட்டன. அரசாங்கத்திற்கு ஆதரவான தனியார் ஊடகங்களும் இந்திய நோக்கங்கள் பற்றியும் அரசாங்கம் இந்தியாவிற்குப் பணிந்து போவது பற்றியும் எழுதத் தொடங்கிவிட்டன. எனவே சீபா உடன்படிக்கையைக் கொண்டுவருவதற்கு முதல் இலங்கையில் ஒரு சாதகமான சூழலை உருவாக்குவதற்கான தேவை ஏற்பட்டது. அதைவிடவும், சீனாவுடனான இலங்கையின் உறவு இந்திய மேலாதிக்க நோக்கங்கட்டுத் தடையாகத் தெரிவதால் இந்தியச் செல்வாக்கை வலுப்படுத்தும் நோக்கமும் இந்த "உதவிக்குப்" பின்னால் உள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தின் மீது இந்திய மூலதனத்தின் பிடி கடந்த இருபது ஆண்டுகட்கும் மேலாக இறுகிக் கொண்டே வந்துள்ளது. விடுதலைப் புலிகட்கு எதிரான போரில் ராஜபக்ச ஆட்சிக்குத் தூண்டுதலும் துணையும் வழிகாட்டலும் வழங்கியதோடு ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் ராஜபக்ச ஆட்சிக்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கப் பல வழிகளிலும் உதவியதன் மூலம் இலங்கை மீது தனது அரசியல் ஆதிக்கத்தையும் வலுப்படுத்த இந்தியா முயலுகிறது. இதன் ஒரு பகுதியாக வடக்கில் இருந்து வந்த விசா விண்ணப்பக் கையேற்பு அலுவலகத்தின் இடத்தில் ஒரு துணைத் தூதரகமும் போதாதற்கு அம்பாந்தோட்டையில் இன்னொரு துணைத் தூதரகமும் நிறுவப்பட உள்ளன. இவை இங்கு செயற்படும் இந்திய முகவர்களின் பணிகட்கு உகந்தவையாகவே இருக்கும்.

இந்தியா இன்று இலங்கையின் இறக்குமதிகளில் 20 சதவீதத்திற்கும் மேலான பகுதியைக் கொண்டுள்ளது. ஏற்றுமதிகளோ அதில் ஐந்திலொரு பங்கு தேறா. இந்தச் சமமின்மையை மேலும் மோசமாக்கும் விதமாகவே "சீபா" உடன்படிக்கை அமையும். இந்தியாவுக்குக் கணிசமான அளவு பின்னால் நிற்கும் சீனாவும் இலங்கையில் தனது வணிகத்தை வளர்த்து வருகிறது. எனினும் சீனாவும் பிற உலக நாடுகளும் இந்தியாவைப் போல சமனற்ற வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் தனது ஏற்றுமதிகளை இலங்கை மீது திணிக்க முயலவில்லை.

இலங்கையில் இன்று அதி முக்கியமான அந்நிய முதலீட்டாளர்களாக இந்தியக் கம்பனிகளே உள்ளன. மேலும் மூலதனம் இங்கு வருவதற்கு வசதியாகவே இந்தியாவின் "உதவிகள்" அமையும். புகையிரதப்பாதை விருத்தி இந்தியப் பண்டங்களை தலைமன்னார் வழியாகக் கொண்டு வருகிற நோக்கத்தையுடையது. அத்தனை முதலீடுகளையும் மூலதனத்தையும் காப்பாற்ற இந்தியா தனது அரசியல் செல்வாக்கையும் அவசியமான இடத்து இராணுவக் குறுக்கீட்டையும் பயன்படுத்தக் கூசாது.

இந்தப் பின்னணியிலேயே இந்திய அரசு தேசிய இனப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கத்தை எவ்வளவு தூரம் வற்புறுத்தத் துணியும் என்ற கேள்வி வருகிறது. தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்குப் பாரிய அளவில் நெருக்குவாரம் வராது என்பதை இந்திய ஆட்சியாளர்கள் அறிவார்கள். எனவே கண்துடைப்பாக எதுவும் நடந்தாலே பெருங் காரியமாயிருக்கும். அதற்கெல்லாம் சப்பைக் கட்டுக்கட்ட வசதியாக இந்திய அடிமைகளாக ஒரு தமிழ் அரசியற் கூட்டமைப்பும் இருக்கிறது. இந்தியா "சிபா" உடன்படிக்கையை இவ்வாண்டு முடிவிற்குள் செயற்படுத்த அக்கறையுடன் உள்ளது. இலங்கை அரசாங்கம் மக்களிடையே எதிர்ப்பு வலுப்பட முன்னரே அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி ராஜபக்ச குடும்ப ஆட்சியை நீடித்து சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசியல் வலிமையைப் பலவீனப்படுத்துவதுடன் அரச அடக்கு முறை இயந்திரத்தை -- நாட்டின் பாதுகாப்பு வெளியிலிருந்து விடுதலைப் புலிகளின் மிரட்டல் என்று காரணங்காட்டி -- வலுப்படுத்தி வருகிறது. இது யாருக்காக என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் இந்தியக் கனவுகளிலிருந்து பெருமளவும் மீண்டாலும் இந்திய ஆபத்துப் பற்றிப் போதியளவுக்கு விளங்கிக் கொள்ளவில்லை. சீனப் பூச்சாண்டி காட்டி இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையில் அகலக் கால் வைக்க வசதியான காய் நகர்த்தல்கள் நடந்து வருகின்றன. நாம் சீனா உட்பட, எந்த அந்நிய நாட்டினதும் பொருளாதார ஊடுருவலை உறுதியாக எதிர்க்க வேண்டும். தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பல் என்பது இந்த நாட்டின் அனைத்து மக்களதும் மீட்சிக்கும் உயர்வுக்கும் உரிய ஒரு அரசியற் பாதைக்கு முக்கியமானது. அதனை விடுத்து அந்நிய பொருளாதார ஊடுருவலுக்கு வழி வகுப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கும் இறைமைக்கும் நாசத்தையே ஏற்படுத்தும்.

# சமூக வழக்குகளில் ஏற்றத் தாழ்வுகள்

சி. சிவசேகரம்

## தேவுக்களின் மொழியும் நீசர்களின்

சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவர்களுக்குரிய அனைத்தும் சமூகப்பண்புகளும் செயற்பாடுகளும் மேலானவையாக மட்டுமன்றித் தூய்மையானவையாகவும் பழமை வாய்ந்தவையாயும் கொள்ளப்படுவது வழமை எனினும் இந்தியத் துணைக்கண்டத்தின் ஏற்றத் தாழ்வுகளில் தெய்வத்தின் குறுக்கீடும் உண்டு. உயர்வானது தெய்வத்தால் வழங்கப்பட்டது என்றோ அவ்வாறு தெய்வத்தாற் தீர்மானிக்கப்பட்டது என்றோ தெய்வங்கட்கு உரியது என்றோ கூறப்படுவதை இந்திய மரபிற் பல இடங்களிலும் காணுகிறோம்.

மொழி விடயத்தில் பார்ப்பனிய மத ஆதிக்கம் நிலைபெற்றுப் பார்ப்பனச் சாதியினரின் ஆதிக்கம் வலுப்பெற்றதை யொட்டி, அந்த ஆதிக்கத்தை வலுப்படுத்தும் போக்கிலும் சமஸ்கிருதமே உயர் வான மொழி, அதிலிருந்தே பிற மொழிகள் தோன்றின. அதுவே தேவர்களின் மொழி என்பது போன்ற கருத்துக்கள் நிலைபெற்றன. பிற்காலப் பார்ப்பனியவாதிகள் தமிழை ''நீசபாஷை'' என்று குறிப்பிட்டு வந்துள்ளனர். இது எவ் வளவு காலமாக வழக்கிலிருந்து வந்த கருத்து என்று என்னாற் கூற இயலாது என்றாலும் தமிழ் சமஸ்கிருதத்தைவிடத் தாழ்வானது என்ற எண்ணம் தென்னிந்தியாவில் பார்ப்பனிய இந்து மதங்களின் மேலாதிக்கத்தையொட்டி உருவாகியிருக்க வேண்டும். தமிழ் கோவிற் பூசை வழிபாடுகட்கு உகந்த மொழியல்ல என்ற கருத்து கோவிற் சடங்குகள் முற்றாகப் பார்ப்பனியப்பட்ட சூழலிலே உருவான சிந்தனையே யாகும்.

சமஸ்கிருதக் கலப்பு இந்தியாவின் எல்லா மொழிகளிலும் உள்ளது. அது நேரடியாகவோ இன்னொரு இந்திய மொழி மூலமோ நடந்திருக்கலாம். அது போல, சமஸ்கிருதமும் பல பழைய இந்திய மொழிகளிலிருந்து சொற்களை மட்டு மன்றி மொழியமைப்பின் பிற பண்புகளையும் உள்வாங்கியே விருத்தி பெற்றது. சமஸ்கிருதம் அல்லாத இந்திய மொழிகளை எல்லாம் பிராகிருதங்கள் என்று அல்லது பிராகிருதம் என்ற ஒருமையிற் குறிப்பிடுகிற ஒரு மரபு இருந்து வந்துள்ளது. சமஸ்கிருதத்திலிருந்தே தமிழ் உட்பட்ட அனைத்துப் பிராகிருதங்களும் உண்டாயின என்ற சிந்தனையும் பார்ப்பனிய மேலாதிக்கத்திற்குரியது. அண்மைக்காலம் வரை, தமிழ் வேறொரு மொழிக் குடும்பத்திற்குரிய மொழி என்பது ஐயத்துக்கிடமின்றி 19ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட பிறகு கூட அக்கருத்து தொடர்ந்தது. 1950களில் ராஜாஜி என அறியப்படும் சி.ராஜகோபாலாசாரி சமஸ்கிருதத்திலிருந்து தான் அனைத்து இந்திய மொழிகளும் வந்தன என்று சொன்னார். சமஸ்கிருதம் பிற இந்திய மொழிகளிலிருந்து உருவானது என்று சொல்வது 'போளி' எனப்படும் இனிப்பிலிருந்து தான் சர்க்கரை (சீனி) கிடைக்கிறது என்று சொல்வது போலாகும் என்று உவமை கூறி அதை விளக்கவும் முயன்றார். ராஜகோபாலாசாரி சட்டமும் அரசியலும் அறிந்த ஆற்றல் மிக்க எழுத்தாளர். தமிழ் இலக்கியவாதி என்றும் அறியப்பட்டவர். ஆனாலும் அவர் மொழியிலாளரும் அல்ல. மொழி வரலாற்றாளரும் அல்ல.

அவருடைய கருத்துக்கள் சமஸ்கிருதத்தையே இந்தியாவின் தேசிய மொழியாக ஏற்க வேண்டும் என்ற சிந்தனையையொட்டி முன்வைக்கப்பட்டவை. என்றாலும் சமஸ்கிருதமே மூல மொழி என்ற மயக்கத்திற்கு சமஸ்கிருதம் பற்றிய அறியாமையின் அளவுக்குப் பார்ப்பனிய ஆதிக்க நோக்கங்கட்கும் ஒரு பங்கிருந்தது.

சமஸ்கிருதம் என்பது வேதங்களின் மொழிகளின் அடிப்படையில் உருவான மொழி என்பதும் சமஸ்கிருதம் ஆளும் அதிகார வர்க்கத்தின் கற்றோருக்கும் பல்துறைப் புலமையுடையோருக்கும் உரிய மொழியாக விருத்திபெற்ற அதே காலத்தில் இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்திற்குரிய பிராகிருதங்கள் பல உருவாகியிருந்தன. அவை இந்தியத் துணைக் கண்டத்தில் ஏலவே இருந்து வந்த திராவிட, முண்டா, திபெத்திய - பர்மிய மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளின் செல்வாக்கிற்கும் மொழிக் கலப்பிற்கும் உட்பட்டிருந்தன. பார்ப்பனிய ஆதிக்கம் சமஸ்கிருதத்தைச் ''சான்றோர் மொழியாகவும்'' மதம் சார்ந்த தேவைகட்குரிய மொழியாகவும் வரையறுத்ததற்குத் தெளிவான சாதிய - வர்க்க ஆதிக்க நோக்கங்கள் இருந்தன என நம்பலாம். உயர் அறிவும் நல்ல இலக்கியங்களும் ஒரே நேரத்தில் சமஸ்கிருதத்திற்கும் பார்ப்பனருக்கும் உரியனவாக வரையறுக்கப்பட்ட நிலையில் சமஸ்கிருதம் முழுச் சமூகத்திற்கும் உரிய மொழியாகத் தொடர இயலாது போனதில் வியப்பில்லை. எனினும் சமஸ்கிருதத்தின் சொல்வளமும் அதன் சிக்கலான சொல்லமைப்புக்களும் சமஸ்கிருதம் தனது வேத மொழிக்கும் வெளியிலிருந்து சொற்கள் உட்பட்ட பல்வேறு மொழிக் கூறுகளை உள்வாங்கியதையே சுட்டிக் காட்டுகின்றன. எனவே இந்து மதங்களின் உபநிடதங்கள் தோத்திரங்கள் மந்திரங்கள் முதலாகப் பின்னைக் காலக் காவியங்களையும் சமூக, அறிவுத்துறை நூல்களையும் கொண்ட சமஸ்கிருதம் முதன்மொழியுமல்ல, தூய மொழியுமல்ல அது பல்வேறு அயல்மொழிக் கூற்றுக்களை உள்வாங்கியதன் காரணமாகச் சொல்வளம் மிகுந்தும் அதே சமயம் சிக்கலான சொல்லமை ப்புடையதாகவும் மாறியது. ஆனால் ஏதோ ஒரு நிலையில் வளராது தேங்கிவிட்டது.

சமஸ்கிருதம் மக்களாற் பேசப்படும் மொழியாக இருந்திருந்தால் அது பல மொழிகளாகக் கிளை விட்டும் இருக்கலாம். அல்லது சீன, கிரேக்க, தமிழ் மொழிகள் போன்று காலத்திற்கமைய மாறியுமிருக்கலாம். சமஸ்கிருதம் ஆளும் அதிகார வர்க்கத்தின் மொழியாக அதிலும் முக்கியமாகப் பெரும்பாலான மக்களிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்ட மொழியாக முடங்கியது. சமூக வாழ்வில் அதன் இறப்பிற்கு அதுவே காரணமானது. ஆனாலும் லத்தினைப் போல அது மதத்துக்கும் அறிவுத் துறைகட்குமான மொழியாகத் தன்னை நிலைநிறுத்தியதற்கும் மேலாகப் பார்ப்பனச் சாதியினரின் ஆதிக்கத்தை அடைளப்படுத்தும் மொழியாகவும் இருந்தது. அதன் ஒரு பகுதியாகவே தமிழகத்தில் தமிழை இழிவாகக் கருதுகிற ஒரு போக்கும் உருவானது.

இச் சூழலிலே பிரித்தானிய ஆய்வாளர்கள் தமிழ் இன்னொரு மொழிக் குடும்பத்திற்கு உரியதும் இந்தியத் துணைக் கண்ட மொழிகளில் சமஸ்கிருதக் கலப்புக் குறைந்ததும் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட போது தமிழ் அறிஞரிடையே அது பெரும் வரவேற்பைப் பெற்றது. தமிழியக்கம் என்று சொல்லக் கூடிய மொழியும் பண்பாடும் சார்ந்த இயக்கங்களது எழுச்சிக்கும் அது தூண்டுகோளாயிற்று.

சமஸ்கிருத ஊடுருவலுக்கு எதிரான போக்கு எல்லா இந்திய மாநிலங்களிலும் இல்லை. எனினும் சமஸ்கிருத எதிர்ப்பை வெறுமனே ஆரிய - திராவிட என்ற அடிப்படையிற் பார்ப்பது தவறான முடிவுகட்கே இட்டுச் செல்லும் ''சமஸ்கிருதமாக்கல்'' அதற்கு உட்படும் மொழியின் எளிமைக்கும் தெளிவுக்கும் ஊறாக உள்ள போதும் மக்கள் வழமையாகப் பயன்படுத்தக் கூடிய சொற்களின் இடத்தில் பழகச் சிக்கலான சொற்கள் அமையும் போதும், அதை எதிர்ப்பது என்பது மக்கள் சார்ந்த ஒரு நிலைப்பாடு. இவ்வாறான சமஸ்கிருத விரோதம் பல்வேறு மாநிலங்களிலும் உள்ளது.

சமஸ்கிருதத்தின் சிக்கலான ஒலிச் சேர்க்கைகளை மக்களின் மொழிகள் பொதுவாகவே தவிர்த்து வந்துள்ளன. அதே வேளை சமஸ்கிருதச் சொற்களை மூலத்தில் உள்ளபடியே பாவிக்க வேண்டும் என்கிற பண்டித மனோபாவம் தமிழரிடையிலும் ஒரு காலத்தில் இருந்தது. சிங்களவரிடையிலும் இருந்து வந்து பின் முறியடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வட இந்தியாவில் பரந்துபட்ட அளவில் வழக்கில் இருந்து வந்த ''ஹிந்துஸ்தானி'' உருது மொழி பாரசீக - சமஸ்கிருத மொழிகளின் அடிப்படையிலானது. இந்தியத் துணைக்கண்டப் பிரிவினைக்குப் பின்பு இந்தியிலிருந்து உருதுச் சொற்களை நீக்கி சமஸ்கிருதச் சொற்களைப் புகுத்தும் முயற்சி வலுவடைந்துள்ளது. இதற்கு இந்துத்துவத்தின் எழுச்சி மேலும் துணையாயும் தூண்டுதலாயும் உள்ளது.

தமிழரிடையே சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு என்பது முற்போக்கானது. அதன் பார்ப்பனிய விரோதப்பரிமாணமும் தமிழரின் எளிமையை வலியுறுத்தும் நோக்கும் மெச்சத்தக்கவை. ஆனால் தமிழ்த் தேசியவாதமும் தனித்தமிழ் இயக்கமும் அதற்குப் அப்பால் ஒரு மரபுவாதப் பழமைபேணற் சிந்தனையைப் பேணின. எனவே மக்களின் மொழி இயக்கமாக வளர வேண்டிய சமஸ்கிருத மறுப்பு சடங்குத்தனமான ஒரு திசையில் செலுத்தப்பட்டது. அதைப் பற்றியும் தமிழரின் தூய்மைக் கோட்பாடுகளைப் பற்றியும் அடுத்த கட்டுரையிற் பார்ப்போம்.

# நாடு கடந்த தமிழீழ அரசு யாருக்காக ?

நாடு கடந்த இடைக்காலத் தமிழீழ அரசாங்கம் என்று ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த அரசாங்கம் என்ன செய்யும்? அதில் யார் இருக்கிறார்கள்? அது யாருடைய நலன்களை அடையாளப்படுத்துகிறது? இந்தக் கேள்விகளுக்கான சரியான மறுமொழிகள் இந்த நாடுகடந்த அரசாங்கம் பற்றிய கருத்து யாரால் எப்போது உருவாக்கப்பட்டது என்பதை விளங்கிக் கொண்டால் மட்டுமே கிடைக்கும்.

விடுதலைப் புலிகள் முழுமையான தோல்வியை எதிர்நோக்கியிருந்த ஒரு நிலையிலேயே. அவர்களுடைய புலம் பெயர்ந்த மேட்டுக்குடி ஆலோசகர்கள் இந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பற்றித் திட்டமிட்டனர். அதற்கான நோக்கம் தெளிவானது. எவ்வாறு தமிழரசுக்கட்சி தமிழ் மக்கள் நடுவே தனது நம்பகத் தன்மை கேள்விக்குறியாக மாறிய வேளையில், தமிழ் மக்களின் விரக்தி தனக்கெதிரான பேரலையாகாமல் தடுக்கத் தமிழரசுக்கட்சி என்ற பேரைத் தவிர்த்துத் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்ற பேரைச் சூடித் தனித் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்ததோ அதையொத்ததே இந்த நாடகம். இலங்கையில் நடைபெறும், பேரினவாத இன ஒடுக்கல் காரணமாகப் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நடுவே தமிழீழ விடுதலை என்ற கோட்பாட்டுக்கு ஆதரவைக் கட்டியெழுப்புவதில் சிரமம் இருக்கவில்லை. விடுதலைப்புலிகளின் ஜனநாயகமின் மையும் சுத்த ராணுவக் கண்ணோட்டமும் அடக்குமுறைகளும் பற்றிக் கண்டுங் காணாமலே புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் பெரும்பாலானவர்கள் இருந்தனர். ஏனெனில் அவர்கள் முன்னால் அரசாங்கத்தின் பேரினவாத, இன ஒழிப்புப் போர் நடவடிக்கைகட்கு முன்னால் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு தெரிவு இருக்கவில்லை. எனவே போரில் விடுதலைப்புலி களின் இறுதித் தோல்வி வரை புலம்பெயர்ந்தோரிடையே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு இருந்து வந்தது.

விடுதலைப் புலிகளின் அழிவைத் தடுப்பதற்கும் அப்பாவித் தமிழ் மக்களின் மீதான பேரழிவுத் தாக்குதல்களையும் இராணுவக் கொடுமைகளையும் தடுப்பதற்கும் மேலை நாட்டு அரசாங்கங்கள் குறுக்கிடும் என்று நம்பிக்கை ஊட்டிய ஒரு மேட்டுக்குடிகளின் கூட்டம் தாங்கள் ஊட்டி வளர்த்த நம்பிக்கைகளும் எதிர்பார்ப்பு க்களும் பொய்த்துப் போனவுடன் தங்களுடைய இருப்பை நிலை நிறுத்தித் தங்கள் மீது புலம்பெயர்ந்த மக்கள் சினம் கொள்ளு முன்பதாக எடுத்த ஒரு தற்காப்புத் தந்திரோபாயமே இந்த நாடுகடந்த அரசாங்க ஆலோசனை.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தாங்கள் எந்த அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளு வது என்பதை முடிவு செய்வதற்கு வாய்ப்பு இல்லாத விதமாகவே இந்த ஆலோசனைக்கான அதிரடிப் பிரசாரம் மேற்கொள்ள ப்பட்டது. தமிழீழக் கோரிக்கையை நோக்கித் தமிழரசுக்கட்சி நகரத் தொடங்கிய போது பொது மக்கள் நடுவே அரசியல் விவாதங்கள் நடந்தன. அவ் விவாதங்களின் பயனாக மாற்றுக் கருத்துக்கள் வேரூன்றித் தமிழீழக் கோரிக்கை மூலம் தாங்கள் பெறவிருந்த தேர்தல் வெற்றிக்குப் பங்கம் நேரலாம் என்று தமிழரசுக் கட்சித் தலைமை அஞ்சியது. விவாதங்களுக்குத் தடைவிதித்து வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முடிந்த முடிவாக்கியது.

இப்போது புலம்பெயர் சூழலில் நடப்பது அதைவிடப் பொல்லாத மோசடி. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்றால் என்ன என்பதைப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் விளங்கிக் கொள்ள இடம் வழங் காமல், தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்த

## அரசியல் கடத்தல்காரர்களின் தமிழீழக் கோட்பாடு

தோல்வியைப் பற்றி மக்கள் சிந்திக்க வாய்ப்பே இல்லா மல், இந்த ஆலோசனை புலம்பெயர் தமிழ் மக்கள் மீது திணிக் கப்பட்டுள்ளது. கருத்து வாக்கெடுப்புக்கள் என்ற பேரிலும் அதை விட வஞ்சகமாகப் பிரதிநிதிகளின் தெரிவுகளும், ''ஜனநாயக மான'' முறையில் நடத்தப்பட்டு, ஒரு ஏகாதிபத்திய சார்பு மேட்டு க்குடிக் கும்பல், புலம்பெயர்ந்த தமிழரின் முதன்மைப் பிரதிநிதிக ளாகத் தன்னை அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பேராலும் தமிழ் மக்களின் நலன்களின் பேராலும் திரட்டப்பட்ட நிதியின் கணிசமான பகுதி இந்தத் திரு ட்டுக் கும்பலின் கட்டுப்பாட்டில் உள்ளது. இன்னொரு பெரிய பகுதி இந்தக் கூட்டத்துடன் முரண்பட்டு நிற்கும் இன்னொரு திருட்டுக் கும்பலின் கைகளில் சிக்கியுள்ளது. இவர்களைவிட நிதி திரட்டுவதில் முன்ன ணியில் நின்ற சில தனி மனிதர்களும் புலம் பெயர்ந்த தமிழர்களின் நிதியைத் தருணம் பார்த்துத் தமதாக்கியுள்ளனர். இலங்கை அரசாங்கத்திடமும் ஒரு பகுதி சில முன்னாள் புலித்தலைமை உறுப்பினர்கள் மூலம் போய்ச் சேர்ந்துள்ளது.

மக்களுக்கு எதையுமே விளக்கத் தேவையில்லை, மக்களிடம் எதற்கும் கணக்குக் காட்டத் தேவையில்லை என்ற மரபு தமிழ்த்தேசியவாத மரபின் ஒரு பகுதியாக இன்றுவரை தொடர்ந்து வந்துள்ளதையே இந்த நாடுகடந்த அரசாங்கத்தின் பொறு ப்பாளர்கள் நமக்கு நினைவூட்டுகிறார்கள்.

எப்படித் தமிழரசுக்கட்சியினதும் விடுதலைக் கூட்டணியினதும் இப்போது தமிழர் தேசியக் கூட்டமைப்பினதும் தலைமை ஒரு வசதிபடைத்த உயர்சாதி மேட்டுக்குடிக் கும்பலின் கையில் இருந்து வந்ததோ அப்படியே புலம்பெயர்ந்த தமிழரின் தலைமையும் பெரிய இடங்களில் தமக்குச் செல்வாக்கு உள்ளதாகக் காட்டிக் கொள்ளும் ஒரு கும்ப லின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்துள்ளது.



அமெரிக்க பிரஜா உரிமைபெற்ற யாழ். மேட்டுக் குடிவந்த
**வி.உருத்திரகுமாரன்**

தமிழரசுக்கட்சியும் கூட்டணியும் கூட்டமைப்பும் ஒரு சாட்டுக்காகப் பிற்படுத்தப் பட்ட சமூகங்களைச் சேர்ந்த சிலரைத் தலைமைப் பீடத்தில் இருப்பதாகக் காட்டிக் கொண்டு மேட்டுக்குடி அரசியலை முன்னெடுத்து வந்தனவோ அப்படியே தான் புலம்பெயர்ந்த தமிழரின் ''நாடுகடந்த அரசாங்கத்திலும்'' ஓரிருவரை 'வெளியிலிருந்து' கொண்டு வந்து வைத்துக் கொண்டு மேட்டு க்குடி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டுள் ளனர்.

இந்த நாடுகடந்த அரசாங்கம் எதைச் சாதிக்கும் என்ற கேள்விக்கு அதன் பின்னால் இருப்பதாகக் கூறப்படும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சட்ட நிபுணர்களும் அறிஞர்களும் நிதிதிரட்டுவோரும் தெளிவாக எதையுமே கூறவில்லை. ஏனெனில் அரசியல் ரீதியாக அவர்கள் செய்யக் கூடிய எதுவுமே அவர்கள் வாழுகிற நாடுகளின் அரசாங்கங்களின் நோக்கங்கட்கு முரணாக அமையுமா னால் அவர்களுடைய இருப்பே மிரட்ட லுக்கு உட்படும் என அவர்கள் நன்கு அறிவார்கள். விடுதலைப்புலி ஆதரவா ளர்கள் எனப்படுவோரின் அடாவடித் தனங்களைக் கூடக் கண்டுங் காணாமலும் இருந்து விடுதலைப் புலிகளைப் புலம்பெயர்ந்தோரிடையே ஒரு வலிய சக்தியாக வளர்வதை அனுமதித்த மேற்கு நாடுகள் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் விடுதலைப் புலிகட்கு எதிராக மேற் கொண்ட கடும் போக்கிற்கு என்ன காரணம் என்று சிந்தித்தால் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் மேலை நாடுகட்குப் பயன் படும் அளவுக்கே அவற்றின் செயற்பாடுகள் அனுமதிக்கப்படும் என விளங்கும்.

இதிற் கூட, அவர்கள் இலங்கையில் முன்னோரின் மேட்டுக்குடித் தலைமைத்துவத்தின் போக்கையே பின்பற் றுகின்றனர். எனவே சர்வதேச அரங்கில் புலம்பெயர்ந்த தமிழரைத் தொடர்ந்தும் ஏமாற்றுவதற்கும் மேலாக இந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் பிரமுகர்கள் எதையுமே செய்யப் போவதில்லை.

ஆனாலும் இந்தப் புலம்பெயர்ந்த அரசாங்கப் பிரகடனமும் அதன் பிரமுகர்களது வாய்ச் சவடாக்களும் இலங்கையின் பேரினவாத அரசாங்கத்திற்கு மிகவும் வாய்ப்பானவை. ஏற்கனவே அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை நியாயப்படுத்த 'விடுதலைப்புலிகளின் புலம்பெயர்ந்த அரசாங்கம்'' இலங்கையின் பாதுகாப்புக்கு ஒரு மிரட்டலாக உள்ளது என்ற வாதம் பாராளு மன்றத்திற் பயன்பட்டுள்ளது.

1960களில் தமிழ் நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட சி.பா.ஆதித்தனரின் ''நாம் தமிழர் இயக்கம்'' என்ற பேர்கூட இலங்கையில் தமிழரசுக்கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை நியாயப்படுத்தப் பயன்பட்டது. 1961 சத்தியாக்கிர கத்தை அடுத்து இலங்கையில் எந்தவிதமான அரசியற் செயற்பாடு மற்றுக் கிடந்த ''திராவிட முன்னேற்றக் கழகங்களும்'' தடைசெய்யப்பட்டன. அன்று சிங்கள மக்களுக்குத் தமிழகத்திலிருந்து மிரட்டல் என்று பூச்சாண்டி காட்டிய பேரினவாதத்தையும் அரச அடக்குமுறையையும் எப்படி வலுப்படுத்த முடிந்ததோ அப்படியே இந்தச் செயலற்ற நாடு கடந்த அரசாங்கமும் பயன்படுமென் நாம் நம்பலாம்.

இலங்கை அரசாங்கத்திற்கும் ஆளும் அதிகார வர்க்கத்திற்கும் தேசிய இனப்பிரச்சினை கனன்று கொண்டிருப்பது வசதியானது. பிரிவினை மிரட்டல், பயங்கரவாதம் என்பன பற்றிச் சிங்கள மக்கள் நடுவே அச்சங்களை உயிரோடு வைத்திருப்பதன் மூலமே போர் முடிந்த பிறகும் ராணுவ த்தைத் தொடர்ந்தும் பலப்படுத்தவும் அவசரகாலச் சட்டத் தையும் பிற அடக்குமுறைச் சட்டங்களையும் அதிகம் எதிர்ப்பின்றி நீடிக்கவும் இயலும். அண்மையிற் கூட ஆட்கடத்தற் சம்பவங்கள் என்று ஒரு ஆளுந் தரப்புக் கட்சியும் இராணுவமும் சேர்ந்து நாடகமாடியே பழையபடி சோதனைச் சாவடிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறான நிகழ்வுகள் புலம்பெயர்ந்தோர் நடுவே இலங்கையில் இன்னமும் விடுதலைப் புலிகள் செயற்படுகின்றனர் என்ற மயக்கத்தை ஏற்படுத்தவும் உதவுவன. எனவே மக்களை ஏமாற்றியே தங்கள் செல்வாக்கைப் பேணுகிற கூட்டங்கட்கே இந்த விதமான நாடகங்கள் யாவும் பயன்படுகின்றன.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தங்களின் பேரால் ஒரு இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கியிருக்கிற இந்தக் கூட்டத்தினரிடம் முக்கியமான சில கேள்விகளைக் கேட்க வேண்டும். தமிழீழ விடுதலையின் பேராலும் ஈழத் தமிழ் மக்களின் நலனினதும் புனர்வாழ்வினதும் பேர்களாலும் திரட்டப்பட்ட பணத்திற்கான கணக்கையும் அதில் இந்த இடைக்கால அரசாங்கத்திடம் உள்ள பகுதியையும் பற்றிக் கேட்க வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு வேறு இடங்களிலிருந்து யாராலும் நிதி வழங்கப்படுமாயின் அது எவரால், ஏன் வழங்கப்படுகின்றது என்ற முழு விவரங்களும் கேட்டறியப்பட வேண்டும். அதன் வேலைத்திட்டங்கள் என்ன என்றும் எந்த முடிவையும் செயற்படுத்த முன்பு புலம்பெயர் தமிழ் மக்களிடையே விரிவான பொது விவாதங்களை முன்வைக்குமாறு அவர்களை வற்புறுத்த வேண்டும். பொதுவாக ஏற்கப்படாத முடிவுகளை நடைமுறைப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. தமிழ் மக்களில் ஒன்பது சதவீதமானோரின் ஆதரவை மட்டுமே தமிழர் பிரதிநித்துவம் என மன்றாடிப் பெற்ற ஒர கூட்டம் இந்திய ஆட்சியாளர்களது கைப்பாவைகளாக இயங்குகிறது. புலம் பெயர்ந்த மக்களை ஏமாற்றி ஜனநாயக முறையில் அவர் களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டோரெனக் காட்டிக் கொள்ளும் தமிழரசுக்கட்சிப் பரம்பரையில் வந்த உருத்திரகுமாரின் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எடுபிடியாகச் செயற் பட்டு வருகிறது. இவற்றுக்கு வெளியே பழைய தவறான பாதையையே பின்பற்றுகிற வெவ்வேறு மோசடிக் கும்பல்களும் உள்ளன.

இவை அனைத்தையும் கேள்விக்குட்படுத்தித் தமிழ் மக்களின் பேரால் காட்டிக் கொடுப்புக்களையும் உண்மையான தமிழ் மக்கள் விடுதலை எழுச்சி ஒன்று உருவாதற்குப் பாதகமான நடைமுறைகளையும் தடுப்பது புலம் பெயர்ந்த தமிழரின் கடமை. இலங்கை வாழ் தமிழ் மக்கள் அவநம்பிக்கையின் நடுவே வாழ்ந்தாலும் நிச்சயமாகப் பழைய ஏமாற்றுக் கும்பல்கட்குப் பலியாக மாட்டார்கள். எனவே புலம்பெயர் தமிழருடை யேயுள்ள நல்ல சக்திகள் இலங்கை வாழ் தமிழ் மக்களது நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ளவும் புலம்பெயர்ந் தோரிடையே அதை விளக்கவும் கூடிய ஊக்கங் காட்ட வேண்டும்.

5ம் பக்க தொடர்ச்சி

### மஹிந்த சிந்தனை

திருத்தம் செய்யப்படுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகிறது. அதற்கு அரசாங்கத்திற்கு ஆறு பாராளுமன்ற உறுப்பினரகள் தேவையாக உள்ளனர். அதனைப் பெறுவது மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு அவ்வளவு சிரமமாக இருக்க மாட்டாது. அதிற் கைதேர்ந் தவர்களே அதிகாரத்தில் இருக்கின்றனர். கட்சி மாறி அரசா ங்கப் பக்கம் வந்தோருக்கெல்லாம் வாரிவாரி அமைச்சர் பதவிகள் வழங்கி 110 அமைச்சர்களை முன்னைய அரசாங்கத்தில் வைத்திருந்து அனுபவம் அவர்களுக்கு உண்டு. அப்படியென்றால் ஆறுபேரை வளைத்துக் கொள்வது பெரிய விடயமாகாது. எனவே அரசியலமைப்புத் திருத்தமும் தேர்தல் சீர்திருத்தம் மாற்றிய மைத்தலும், ஏனைய சட்டங்களின் நிறைவேற்றங்களும் சர்வா திகாரத்தை நோக்கிய பாதையில் பயணிப்பதையே சுட்டிக்காட்டி நிற்கின்றன. இவ்வாறான போக்குகளின் விளைவுகள் நிச்சயம் ஜனநாயகமாக இருக்கப் போவதில்லை. அவை ஃபாசிசத்தின் வளர்ச்சியாகவும் கொடூரமாகவும் மட்டுமே இருக்க முடியும்.

தேசியவாதம் முற்போக்கான திசையில் பயணித்து சோஷ லிசக் கருத்தியலை உள்வாங்கி முன் செல்லுமாயின் அதனால் நாட்டிற்கும் மக்களுக்கும் விமோசனம் உண்டு. அன்றித் தேசியவாதம் பிற்போக்கான திசையில் பயணிக்குமானால் அது ஃபாசிசத்தின் உச்சத்தை நோக்கியே செல்ல முடியும். இதற்கு ஏராளமான உதாரணங்களை வரலாறு விட்டுச் சென்றுள்ளது. எனவே இலங்கையின் எதிர்காலம் ஜனநாயகப் பாதையிலா ஃ பாசிசப் பாதையிலா என்ற முடிவின் மீதே அமையப் போகின்றது. இத்தகைய ஒரு சூழலில் மக்கள் தான் தீர்க்கமானவர்களாக இருக்க முடியும். மாற்று அரசியலுக்கும் எழுச்சிக்கும் தயா ராகுவதைத் தவிர வேறு மார்க்கம் மக்களுக்கு இருக்கப் போவதில்லை. பாராளுமன்றத்தின் கதிரைகளுக்கு ஆட்களை மாற்றியோ அடுத்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அதிகாரத்திற்கு கொண்டு வந்தோ, மாற்றங்களை மக்களுக்குரியதாகக் கொண்டுவர முடியாது. முற்றுமுழுதான மாற்று அரசியல் கொள்கைகளும் மாற்றுத் தலைமைகளும் ஒன்றுட்டு வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் முன்செல்லாத வரை மக்களுக்கும் முழு நாட்டிற்கும் கரை சேர வழியே இல்லை.

# தமிழ்த் தேசியத்தின் பார்வையும் குறுந் தேசியவாத வளர்ச்சியும்

நம்மையே மறுத்தல்

குறுகிய தமிழ்த் தேசியவாதம் தன்னை நிலைநிறுத்துவதற்காகப் பல்வேறு தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி வந்துள்ளது. இன, மொழி உணர்வுகளை வெறித்தனமான உணர்ச்சிகளாக விருத்தி செய்வது அவற்றுள் அடிப்படையான ஒரு உபாயமாக அமைந்தது எனலாம். இன்னொன்று தனக்கும் தன்னால் எதிரியாகக் கொள்ளப்படும் சமூகத்திற்குமிடையிலான வேறுபாடுகளை மிகைப்படுத்துவதும் பொதுவான பண்புகளைக் குறைத்துக் கூறுவது அல்லது மறுப்பதுமாகும். இது நம் தமிழ்த் தேசியவாதத்தின் நடத்தைக் கோளாறு மட்டுமல்ல. ஒவ் வொரு குறுகிய தேசியவாதத்தின் உள்ளும் இவ்வாறான போக்குக்களை நாம் காணலாம். இப் போக்குக்கள் மக்களைத் தனித் தனிச் சமூகங்களாகப் பிரிப்பதுடன் பகைமையை மூட்டிவிடுகிற காரியங்களாகவும் விருத்தி பெறுகின்றன. சமூகங்களிடையே நட்புணர்வு போன்றதே பகையுணர்வும். ஒன்றின் நட்புணர்வு மற்றதன் நட்புணர்வால் ஊட்டம் பெறுவது போல, ஒன்றின் பகையுணர்வு மற்றதன் பகையுணர்வுக்கு ஊட்டமளிக்கிறது. அதன் விளைவாக ஒன்றுபடக் கூடிய வாய்ப்பை அதிகளவிற் கொண்ட சமூகங்கள் பிரிந்தும் பிளவுபட்டும் நிற்கின்றன. ஈற்றில் நன்மையடைவோர் எச் சமூகத்தைச் சேர்ந்த மக்களுமல்லர். குறுகிய தமிழ்த் தேசியவாதத்தின் தவறான அணுகுமுறை தமிழரைப் பிற சமூகத்தினரிடமிருந்து தனிமைப்படுத்த உதவியுள்ளது. சிங்களம் மட்டுமே சட்டமாக்கப்பட்டதன் பின்பு தமிழ்த் தலைமைகள் முன்னெடுத்து வந்த சில நடவடிக்கைகளையும் குறுகிய தேசியவாதம் பிரிவினைக் கோரிக்கையாகி ஆயுதப் போராட்டமான போது கடைப்பிடித்த அணுகுமுறையின் சில வெளிப்பாடுகளையும் பற்றி இக் கட்டுரையிற் சுருக்கமாக ஆராயப்படும். இக் கட்டுரைத் தொடரில் உடைக்கப்பட வேண்டிய தமிழ்த் தேசியத்தின் பிற்போக்கான சில விடயங்கள் சுட்டிக் காட்டுகிறது.

## சுதந்திர தினம்

எந்த நேர்மையான இடதுசாரியும் இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4ஆம் நாளன்று சுதந்திரம் கிடைத்ததாகச் சொல்லியதில்லை. அன்று பிரித்தானியக் கொலனிய நிருவாகம் தனது நேரடியான அதிகாரத்தைத் தனது விசுவாசிகளான சில மேட்டுக்குடிகளின் கைகளில் ஒப்படைத்தது. இந்த நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் உலகச் சந்தைப் பொருளாதாரம் என்ற பேரில் சமனற்ற முறையில் ஏற்றுமதி-இறக்குமதிப் பண்டப் பரிமாறலுக்கும் உட்பட்டு வந்தது. முழுமையான பொருளாதாரச் சுதந்திரமில்லாது மூன்றாமுலக நாடுகள் கொலனிய ஆதிக்கத்தின் இடத்தில் நவகொலனிய ஆதிக்கத்தையே அனுபவித்தன.

எனவே சுதந்திர தினம் என்பதிற் கொண்டாடுவதற்கு அதிகம் இல்லை என்பது சரியான ஒரு நிலைப்பாடு. ஆயினும் நேரடியான கொலனி ஆட்சி நீக்கம் என்பது நிராகரிக்க வேண்டிய ஒன்றல்ல. தொடர்ந்தும் நேரடியான கொலனிய ஆட்சியே இருக்க வேண்டும் என்பது சரியான நிலைப்பாடும் ஆகாது. நேரடியான கொலனிய ஆட்சியின் நீக்கத்தை நாட்டின் சுதந்திரமாக்கும் பணி நிறைவேற்றப்படாமல் உள்ளது என்பதால் சுதந்திர தினம் பெறுமதியற்றது என்பது ஒரு விடயம். அது துக்க தினம் என்பது முற்றிலும் வேறொரு விடயம்.

நமது தமிழ்த் தேசியத் தலைவர்கள் 1956ம் ஆண்டு வரை சுதந்திர தினக் கொண்டாட்டங்களிற் பங்கு பற்றினவர்கள் தான். எனவே, இடதுசாரிகள் போலன்றி 1948 பெப்ரவரி 4ஐச் சுதந்திர தினமாக ஏற்றவர்களாவர். எனினும் 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டதன் பின்பு சோல்பரி யாப்பு தமிழரசுக் கட்சியினரால் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டதுடன் சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுட்டிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

1948ம் ஆண்டு மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்ட போது இல்லாத விதமாக இலங்கையின் சுதந்திர தினம் என்பது மறுக்கப்பட வேண்டியதாகவும் துக்க தினமாகவும் கொண்டாடப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது. சுதந்திர தினக் கொண்டாட்டங்களிற் பங்கெடுக்க மறுப்பது நமது குறைபாட்டை எடுத்துரைக்கும் ஒரு செயல்முறை. அதைப் பற்றிச் சிங்கள மக்கள் அதிகம் குற்றங்காண இடமிருந்திராது. 1957 சுதந்திர தினத்தைத் துக்க தினமாக்கிக் கறுப்புக் கொடியேற்றுவது என்ற தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தின் பொருளென்ன? தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலர் மேடையேறிப் பிரகடனம் செய்தது போல அது ஒரு துக்க தினமா?

எட்டு ஆண்டுகளாக அவர்கள் எல்லாரும் கொண்டாடி வந்த நாள் எப்படித் துக்க தினமாகும்? அந்த நாளில் அவர்களும் அவர்கள் எதிர்பார்த்தவாறு தமிழ் மக்களும் துன்புறும் விதமாக என்ன நடந்தது? கொலனிய எசமானர்கள் பேரளவிலாவது நாட்டை விட்டுச் சென்றது தான் துன்பத்திற்குரிய நிகழ்வா?

கொண்டாட மறுப்பதை யாரும் தவறாக விளங்கிக் கொள்ள அதிகம் நியாயமில்லை. அது நாட்டின் பெரும்பான்மையினருக்கு உண்மையான சுதந்திரத்தைக் கொண்டு வரவில்லை. இவ்வாறான அணுகுமுறை இந்தியாவின் புரட்சிகர இயக்கங்களாலும் இந்தியச் சுதந்திர தினத்தையும் குடியரசு தினத்தையும் பற்றிக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. எனவே கொலனிய ஆட்சி நீக்கம் நடந்த நாள் உண்மையான சுதந்திர நாளல்ல என்பது போல தமிழருக்கு அதனால் நன்மை இல்லை என்று கூறுவதில் நியாயமுண்டு. அது துக்க தினம் எனும் போது கொலனிய எசமானர்கள் போன்று தமிழர்கட்கும் துன்பமானது என்று சொல்லப்படுகிறது என்றே சிங்கள மக்கள் கருத இடமுண்டு. சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்தவரை, இது, தமிழர் பற்றிய பகையுணர்வை வளர்க்க வசதியான ஒரு வாதத்தை அவர்கட்கு எடுத்துக் கொடுக்கிறது. பேரினவாதச் சிந்தனையற்ற சிங்களவர்களின் மனதில் இது எத்தகைய உணர்வை எழுப்பும்? தமிழர் கொலனி ஆட்சி தொடர்ந்தும் இருப்பதையே விரும்புகின்றனர் என்ற எண்ணத்திற்கு அது இடமளியாதா? அதனாலேயே இடதுசாரிகள் பெப்ரவரி 4ஆம் நாளைத் துக்க தினமாக அனுட்டித்துக் கறுப்புக்கொடி ஏற்றுவதைக் கடுமையாக விமர்சித்தனர்.

திருகோணமலையில் 1957 சுதந்திர தினத்தன்று மணிக்கூட்டுக் கோபுரத்தில் கறுப்புக்கொடி ஏற்ற எடுக்கப்பட்ட முடிவு ஒரு அப்பாவித் தமிழரின் சாவுக்குக் காரணமாயிற்று. மணிக்கூட்டுக் கோபுரத்தின் அயலில் குழுமியிருந்தோரை நோக்கிச் சந்தைக்குள் இருந்து ஒருவர் சுட்டார். அதில் நடராசன் என்பவர் இறந்தார். அச் சம்பவம் திரிக்கப்பட்டு ஒரு வீரசாகசச் செயலின் போதான வீர மரணமாகக் காட்டப்பட்டது. சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடி ஏற்றுவது விரைவிலேயே விடுபட்டுப் போனாலும் சுதந்திர தினத்தைக் கொண்டாடாமல் துக்க தினமாக அனுட்டிக்க வேண்டும் என்ற கருத்து தமிழரசுக் கட்சியினரால் 1965ம் ஆண்டு ஐக்தேசியக் கட்சி அரசாங்கத்தில் பங்காளிகளாகும் வரை சொல்லப்பட்டே வந்தது.

## தேசிய கீதம்

இலங்கையின் தேசிய கீதத்தை எழுதிய ஆனந்த சமரக்கோன் வங்கத்தில் சாந்தி நிகேதனில் இசை பயின்றவர். ரபீந்திர சங்கீதம் என்ற இசைமரபு வங்காளத்தின் மக்கள் இசை வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு ரபீந்திர நாத் தாகூரால் விருத்தி செய்யப்பட்டது. அந்த மெட்டுகளின் அடிப்படையில், சமரக்கோன் தான் எழுதிய பாடலுக்கு இசை அமைத்தார். அதுவே இலங்கையின் தேசிய கீதமாகத் தெரிவு செய்யப்பட்டது. 1972ல் சோதிடர் களின் ஆலோசனைப்படி முதலடி ''ஸ்ரீ லங்கா மாதா'' என மாற்றப்பட்ட ''நமோ நமோ நமோ மாதா'' என்கிற பாடலின் சிறப்பு ஏதெனில் அதில் எந்த ஒரு இனமோ மதமோ குறிப்பிடப்படாமையாகும். நாட்டை மட்டுமே உயர்த்திப் பாடுகிற பாடல் என்ற வகையில் அதில் வரும் ''ஸ்ரீ லங்கா'' என்ற பேரை மாற்றினால் பல நாடுகட்கும் பொருந்தி வரக்கூடிய ஒரு சிறப்பான பாடல். அதைவிட, அதற்கான ஒரு தமிழ் வடிவம் அமைக்கப்பட்டு, அது அதிகார பூர்வமானதாக ஏற்கப்பட்டுமுள்ளது. தேசிய கீதங்களைப் பொறுத்தவரை இது நல்லதொரு விதிவிலக்கான ஏற்பாடு. எனினும் குறுகிய தமிழ்த் தேசியவாதிகள் தேசிய கீதத்தைத் தமிழர் பாடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தனர். அதன் விளைவாகத் தேசிய கீதத்தைத் தமிழிற் பாட உரிமை இல்லை என்ற எண்ணமே தமிழ் மக்கள் மனதில் இன்னமும் பரவலாக உள்ளது. தேசிய கீதத்தைப் பாட மறுத்த ஒரு மரபு இப்போது சிங்களத்தில் தேசிய கீதத்தைப் பாடுகிறது. உரிய இடத்தில் அதைத் தமிழிற் பாடித் தமிழரின் மொழியுரிமையை நிலை நிறுத்துகிற எண்ணங்கூட எந்த முன்னாள் தமிழ் இன விடுதலை இயக்கத் தலைமையினரிடமும் இல்லை.

தொடரும்

# கண்டதும் கேட்டதும்

செய்திக் கோப்பு

செங்குருவி

### • ஊழல் பெருச்சாளிகள்

"இந்நாட்டில் ஊழல் மிக்க இடங்கள் மூன்று உள்ளன. கல்வித் துறை, பொலீஸ் துறை, கிரிக்கெட் சபை என்பனவை அவையாகும். இதில் ஊழல் மிக்க கிரிக்கெட் சபையை ஒரு வாரத்தில் மாற்றியமைப்பேன". இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் ஊடகவியலாளர் சந்திப்பில் கூறினார். அமைச்சர் கூறியவற்றுக்கும் அப்பால் அதியுயர் இடம் தொடக்கம் அடிமட்டம் வரை ஊழல் நிரம்பி வழிகின்ற விடயத்தை மக்கள் கண்டு கொள்ளாது தட்டிக் கேட்காது இருந்து வருவது நாட்டின் அரசியல் சாபக் கேடாகும்.

### • அடியும் எண்ணெய்யும் நெல்லும்

இடம் பெயர்ந்தோருக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்க இந்தியா ஆயிரம் கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளதாம். மேலும் மீள் குடியேற்றம் அபிவிருத்திக்காக 80 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாகவும் வழங்க உள்ளதாம். இது எதை நினைவூட்டுகிறது என்றால் நிலப்பிரபுக்கள் தமது அடிமைகளுக்கு நிறைய அடிகொடுத்து விட்டு பின்பு தனது அடிமைதானே என இரங்கி அடித்த நோவுக்கு எண்ணெய்யும் நெல்லும் வழங்கிய காலத்தையேயாகும். நமது மக்கள் இந்திய எசமான் தனத்தையும் தமது அடிமை நிலையையும் எப்போது உணரப் போகிறார்கள் என்பதே எழும் கேள்வியாகும்.

### • சினிமா கூத்தாடிகளுக்கு 100 கோடி

அண்மையில் இலங்கை அரசின் அனுசரணையுடன் கொழும்பில் சர்வதேச இந்திய திரைப்பட விழா நடைபெற்றது. அதனை பெருமெடுப்பில் நடாத்தி தங்கள் நடாத்திய யுத்த ரத்தக் குளிப்புக்கு மறைப்புக்கட்ட மகிந்த அரசாங்கம் முயன்றது. ஆனால் தென்னிந்திய சினிமாக்காரர்களின் புறக்கணிப்பாலும் வட இந்திய பெருநடிகர்களின் வரவின்மையாலும் எதிர்பார்க்கப்பட்ட கவர்ச்சியைக் காட்ட முடியவில்லை. மக்களின் பணத்தை பலகோணங்களில கறந்து கொள்ளும் சினிமாக் கூத்தாடிகளுக்காக மகிந்த சிந்தனை அரசாங்கம் செலவு செய்த பணம் நூறு கோடியைத் தாண்டிவிட்டதாகக் கூறப்படுகின்றது. உடல் அசைவு, தசைக் கவர்ச்சி, வக்கிரக் கதைகள், பாலியல் மோகம், வன்முறை வளர்ப்பு என மக்களின் பணத்தை கொள்ளையிடும் சினிமா கூத்தாடிகளுக்காக முதலாளித்துவ அரசியல் கூத்தாடிகள் செலவு செய்த பணம் யாருடையது. மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

### • யார் கூறுவது உண்மை

"இந்தியத் தலைவர்களிடமிருந்து இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணுமாறு எவ்வித அழுத்தமும் எமக்குத் தரப்படவில்லை. இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றமும் ஏற்படவில்லை" -- அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

"இலங்கை இனப் பிரச்சினைக்கு சாத்தியமான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கூறியுள்ளேன்" -- பிரதமர் மன்மோகன்சிங் கருணாநிதிக்கு கடிதம்.

"இலங்கை தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன" -- அமெரிக்க உதவி வெளி விவகார அமைச்சர் ரொபேர்ட் பிளேக்.

இக் கனவான்களின் கூற்றுக்கள் பற்றித் தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு என்ன செய்தியைக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### • அகாசி ஏன் அலைகிறார்

ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட தூதர் அக்காசி என்பவர் யுத்த காலத்தில் பல தடவைகள் இங்கு வந்து சென்றார். ஒவ்வொரு முறையும் ஊடகங்கள் அவரது பயணத்தை ஊதிப்பெருக்கி ஏதோ சமாதானத் தூதுவராகச் சித்தரித்து வந்தன. இப்போது அக்காசி இருபதாவது தடவையாக வந்தார். முன்பும் சரி இப்போதாயினும் அக்காசி இந்நாட்டு மக்களின் மீதான கரிசனையால் வரவில்லை. யப்பானிய மூலதன வர்த்தக வணிக விஸ்தரிப்பிற்கே என்பதை எத்தனை பேர் உணர்வார்கள்?

# காஸா சென்ற உணவுக்கப்பல் மீது இஸ்ரேலிய வெறியர்கள் தாக்குதல்

பாலஸ்தீனத்தின் காஸாப் பகுதியை இஸ்ரேல் முற்றுகைக்குள் வைத்திருக்கிறது. அங்குள்ள மக்கள் பசியாலும் அத்தியாவசியத் தேவைகள் இல்லாமலும் அவதிப்படு கிறார்கள். அம்மக்களுக்கான நிவாரண உதவிப்பொருட் களை கொண்டு சென்ற நிவாரணக் கப்பல் தொடரணி இஸ்ரேலிய அதிரடிப்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் 'மவி மர்மரா' கப்பலில் பயணம் செய்த 9 மனிதாபிமான உதவியாளர்கள் கொல்லப்பட்டார்கள். 20 க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். தாக்குதலுக்கு உள்ளான இந்தக் கப்பல்கள் இஸ்ரேலிய துறை முகமான ஆஸ்டொட்டுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து இஸ்ரேலின் பல இடங்களிலும், சுமார் 600 பாலஸ்தீன ஆதரவுச் செயற்பாட்டாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தத்தாக்குதல் சர்வதேச கடற்பரப்பில் வைத்து நிகழ்த்தப்பட்டிருக்கிறது. உலக நாடுகளும் ஐ.நாவும் கண்டனம் தெரிவிப்பதோடு நிறுத்திக்கொண்டன. ஐ.நாவின் பாதுகாப்புச் சபை பல மணி நேரம் விவாதித்து வெளியிட்ட தீர்மானம் "காசாவை நோக்கி சென்று கொண்டிருந்த கப்பல்களின் தொடரணி மீது சர்வதேச கடற்பரப்பில் வைத்து இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பலவந்தம் காரணமாக உயிரிழந்தவர்கள் குறித்தும், காயமடைந்தவர்கள் குறித்தும் பாதுகாப்புச் சபை தனது ஆழமான கவலைகளை வெளியிடுகின்றது" என்ற வரிகளோடு அடங்கிப்போனது.

இந்தத் தாக்குதல் குறித்துக் கருத்துத் தெரிவித்த பிரித்தானியாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் 'இந்த இராணுவத் தாக்குதல் முழுமையான வெற்றியைப் பெறவில்லை' என்று பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார். அதே வேளை இந்தத் தாக்குதல் குறித்து ஐ.நா விசாரணைகள் நடத்துவதற்கு அமெரிக்கா விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை தமிழ்ப் பத்திரிகைகள் எப்படி மக்களுக்குச் சொன்னார்கள் என்பது இங்கே முக்கியமானது. இரண்டு பிரதான தமிழ் நாளேடுகளும் இந்தக் கொலைச் செயலை பின்வருமாறு எழுதின. "*துருக்கி நாட்டைச் சேர்ந்த சில சரக்கு கப்பல்கள் காசா பகுதி மக்களுக்கு நிவாரண பொருட்களை. ஏற்றிச் சென்றன. அந்த கப்பல்களை தடுத்து நிறுத்திய இஸ்ரேல் கடற்படை. தங்கள் துறைமுகத்துக்கு வந்து பொருட்களை இறக்கி சோதனை செய்யம்படி கூறியது. இதற்கு துருக்கி கப்பல் அதிகாரிகள் மறுப்பு தெரிவித்து, காசா பகுதியை நோக்கி தங்கள் பயணத்தை தொடங்கினர். இதனால் இஸ்ரேல் கமாண்டோக்கள் ஹெலிகாப்டர் மூலம் துருக்கி சரக்கு கப்பலில் தரையிறங்கினர். இதையடுத்து அந்த கப்பலில் இருந்தவர்கள். இஸ்ரேல் கமாண்டோக்களை இரும்பு தடியால் தாக்கியதாக கூறப்படுகிறது*". ஒருவகையில் இஸ்ரேலிய அரசின் ஏஜென்டுகள் போலவே தமிழ் நாளேடுகள் செயற்பட்டன. இது மிகவும் ஆபத்தானது.

இன்று இஸ்ரேலின் கொடுமையைக் கண்டிக்கவும் இஸ்ரே லைத் தனிமைப்படுத்தவும் மூன்றாம் உலக நாடுகளி லிருந்தும் விடுதலை போராட்ட அமைப்புகளில் இருந்தும் மக்கள் இயக்கங்களில் இருந்தும் உரத்த குரல்கள் எழவே ண்டும், அவை இஸ்ரேலின் எசமானனும் அடக்குமுறை ஆட்சிகள் பலவற்றின் ஆதரவுச் சக்தியாகவும் உள்ள அமெரிக்காவையும் தாக்கும், அக்குரல்கள் சகல ஒடுக்கு முறைக்கும் எதிரான குரலாகவும் இருக்கும். அதை விடுத்து இஸ்ரேல் போன்ற ஒரு நாடு பற்றிய கனவில் மூழ்கி இருப்பதும் அக கனவை வெற்று நம்பிக்கையாக வளர்ப்ப தும் மக்களுக்கு இழைக்கின்ற துரோகமாகும். இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்க்கத் தவறுபவர்கள் உலகில் நடக்கிற எந்தக் கொடுமையையும் ஆதரிக்கக் கூடியவர்கள் என்பதை நாம் மறக்கலாகாது. உள்ளபடி சொல்ல தென்றால், மனசாட்சியையும்,நீதியையும் கொன்றவர்களால் தான் இஸ்ரேலுக்கு ஆதரவாக பேசவோ, எழுதவோ முடியும். எந்தத் தமிழ்த் தலைமையாவது இதுவரை அமெரிக்காவினதும் பிற நாடுகளதும் கொடுமைகட்குட் பட்ட நாடுகட்கு ஆதரவாக இல்லாவிடினும் அனுதாபமாகவாவது குரல் கொடுத்ததுண்டா? இன்னமும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பின்னால் அலைகிற போக்கல்லவா தொடர்கிறது. அண்மைய இஸ்ரேலிய வெறித்தனம் உட்பட இஸ்ரேலின் வெறித்தனத்திற்கு எதிராக எவ்வொரு தமிழ்த் தலைமையும் குரல் கொடுத்து கிடையாது. நாம் என்றுமே நட்பை நாடாதவர்களிடம் நிபந்தனையற்ற ஆதரவைக் கோருகிறோம். நம் ஆதரவை வலிந்து வழங்கினோரின் துரோகங்களை மட்டுமன்றிக் கொலை பாதகங்களையும் மன்னித்து விடுகிறோம்.

பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் அரபு மக்களின் விடுதலையின் முக்கியமான ஒரு குறியீடாக உள்ளது. பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் உலகின் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகிற ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான பிரதான சவாலாகவும் இருக்கிறது. ஆனால், அதை அரபு மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் மட்டுமே உரியதாகக் கொள்ளக் கூடாது. ஏனெனில், அது உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்திய ஒடுக்கு முறை, தேசிய ஒடுக்குமுறை, இனவாதம், ஃபாஸிஸ அடக்குமுறை போன்ற பல வேறு கொடுமைகட்கும் எதிரான போரா ட்டங்களின் பொதுவான குறியீடாகும்.

மதவாத, பயங்கரவாத வன்முறை எப்பொழுதும் இல்லாத அளவுக்கு தலை தூக்கியுள்ளது. வன்மங்களின் வழியே தகவமைவு பெற்ற சமூக மனம், மிகுந்த அமைதியுடன் கலவரங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது. பாடநூல்களின் மூலம் கூட குழந்தைகளின் மனங்களில் வன்மம் திணிக்கப்படு கின்றன. இப்படிப்பட்ட சீரழிந்த சமூகமாக இஸ்ரேலிய சமூகம் மாறியிருக்கிறது. அந்தளவுக்குக் கடுமையான ஒரு பொலிஸ் இராச்சியமாக இஸ்ரேல் உள்ளது. அதன் கடுமை அரபுக் குடிமக்கள் மீது செறிவாகப் பிரயோகிக்கப்படுகிறது. இஸ்ரேலின் பாதுகாப் புக்காக என்றும் யூதர்களின் பாதுகாப்புக்காக என் றும் அவர்கள் மீது திணிக்கப்படுகிற அட க்கு முறையைப் பெரும்பான்மை யூத இனம் சகித்துக் கொள்கிறது. இல்லை, ஏற்றுக் கொள்கிறது. இது கவனிக்கத்தக் கது. இது வன்முறையையும் ஃபாஸிசத் தையும் பொறுமையோடு ஏற்றுக்கொள் கின்ற சமூகங்கள் அனைத்துக்கும் பொரு ந்தும். எல்லா விதமான ஒடுக்குமுறை இய ந்திரங்களும் ஏறத்தாழ ஒரேவிதமான தர் க்கத்தின் வழியேதான் செயற்படுகின்றன. எனவே அநியாயங்களுக்கு எதிராகப் போராட மறுக்கின்ற சமூகம் அதற்கான பலன்களை தானே அனுபவிக்க நேருகி றது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பேரில் எவர் மீதும் பயங்கரவாதி என்று முத்திரை குத்திய பின்பு அவரு க்கெதிரான எந்தக் கொடுமையையும் நியாயப்படுத்தலாம். அதேவேளை, தற் காப்புக்காகவோ தாங்க இயலாமையாலோ எடுக்கப்படுகிற ஒரு எதிர்ப்பு நடவடிக்கை கடுமையான விமர்சனத்




துக்கு உட்ப டுத்தப்படுகிறது. கொடுமைகளை ஒப்பிடும் போது அவற்றின் அளவும் அவை நிகழ்ந்த சூழலும் அரச பயங்கரவாதத்திற்குச் சாதக மாகவே கணிப்பிடப்படுகிறது. எளிமையான ஆக்கபூர்வமான தீர்வான சமூக நீதிக்குப் பதிலாக பயங்கரவாத ஒழிப்பு என்கிற அழிவுமிக்க சிக்கலான தீர்வு நாடப்படுகிறது. சமூக நீதிக்காகப் போராடு கின்றவர்கள் இருக்கிற சமூக அமைப்பின் சட்டங்கட்கு உட்பட்டு வெல்லக் கூடியவை எவை என்பது பற்றித் தெளிவாக இருக்க வேண்டும்.

இந்த இடத்தில் சர்வதேச சமூகம், ஐ.நா என்பன பற்றிய மாயைகளில் மூள்கி இருக்கிறார்கள். அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி மெக்சிக்கோ ஆகியவை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்றை நிறைவேற்ற முனைந்த போது இலங்கை அரசாங்கம் அதைத் தவிர்க்கும் விதமாகக் கொண்டுவந்த தீர்மானத்தைக் கியூபா ஆதரித்தது. எனவே கியூபா தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது என்று சொல்லப்பட்டதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். மேற்குலகு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற நினைத்தது தமிழ் மக்கள் மீதான அக்கறையாலோ மனித உரிமை மீறல்களை தட்டிக் கேட்கவோ அல்ல. மாறாக இலங்கை அரசைத் தனக்குப் பணிவான அரசாக மாற்றவே என்பதை பலர் வசதியாக மறந்துவிடுகிறார்கள். இன்னுமொன்று ஐ.நா.வோ எந்த மேற்கு நாடுமோ உண்மையிலேயே விரும்பியிருந்தால் இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணைகளைத் தொடக்கியிருக்கலாம். அவர்களது நோக்கம் அதுவல்ல. எண்ணிலடங்கா மனித உரிமை மீறல்களை உலகமெங்கும் செய்யும் ஒரு நாடாகவும் சர்வதேச சட்டங்களை துளியும் மதிக்காத நாடான அமெரிக்கா எவ்வாறு இன்னொரு நாட்டுக்கெதிராக மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளை முன்வைக்க முடியும். எனவே நாம் நமது நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

அஸ்வத்தாமா

## உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

# வன்முறையும் அகிம்சையும் யார் யாருக்கு

எல்லோரும் 'அகிம்சை' பற்றிப் பேசுகிறார்கள். 9/11க்கு பின்னைய உலக ஒழுங்கில் வேண்டப்படுகின்ற, போதிக்கப்படுகின்ற ஒன்றாக அகிம்சை விளங்குகிறது. அகிம்சையை ஒரு ஆயுதமாகப் பாவிக்கவேண்டும் என்றும் அதுதான் உலகில் மிகவும் வலுவான ஆயுதம் என்று ஒபாமா முதல்கொண்டு தலாய்லாமா தொட்டு நித்தியானந்தா சுவாமி வரை எல்லோரும் பேசுகிறார்கள். அமைதி தவழும் இடமாக உலகம் மாறி வருவதை காணக்கூடியதாக இருப்பதாக ஐ.நா சொல்லுகிறது. இவர்கள் சொல்லுகிற அமைதி எதுவென்பதுதான் எனக்கு விளங்கவில்லை. ஒருவேளை தனது பழங்குடி மக்களுக்கு எதிராக 'காட்டு வேட்டை' என்ற பெயரில் அப்பாவிகளை இந்திய அரசு கொன்றுகுவிப்பதையோ, இஸ்ரேலின் சியோனிச சண்டித்தனத்தையோ, ஈராக்கிலும், ஆப்கானிஸ்தனிலும் இன்னும் பல இடங்களிலும் அமெரிக்கா கொன்றுகுவிப்பதையோ குறிக்கிறதோ தெரியாது.

மூன்றாமுலகம் மேலும் மேலும் சுரண்டப்பட வறுமை மக்களை வாட்டுகிற நிலையில் மூன்றாமுலகநாடுகளில் வன்முறை பெருகிவரும் அறிகுறிகளைப் புரிந்துகொள்ள நீங்கள் மேதையாக இருக்கவேண்டியதில்லை. நடுத்தரவர்க்கம் தடாலடியான நுகர்வுக் கலாச்சாரத்திலும் மூர்க்கத்தனமான பேராசையிலும் ஊறி வளர்ந்திருக்கிறது. உலகமயமாக்கலின் உச்சத்தை மூன்றாமுலகம் எட்டிக்கொண்டிருப்பதால் இவை எதிர்பார்க்கப்படவேண்டியவையே. நம்மை நாமே மறுகாலனியாக்கம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். தொழில்மயமான மேற்கத்திய நாடுகளுக்கு தேவையான வளத்தைச் சேகரிக்கவும் அடிமைப் பணியாளர்களைத் திரட்டவும் நம்மை நாமே காலனியமயமாக்கிக்கொள்ள நேர்ந்திருக்கிறது. நமக்குக் கீழே உள்ளவர்களைச் சுரண்டவேண்டியிருக்கிறது. இது நேரடியாக அல்லாமல் மறைமுகமாக "தேசப்பற்று" என்ற லேபலுடன் சந்தைக்கு விடப்படுகிறது. இன்றைய மூன்றாமுலக சந்தையின் முக்கியமான மூலப்பொருளாக "தேசப்பற்று" மாற்றப்பட்டிருக்கிறது. இதன் பெயரால் உருவாகும் பேராசையை, வலுவற்றவர்களின் நிலத்தையும் நீரையும் பிற ஆதாரங்களையும் ஆக்கிரமித்துத்தான் தீர்த்துக்கொள்ள முடிகிறது. அரசுகள் தங்கள் அதிகாரக் கொடுங்கரங்களைக் கொண்டு சுரண்டலைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

வன்முறைசாரா இயக்கங்கள் பல ஆண்டுகளாக எல்லா ஜனநாயக நிறுவனங்களின் கதவுகளையும் தட்டிக்கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் அவை வெறுப்புடன் நிராகரிக்கப்படுகின்றன அவமானப்படுத்தப்படுகின்றன. ஆனால் அகிம்சை பற்றி மட்டும் தொடர்ந்து பேசப்படுகிறது. மக்கள் கட்டாயம் தங்கள் போராட்ட உத்திகளை மாற்றிக்கொள்ளவே விரும்புவார்கள். அது தவிர்க்கவியலாதது. மக்களின் கைகளில் வேறு தெரிவுகளுக்கு இடமே இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. அகிம்சையைப் போதிப்போர் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் விலக்கி வைத்துவிட்டு, உடனடியான நிகழ்வுகளின் மீதும் நிகழ்காலத்தின் மீதும் மட்டுமே அது கவனத்தைக் குவிக்க முனைகிறார்கள். இது பிழையானது மட்டுமல்ல மோசடியானதும் கூட. தகவல் தொடர்பு, சந்தை ஆகிய இரு புதிய சூத்திரங்களால் அடையாளப்படுத்தப்படும் ஒரு யுகத்தில், ''நவீனமாக இருப்பது'' என்பது ''தகவமைத்துக் கொள்வது அல்லது அடிபணிந்துவிடுவது'' என்ற ஒற்றை விதிக்கு கீழ்ப்படிவதேயாகும் என இவர்கள் சொல்கிறார்கள். இன்றைய உலகப் பொருளாதாரத்தில், வெகுசன ஊடக நிறுவனங்கள்தான் மிகப் பெரிய நிறுவனங்களாக இருக்கின்றன. சமூகம் எப்படி இருக்கிறது என்பதை அல்லாமல், எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்ற மிகப் பெரிய கண்ணாடியை இவை வைத்திருக்கின்றன. தகவல் பு(தி)ரட்டும் பல்தேசியக் கம்பெனிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன ஊடகம் ஆதிக்கம் செலுத்தும் இந்த யுகத்தில் அகிம்சை வழியான போராட்டம் சாத்தியமா?

இந்த இடத்தில் தான் ஃபாஸிசம், எவ்வாறு புதிய வடிவங்களில் இயங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அறிவின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது, மாற்றுக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாமலிருப்பது, பண்பாட்டின் மீதான அவநம்பிக்கை, வேறுபாட்டின் மீதான அச்சம், இனவெறி, தொலைக்காட்சி மயமாக்கப்பட்ட வெகுசனக் கவர்ச்சி அரசியல் என்பன இன்றைய சமூகங்களில் வியாபித்திருக்கும் தன்மைகளாகும். இவை ஃபாசிசத்தின் புதிய வடிவங்களே.

நாம் இப்போது வேறு யுகத்தில், முற்றிலும் வேறு சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வேறு மாதிரியான, மேலும் சிக்கலான எதிரிகளை எதிர்கொண்டிருக்கிறோம். நாம் என்.ஜி.ஓ. யுகத்தில் பிரவேசித்திருக்கிறோம். இதில் மக்கள் செயல்பாடு என்பது நம்பத்தகாத ஒன்றாக இருக்கக்கூடும். போராட்டங்கள் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. மறியல்களும் சமூக அமைப்புகளும் அனுசரனையுடன் நடக்கின்றன. இவை ஆக்ரோஷமாகக் குரல் கொடுக்கின்றன. ஆனால் இதன் பின்னால் உள் நோக்கங்கள் நிறைந்திருக்கின்றன. இவை மக்களின் இயல்பான எழுச்சியை சிதறடிக்கின்றன, திசைமாற்றுகின்றன. குறிப்பாக தமது நிகழ்ச்சிநிரலுக்கு மக்களைச் செயல்படவைக்கின்றன.

ஆயுதப் போராட்டம் ஒரு உத்தியாக மாறும் அந்த நொடியில் எல்லாமே மாறிவிடுகிறது. மற்ற எல்லா வழிகளும் வேதனையிலும், பெரும் இழப்புக்களிலும் முடிந்ததால் மக்கள் என்ன செய்ய முடியும் அப்படி ஒரு முடிவை அவர்கள் மேற்கொண்டால் அதை தவறு என்று கண்டிக்கமுடியுமா. நாம் என்ன ஆயுதத்தைப் பாவிப்பது என்பதை எதிரிதானே தீர்மானிக்கிறான். எனவே சமூக மனங்களில் படிந்துள்ள பல தவறான கற்பிதங்களை அகற்றியாக வேண்டும். 'அகிம்சை' பற்றிப் பேசுபவர்களிடம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியிருக்கிறது. அவர்களின் நோக்கங்கள் மிகவும் ஆபத்தானவை.

# பேராசிரியர் அரை மார்க்குடன் ஒரு செவ்வி

சிறி லங்கா என்று அழைக்கப்படும் சிறிய தீவுக்குத் தன் திக் விஜயத்தை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பியுள்ள முன்பின்னவீனத்துவ மேதையும் தலிந்தியத் தகிடுதத்த நிபுணரும் கும்கும் குப்பை இலக்கிய வணிக நிறுவனத்தின் செல்லப்பிள்ளையுமான பேராசிரியர் அரைமா ர்க் அவர்களை "தீதானது" சஞ்சிகையின் சார்பில் பேராசிரியர் டபிளவன் செவ்வி கண்டார்.

டபிள் : பேராசிரியர் அரை மார்க் அவர்களே இலங்கை அரசாங்கச் செலவில் இலங்கைக்குப் போய் உங்கள் பயணத்தை முடித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். என்று சொல்லப்படுகிறதே.

அரை: நேரடியாக சிலோன் அரசாங்கம் எனக்குப் பணம் எதுவும் தரவில்லை...

டபிள்: (இடைமறித்து) கருணாநிதி அரசாங்கத்தின் செலவில் பேராசிரியர் சிவத்தம்பி வந்து போகலாமென்றால் நீங்கள் ராஜபக்சே அரசாங்கத்தின் செலவில் போய் வருவதில் பிழையில்லை ஆனாலும் ஏன் கேட்டேன் என்றால் இதுவரை என்னால் முடியவில்லையே. உங்களால் எப்படி முடிகிறது?

அரை: அதுதான் தலித்திய பின்னவீனத்துவ சூட்சுமம். சிலோன் அரசாங்கத்திடம் புலி எதிர்ப்பு பிரசாரப் பணம் ஏகமாகத் தேங்கிக் கிடக்கிறதே. தெரியாதா? எஸ்.வி.ஆர், ஆதவன் தீட்சண்யா போலப்பல அறிஞர்களும் பயன் பெற்றிருக்கிறார்களே.

டபிள்: கருணாநிதி, ஜெயாநிதி, தீராநிதி ஆகியன வற்றுகிற வேளை லங்காநிதி பற்றி நானும் யோசிக்கலாம் சரி, இலங்கையில் நிறையப் பேராசிரியர்களைச் சந்தித்தீர்கள் போலத் தெரிகிறதே.

அரை: எனக்குச் சினேகிதமான பேராசிரியர் யாருமே சிலோனில் இல்லை. அதனால் பலபேரும் புறக்கணித்த என்னை அழைத்து வரவேற்று வழித்துணையாக வந்த எல்லாரையும் பேராசிரியர் என்று தான் சொன்னேன். அவர்கள் செய்த உதவிகட்குப் பிரதியாக நான் செய்யக் கூடிய சின்ன உதவி அது. பிரைவேட் டியூஷன் வாத்தியாருக்குக் கூட பேராசிரியர் என்று போட்டுக் கொள்ளத்தான் பிடிக்கும். தெரியாதா?

டபிள்: தலித் தமிழீழம் என்று சிலரால் ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறதே. அதைப்பற்றி விசாரித்தீர்களா?

அரை: புலிகளுக்குப் பயந்து அங்கே யாருமே தலித்தியம் பற்றிப் பேசுவதில்லை.

டபிள்: புலிகள் ஒழிக்கப்பட்ட பின்பும் கூடவா?

அரை: புலிகள் ஒழிந்துவிட்டார்கள் என்றாலும் பேப்பர் புலிகள் இன்னமும் பலமாகத் தான் இருக்கிறார்கள்.

டபிள்: தினக்குரல் பத்திரிகையைச் சொல்லுகிறீர்களா?

அரை: ஆமாம் தினக்குரல் ஆசிரியருடன் பேசினேன். அப்போது தெரியாது. திரும்பி வந்து என்னுடைய கட்டுரைத் தொடர் தொடங்கிய பிறகுதான் என் ஐரோப்பாச் சீடர் சொன்னார் அது ஒரு தீவிர புலி ஆதரவு ஏடென்று. எவ்வளவு ஆபத்தான ஒரு பேர்வழியுடன் பேசிவிட்டுத் திரும்பினேன் என்று நினைக்கவே நடுங்கிறது.

டபிள்: எம்.சி. சுப்பிரமணியம் என்கிற மறைந்த தலித் தலைவருடைய மருமகன் ரவீந்திரன் உங்களுடைய நண்பர் என்று சொல்லியிருக்கிறீர்கள். தமிழ் நாட்டில் கூட ரவீந்திரனைத் தெரிந்தவர்கள் அவருடைய மாமனார் கே.ஏ. சுப்பிரமணியம் என்கிற மா.லெ. புதிய ஜனநாயக கட்சியின் மறைந்த தலைவர் என்று மறுத்திருக்கிறார்களாமே.

அரை: ரவீந்திரன் கூட எம்.சி. அல்ல கே.ஏ. என்று தான் சொல்லியிருக்கிறார். பின்னவீனத்துவ முறைப்படி கட்டுடைத்து மீள்கட்டமைத்துப் பார்த்தால் கே.ஏ என்பது எம்.சி என்றும் எம்.சி என்பது கே.ஏ என்றும் மாறி வரலாம். நீங்களே இப்படியெல்லாம் மீள் கட்டமைத்துப் புகழ் பெற்றவர் தானே.

டபிள்: நீங்கள் வேண்டுமென்றே தான் மாற்றிச் சொல்கிறீர்கள் என்கிறார்களே. நல்ல காரணமில்லாமல் நம் போன்றவர்கள் எதையுமே இப்படிக் கட்டவிழ்க்க மாட்டோம் அல்லவா?

அரை :சொல்லுகிறேன் எழுத மாட்டீர்கள் என்ற நிபந்தனையுடன். இந்தக் கே.ஏ.சுப்பிரமணியத்தின் புதிய ஜனநாயக கட்சிக்காரர்களால் தான் சிலோனில் பின்னவீனத்துவமும் தலித்தியமும் தலை தூக்கவே முடியவில்லை. ரவீந்திரன் எனக்கு நண்பர். அவருடைய மாமனார் எப்படி எனக்கு எதிரியாகலாம்? என்னுடைய பாரிஸ் தோழர் சோபா செற்றீ என்னிடம் எப்போதும் எம்.சி. பற்றித்தான் பேசுவார்...

டபிள்: அது யார் சோபா செற்றி? லீனா மணிமேகலையுடன்....

அரை :அவருடன் சேர்த்து சினிமா தொழிலாளர்களை அவர் அடித்தால் அந்தப் பேர் நாறிப் போயிருக்கிறது. அதனால் அதையும் கொஞ்சம் கட்டுடைத்து...

டபிள்: இப்போது உங்களுக்கு மறுபடியும் மார்க்சியம் பிடிக்குமாமே!

அரை :உங்களுக்குத் தெரியும், எனக்கும் தெரியும். இப்போது தமிழ் நாட்டில் பின்னவீனத்துவத்துக்கும் நாம் பேசுகிற தலித்தியத்துக்கும் மவுசு அதிகம் இல்லை. இப்போ நேபாள மாவோவிஸ்ட்டுகளுக்கு நல்ல கிராக்கி. எனவே பின்னவீனத்துவத்துக்கு சிவப்பு பெயின்ட் பூசவேண்டியுள்ளது.

டபிள்: பேராசிரியர் நு.்.மான் உங்களைப் பாராட்டிப் பேசவில்லையாமே. ஆனால் நீங்கள் பாராட்டினார் என்கிற விதமாகச் சொன்னீர்களாமே?

அரை :இது தவறான கட்டவிழ்ப்பு. அவர் என்னைத் திட்டவில்லை. அதைச் சரியாக கட்டவிழ்த்தால் பாராட்டினது போல....

டபிள்: இலங்கையில் சாதி எதிர்ப்புப் போராட்டம் பற்றி தகவல்களை ஒழிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே?

அரை :(கோபமாக) அதெப்படிச் சொல்ல முடியும்? என்னுடைய பாரிஸ் சீடப்பிள்ளை சிலோன் பற்றிச் சொல்லாத எதையுமே நான் நம்புவதில்லை. அதைவிட என்னால் ஒழித்துக்கட்ட இயலாத சாதியத்தை சிலோன் மா-லெக் காரர்கள் எப்படிச் செய்திருக்க முடியும்?

டபிள்: ஆமாம். சிலோன் தமிழர்கள் திமிர் பிடித்தவர்கள். என்னையெல்லாம் கூட ஒரு பொருட்டாக எடுக்காதவர்களைப் பற்றி நாம் ஏன் பேச வேண்டும்? அப்போ இலங்கையில் சாதியம் அன்றுபோல இன்றும் அப்படியே இருக்கிறது என்கிறீர்கள்!

அரை :நான் சொல்லவில்லை. பாரிஸில் இருக்கிற, சுவிசில் இருக்கிற....

டபிள்: அவர்கள் எல்லாரும் இலங்கை அரசாங்கத்திடம் கூலிக்கு வேலை செய்கிற...

அரை : அதையெல்லாம் நான் கண்டு கொள்ள மாட்டேன். நீங்களும் கண்டு கொள்ளக் கூடாது. ஏனென்றால் கட்டுடைத்துப் பார்த்தால் இந்திய கவர்ண்மெண்ட் பணம் அதாவது நமது பணம் தான் சிலோன் கவர்ண்மெண்ட் மூலம் அவர்களைச் சென்றடைகிறது.

டபிள்: இலங்கையில் இப்போது சிந்தனையாளர்களே கிடையாது என்று சொன்னீர்களாமே.

அரை: இல்லை. யாரும் சிந்திப்பதில்லை என்று தான் சொன்னேன். என்னுடைய பெட்டி தூக்கின அறிஞர்கள் போல சிலரைவிட....

டபிள்: மனிதர்களின் பேர்கள், ஊர்களின் பேர்களை எல்லாம் மாற்றி எழுதுகிறீர்கள் என்று சொல்கிறார்களே!

அரை: பின்னவீனத்துவ முறையில் எல்லாப் பேர்களையும் கட்டவிழ்த்துப் பழகிவிட்டதால் அப்படி நடக்கிறது. அதைவிட யாருக்கு அந்த விபரமெல்லாம் தேவை?

டபிள்: எனக்குத் தாகமாக இருக்கிறது.

அரை: எனக்கும் தான். அருகிலேயே ஒரு தண்ணித் தொட்டி உள்ளது. போவோமா? (போகிறார்கள்)

*(கொஞ்சூண்டு கற்பனை)*

நமது விசேட நிருபர்

---

# மலையக மண்ணில் ஒரு கலைத்துவ முயற்சி

*"இன்னும் ஏன் இப்படி"*

*"தணலும் தண்ணீரும்"*

*விவரண, குறுந்திரைப்படங்களின் காட்சியும் திறந்த விமர்சன அரங்கும்.*

பதிவு - ராஜன்

அண்மையில் வித்தியாசமான கனதியான நிகழ்வொன்றில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. 22.05.2010 அன்று காலை 9.30 மணிக்கு ஹட்டன் நகரசபை மண்டபத்தில், திரு. திருமதி. கிங்ஸ்லி தம்பதியினரின் உழைப்பில் உருவான "இன்னும் ஏன் இப்படி?" எனும் விவரணச் சித்திரத்தையும் "தணலும் தண்ணீரும்" எனும் குறுந்திரைப்படத்தையும் பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. இவ்விரு படைப்புகளின் வெளியீடும், சிறப்புப் பிரதி வழங்கல் என்ற ஒழுங்கில் தேசியகலை இலக்கிய பேரவை யின் ஆதரவுடன் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வில் கலந்து கொண்ட சாதாரண பார்வையாளன் என்ற வகையில் எனது கருத்தை முன்வைக்கின்றேன்.

மலையகத்தில் இருந்து திரைப்பட, தொலைக்காட்சி நாடக முயற்சிகள் இடம் பெற்றிருந்தாலும் அவை கருத்தியல் ரீதியாக மிகப் பலவீனமானவை எனச் சொல்லலாம். அந்த வகையில் இப் படைப்புகள் கருத்தியல் ரீதியாக மிக உயர்ந்த இடத்தில் இருப்பது கவனிக்கத் தக்கதாகும். மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களது பண்பாடு, அரசியல், பொருளாதார வாழ்வியல் நிகழ்வுகளை மிக இயல்பாய் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதாக உள்ளது. மலையகச் சூழலில் குறுந்திரைப்பட, விவரண தொகுப்புகள் போன்றவற்றை பார்த்தல் மிகக் குறைவாகும். கலை இலக்கிய ஆர்வம் உள்ளவர் அதன் அவசியம் கருதி தேடிப்பார்த்தாலொழிய இப்படைப்புகளின் அவசியம் உணரப்படவில்லை. எனவே இவை பற்றிய பொதுக் கலந்துரையாடலொன்று இதுவரை எம்மிடையே இருந்ததில்லை. திரைப்படங்கள் என நினைத்துக் கொண்டு நாம் பார்த்துக் களிக்கும் இந்தியக் "கோலிவுட்" குப்பைகள் ஆதிக்க சக்திகளின் கருத்தியலை முன்னெடுக்கும் கலைப்படைப்புகளாகும்.

20ம் நூற்றாண்டின் மிகப் பெரியதொரு அறிவியல் சாதனை சினிமா என்பது மறுப்பதற்கில்லை. மக்கள் பற்றி சினிமா பேசவேயில்லை எனவும் சொல்ல முடியாது. எனினும் அது பேசும் சீரழிவுக் கருத்தியலோடு ஒப்பிட்டால் அது கடலுக்கும் குட்டைக்குமான வித்தியாசமாகும். வர்க்கங்களாக பிளவுண்ட வரலாற்றுக் காலகட்டங்கள் அனைத்திலும் ஆதிக்கச் சக்திகள் பண்பாடு அரசியல் பொருளாதார கலை இலக்கியத் தளங்களில் தமது பிடியை இறுக்கமாக வைத்திருந்தது போலவே, அதன் தொடர்ச்சியாக தமது நிலைப்பை நியாயப்படுத்த சினிமாவையும் அவை பயன்படுத்துகின்றன.

மக்களின் வரலாற்று சாதனைகளை தனக்குரியதாக ஆக்கிக் கொண்ட சொத்துடைய வர்க்கங்களை அடித்து விரட்ட அழிக்க மக்கள் தமது உரிமைப் போராட்டத்தினை மிக உக்கிரமாக முன்னெடுக்க வேண்டிய சூழலில் உள்ளனர். இங்கே தான் மக்கள் சார்பான படைப்புகளின் அவசியம் எழுகிறது. அந்தளவில் இப்படைப்புகள் தமது பணியை காத்திரமாகவே புரிகின்றன.

"தணலும் தண்ணீரும்" எனும் ஒரு நிமிடப்படம் (நிமிடம் என சொல்லப்பட்டாலும் 2 நிமிடங்களுக்குச் சற்று கூடுதலாக உள்ளது) புகைப்பிடிக்கும் ஒருவர் புல்மலையைப் பற்றவைத்துச் செல்லப் பின்னால் வரும் பாடசாலை மாணவர்கள் அதை அணைத்துவிட்டுச் சந்தோஷமாக சிரித்தபடி வீடு செல்கிறார்கள். இன்று சூழலியல் பிரச்சினைகள் மிகப் பிரமாண்டமாய் உருவெடுத்து எம்மை அச்சுறுத்துகின்றன. மனிதன் நிறுத்தி நிதானித்து பயணிக்க வேண்டிய தருணம் இது. இவ் வேளை, ஏங்கல்லின் கூற்று நினைவுக்கு வருகிறது. "இயற்கையின் மீது நமது மானுட வெற்றிகளை வைத்துக் கொண்டு நம்மை நாம் அளவு கடந்து தற்புகழ்ச்சி செய்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட வெற்றி ஒவ்வொன்றுக்கும் இயற்கை நம்மைப் பழிவாங்குகிறது. ஒவ்வொரு வெற்றியும் முதலாவதாக நாம் எதிர்பார்க்காத, முற்றிலும் வேறுபட்ட பலன்களையும் அளிக்கிறது." (*மனிதக்குரங்கு மனிதனாக மாறியதில் உழைப்பின் பாத்திரம்*)

இயற்கையை அழிக்காது அதைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அதைக் கொடுக்க வேண்டியது இன்றைய, காலத்தில் வாழும் எமது பெருங் கடமையாகும். இப் படைப்பு மிகக் குறுகிய நேரத்தில் பெரியதொரு தகவலை எமக்குத் தருகிறது.

"இன்னும் ஏன் இப்படி?" எனும் 30 நிமிட விவரணச் சித்திரம், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்நிலைமைகளை -- லயன் குடியிருப்புகள், ஓட்டை கூரை, உடைந்த கக்கூசு, சிரிக்கும் முகங்களுடன் அரசியல் தலைவர்களின் போஸ்டர்களை தாங்கிய சுவர்கள், சுகாதார சீர்கேடுகள் எனப் பலவற்றை -- எந்தக் கலப்பும் இல்லாமல் வெகு இயல்பாய் காட்சியில் பதிவாக்கியுள்ளார் கிங்ஸ்லி. விவரணச் சித்திரம், "இன்னும் ஏன் இப்படி?" என்ற கேள்வியுடன் முடிகிறது. மலையகம் முன்னேறிவிட்டது என்று பீற்றித் திரிவோர் இவ்விவரணத்தை பார்ப்பது பொருந்தும். இப் படைப்புகள் பலவிதமான கருத்துகள் விமர்சனங்கள், அனுபவப் பகிர்வுகள் போன்றவற்றை ஓரிடத்தில் வெளிக்கொணர்ந்ததிலும் வெற்றி பெற்றது. அநேகமாக அடுத்த படைப்பு பற்றிய துவக்கத்தையும் நிகழ்வு தந்தது எனலாம். கிங்ஸ்லி தம்பதியினர் இந்த அனுபவங்களைக் கொண்டு இன்னும் பல படைப்புகளில் -- மக்கள் படைப்புகளில் -- தங்கள் பங்கை வலுவாகப் பதிவார்கள் என நினைக்கின்றேன்.

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

யூன் - யூலை 2010


# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



கருணாநிதி 600 கோடி செலவில் செம்மொழி மாநாடு நடாத்தினார். அதேகாலத்தில் தமிழகத்தின் நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் வழக்குகளை நடாத்தக் கோரி வழக்கறிஞர்கள் கோவை, மதுரை சென்னை நீதிமன்ற வளாகங்களில் உண்ணாவிரதம் இருந்தனர். அவர்களுக்கு மக்களும் ம.க.இ.க மற்றும் முற்போக்கு இயக்கங்களும் புரட்சிகர அமைப்புகளும் ஆதரவு தெரிவித்து செயற்பாடுகளில் இறங்கி இருந்தனர். வழக்கறிஞர்களை கருணாநிதியின் ஆணையின் கீழ் தமிழகப் பொலிசார் அடித்து காயப்படுத்தியதுடன் சிறைகளிலும் அடைத்தனர். தமிழே! செம்மொழியே! நீ யாருக்கு சேவை செய்கிறாய். தமிழக கோடிஸ்வரன் கருணாநிதியே செம்மொழி மாநாடு உனக்கு ஒரு கோடா.





இஸ்ரேலின் தாக்குதல்களுக்கும் முற்றுகைகளுக்கும் உள்ளான பாலஸ்தீனத்தின் காஸா பிரதேசத்திற்கு மனிதாபிமான உதவியாக உணவு ஏற்றிச் சென்ற கப்பல்கள் மீது இஸ்ரேலிய கடற்படையினர் மிருகத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். அதில் பத்து நிவாரணப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இஸ்ரேலின் கொடூரச் செயலை எதிர்த்து உலகெல்லாம் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றை கீழே உள்ள படத்தில் காணலாம்






யூன் மாதக் கடைசி வாரத்தில் கனடாவின் தலைநகர் ரொரின்டோவில் இடம் பெற்ற தொழில் வளர்ச்சியடைந்த G20 நாடுகளின் தலைவர்கள்நடாத்தியஉச்சி மாநாட்டை எதிர்த்து 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் அங்கு பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்குமிடையில் மோதல்களும் இடம் பெற்றன.










வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.